www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

மார்ச்.30—ஏப்.05,1997

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 198

# தேர்தல் முடிவுகளும் இரகசிய திட்டங்களும்

## புலிகளின் சூளுரை



காயத்ரி சுஜாதா

விஷமத்தனமும் விகார புத்தியும்

— ரோஜா சீற்றம்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## கற்பனை தவிர வேறில்லை

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

ஏப்ரல் மாதம் வருகிறது
அரசியல் தீர்வு, என்றனர்.
அந்த வாக்குறுதி
'ஏப்ரல் ஃபூல்' ஆகிவிட்டது!

இப்போது நவம்பர் வரை
காலவரையறை
நீட்டப்பட்டிருக்கிறது!

யாருக்காக இந்தக்
காத்திருப்பு?
எதற்காக இந்த
தொடர் பின்னடிப்பு?

எதிர்க்கட்சி
இனிமேல் ஒத்துழைக்காது!
ஆளும் தரப்பு,
எதிர்க்கட்சியைச் சாடுவதில்தான்
தன் அரசியலை நகர்த்தி வருகிறது!

ஐ.தே.கட்சியின்
17 வருடகால ஆட்சியை
தோண்டித் துருவிக் கொண்டிருப்பதே
ஆளும் தரப்பின்
அன்றாட நிகழ்ச்சித் திட்டம்!

வடக்கு-கிழக்கில்
யுத்தத்தை நடத்திக்கொண்டு
தெற்கில்
எதிர்க்கட்சிக்கு எதிராக
பிரசார யுத்தம் நடத்தியபடி
ஆளும் தரப்பு
காலத்தை நிரப்பிக் கொள்கிறது!

இந்த இரண்டு
வேலைத் திட்டங்களை விட்டால்
வேறெந்தப் புதிய சாதனைகளையும்
சொல்லிக் கொள்ள முடியவில்லை!

எந்தக் கேள்வியைத் தொடுத்தாலும்
பதில் சொல்ல
ஐ.தே.கட்சியின் 17 வருட
ஆட்சிக்காலத்தைத்தான்
ஆளும் தரப்பு துணைக்கழைக்கிறது!

நம் நாட்டின்
அரசியல் சூழ்நிலையானது
ஆளும் தரப்பையும், எதிர்த் தரப்பையும்
கைகுலுக்கி கருத்தொருமிப்புக்காண
ஒருபோதும் அனுமதிக்காது!

'அண்ணன் எப்போ சாவான்
திண்ணை எப்போ காலியாகும்?'
என்று காத்திருத்தலே
ஜனநாயக அரசியல் என்று
இங்கே அர்த்தமாகிவிட்டது!

அண்ணன் ஆயுள் நீடிக்கட்டும்
என்று தம்பி விரும்புவானா?
அண்ணன் ஆரோக்கியமாக இருந்தால்
திண்ணை எப்போ காலியாவது?

ஆளும் கட்சி
எரியும் பிரச்சனையை
அணைத்து முடித்துவிட்டால்
ஆரோக்கியமானதாகி விடுமே!
அதற்கு இடம் கொடுக்க
எதிர்க்கட்சி முன்வருமா?
திண்ணை காலியாகக் காத்திருக்கும்
தம்பிதானே எதிர்க்கட்சி?

ஐ.தே.கட்சி மட்டுமல்ல,
யார் எதிர்க்கட்சியாக
இருந்தாலும் சரி,
திண்ணை காலியாகக் காத்திருக்கும்
தம்பியாகவே இருந்து வந்துள்ளன!

தூங்குவது போல் நடிப்பவர்கள் தவிர
ஏனைய யாவருக்கும்
இந்த உண்மை புரியும்!

பின்னர் யாருக்காக
அரசாங்கம் காத்திருக்கிறது?

அரசியல் தீர்வு விடயத்தில்
மட்டும்தானே-அரசாங்கம்
எதிர்க்கட்சியின்
கருத்தறியக் காத்திருக்கிறது?

ஏனைய பிரச்சனைகள்
எதிலும் எதிர்க்கட்சியின் கருத்து
தேவையென்று தோன்றவில்லை!

சகல பிரச்சனைகளிலும்
எதிரிக்கட்சிகளாக இருந்துகொண்டு,
இனப்பிரச்சனையில் மட்டும்
நட்புக் கட்சிகளாக மாற முடியுமா?

குறைந்த பட்சம்
ஆளும் தரப்பும், எதிர்க்கட்சியும்
பரஸ்பரம் புன்னகைக்கக்கூடிய
சூழல் கூட
கெட்டுக் குட்டிச் சுவராகி வருவதையே
காணககூடியதாக இருக்கிறது!
அந்தளவுக்கு நாளும் பொழுதும்
இரு தரப்பும்
கீரியும் பாம்புமாகி வருகின்றன!

எனவே- கருத்தொருமிப்பு
என்பது அழகான கற்பனையே!
கால நீடிப்புக்களுக்கு
சொல்லப்படும் காரணங்கள்
நம்பிக்கை தருவதாக இல்லை!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## மரித்த இயேசு உயிர்த்தெழுந்தார்



"பயப்படாதிருங்கள்! சிலுவையில் அறையப் பட்ட நசரேனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிர்த்தெழுந்தார். அவர் இங்கேயில்லை. இதோ, அவரை வைத்த இடம்!"

(மாற்கு 16:6)

மரித்த ஒருவர் உயிரோடு எழுந்தார் என்பது மனித குலத்திற்கு ஒரு வியப்பான செய்தி. உலகத்தின் பாவங்களைச் சுமந்து, சிலுவையில் அறையப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதை அவரது சீடர்களில் ஒருவரான தோமாவுக்கே நம்புவதற்குக் கடினமாக இருந்தது.

இயேசுவின் பிறப்பு, பாடுகள், மரணம் யாவுமே தீர்க்கதரிசிகள் எழுதிவைத்த பிரகாரம் நடைபெற்று இருக்கின்றன. அவரது உயிர்த்தெழுதலும் அப்படியே நடைபெற்றுள்ளது.

"உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களோடு கூட இருக்கிறேன்," என்று சொன்ன ஆண்டவரின் வார்த்தைகளில் நம்பிக்கைவைத்து புதியதொரு எதிர்காலத்தை நோக்கி நாம் நடைபோடுவோம்.

ஜி. டானியல்.

## நோய் தீர்க்கும் 'சூரதுல் பாத்திஹா'

ஒரு மனிதர் ஷுஃபீ (ரஹ்) அவர்களிடம் வந்து தனக்கு ஈரல் வலிப்பதாக உள் உணர்வு ஏற்படுகிறது என்று கூறினார்.

அதற்கு ஷுஃபீ (ரஹ்) அவர்கள் "குர் ஆனுடைய அஸ்திவாரத்தை ஓதி வலிக்குமிடத்தில் ஊதுவீராக." என்று கூறினார்கள்.

"குர் ஆனுடைய அஸ்திவாரம் என்றால் என்ன?" என்று அம்மனிதர் கேட்டபோது, "சூரத்துல் பாத்திஹா." என பதிலளித்தார்கள்.

அண்ணல் நபியின் அருமைத் தோழர்கள் பேய், பிசாசு பிடித்த வர்களுக்கும், கொள்ளை நோய் உள்ளவர்களுக்கும் விஷஜெந்துக்கள் தீண்டியவர்களுக்கும் சூரத்துல் பாத்திஹாவை ஓதி ஊதி இருக்கிறார்கள். இதனை இறை தூதரும் ஆதமாக்கியுள்ளனர்.

சூரத்துல் பாத்திஹாவை நல்ல ஈமானுடனும், உறுதியுடனும் ஓதினால் அது அனைத்து நோய்களுக்கும் மருந்தாகிவிடும்.

எம்.சி. கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.195



### பரிசுக்குரிய கவிதை

### போரில்லா தேசம்

அகதிகள் நாம்
அகழ்ந்தெடுக்கப்
போகின்றோம்...!
போரில்லா தேசமொன்றை....
பூமிக்குள்ளே தேடுகின்றோம்!

டி. ஜோர்ஜ்- லபுகலை.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:**

### விடியலை நோக்கி....!

வீடில்லை வாசலில்லை
வேளைக்கு உணவுமில்லை;
பாடமில்லை படிப்பில்லை
பள்ளியெல்லாம் அகதிமுகாம்!
ஏட்டிலுள்ள சட்டமெல்லாம்
எமக்குதவ வரவுமில்லை;
கேட்க ஒரு நாதியில்லை
கேள்வி முறை எதுவுமில்லை
நாட்களை கடத்துகிறோம்
நாளைப்பொழுது தானும்
நல்லதாய் விடியுமென்று!

சி.மு. சுந்தரேசன்- அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

### சமாதானம்?

போர் என்னும் புதைகுழிக்குள்
புதையுண்ட தேசத்தை
சேதமின்றி அகழ்ந்தெடுக்க...
சமாதான கருவிகளை
செய்து தர யாருமுண்டோ....?

எஸ். மதன்ராஜ்- ஜோன்ஸ் வீதி, நுவரெலியா.

### உரிமைக் குரல்

வேட்டையாடு விளையாடு....
உடமைகளை இழக்காது
உயிர்களை அழிக்காது
உரிமைக் காகப் போராடு...
உனக்கும் ஒரு காலம் வரும்!

திருமதி ரமணி அன்பழகன்-
டாம் வீதி, கொழும்பு-12.

### எந்தப்பசி எமக்கு?

யுத்தப் பசிக்காய்
மிதி வெடி புதைக்கவில்லை;
வயிற்றுப் பசிக்காய்
நிலக்கிழங்கு தேடுகின்றோம்...!

கே. ஜெயகுமார்- சமூகசேவைகள்
திணைக்களம், திருகோணமலை.

### காலம்

காடு மேடு
காணியெல்லாம்-நல்ல
கன்றுகள் வைத்தோம்-இன்று
கண்ணி வெடிகள்....!

சுபா வரன்-கண்டி.

## கவிதைப் போட்டி இல.198



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 05.04.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.198
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

### ஏராளம்

கதிராக நெல் விளைந்த
மணியிலங்கை மண்ணிலின்று
கதிகலங்க உயிர் பறிக்கும்
பொறி வெடிகள் ஏராளம்!
பந்தடித்த பாலர் நாம்
பார்த்துவிட்டோம் அதிலொன்றை!

தர்ஷிகா கனகசிங்கம்- கல்லடி,
மட்டக்களப்பு.

### காத்திட நினைத்துத்தானோ...?

கண்டிட்ட புதியபொருள்
கரமெடுத்துக் காலனடி
சேர்ந்திட்ட செய்திபல
காதால் கேட்டிருந்தும்.
கண்ணால் பார்த்திருந்தும்,
கரம்தொட நீர் துணிந்தது மேன்?-பிறரை
காத்திட நினைத்துத்தானோ?

தேத்தாப்பளை- தாரணி.

### சமாதானம்

இங்கொரு
விருட்சம் நடுவோம்...!
நாளைய
சந்ததி
நன்மை பெறட்டும்!

மீராவோடை- தஸ்லிமா தஸ்ரீன்.

### ஒரே முத்திரை

வன்னி நிலப் பரப்பில்
கண்ணி வெடி புதைத்த
சின்னஞ் சிறு புலிகள்
சிக்கினராம் தேடுதலில்!

சதா கணபதி- அதிகாரவத்தை
உடபுஸ்ஸல்லாவ.



# வாசக(ர்) சாலை

### கலைஞர் கருணாநிதியின் மாற்றம்

இனிய முரசே:

அற்புதனின் அரசியல் தொடரில் கலைஞர் கருணாநிதியின் இன்றைய பேச்சுக்களோடு அன்றைய நிலைப்பாட்டை ஒப்பிட்டு, இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க வந்த அமைதிப்படை தமிழர்களை வதைத்து அழிக்கிறது என்று அப்போது கூறிய கலைஞர், இப்போ பாராமுகமாக இருப்பதை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அது மட்டுமன்றி இலங்கைத் தமிழர் பற்றி எஸ்.எம்.கார்மேகம் எழுதிய கண்ணோட்டத்தில் "ஈழத்தமிழர்- தி.மு.க.மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு தங்களுக்கு விடிவுகாலம் பிறக்கும். தங்கள் பாரம்பரிய மண்ணில் மானத்தோடும் மரியாதையோடும் சிங்கள மக்களுடன் சம உரிமையுடனும் வாழவே விரும்புகிறார்கள்" என்று சுட்டிக்காட்டியது தக்க கருத்து.

வி. ராஜேஸ்வரி, குமாரவேலியர் கிராமம், செங்கலடி.

-• • •-

டியர் முரசே!

"வேலைக்குச் சென்றாலும் வீட்டோடு இருந்தாலும் அதிகம் உழைப்பவள்" என்ற தலைப்பிலான ஷோபா டேயின் ஆக்கம் சிறப்பு. "பெண்கள் மாடாய் உழைத்தாலும் அவர்களுக்கு அமைதியோ, ஓய்வோ தேவையில்லை." என்று தொன்று தொட்டு நீடித்து நிலைத்து நிற்கும் இக் கோட்பாடு என்று தான் நீங்குமோ?

எழுத்தாளருக்கு என் மனமார்ந்த பாராட்டும் நன்றியும் உரித்தாகட்டும். "வெல் டன்" ஷோபா!

திருமதி திலகரத்தினம், அவிசாவளை.

-• • •-

அன்பின் முரசே!

இராஜகுமாரனின் தித்திக்கும் இராமாயணத்தை தொடர்ந்து படித்து வருகிறேன். அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் தீர்த்த புராணக்கதையை தக்க சமயத்தில் தந்தமைக்காக மிகவும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். முரசுக்கும், இராஜகுமாரனுக்கும் மனமார்ந்த பாராட்டுக்கள்.

தீபா பூபாலரெட்னம், மட்/ மகாஜன கல்லூரி.

-• • •-

### கனவு மெய்ப்பட வேண்டும்

இனிய முரசுக்கு!

சமுதாய நிகழ்வுகளின் பிரதிபலிப்பாக எழுதப்படும் இலக்கியப் படைப்புக்களே அவற்றை வாசிக்கும் வாசகர்களின் மனதை வென்றெடுக்கின்றன. அந்த வகையில் 'கனவு மெய்ப்பட வேண்டும்' புதிய தொடர் மனதை மிகையாக அழுத்திவிட்டது.

பெண்கள் தினம் கொண்டாடப்பட்ட வாரத்திலேயே இக் கதையின் முதலங்கத்தை மலரச்செய்து பெண்ணின் உணர்ச்சிகளைக் கௌரவிக்க முனைந்த முரசிற்கு முத்தான பாராட்டுக்கள்.

செல்வி ஜன்ஸி கபூர், அநுராதபுரம்.

### ஓ... அனிதா....!

'அனிதா இளம் மனைவி' சுஜாதாவின் அற்புதமான நாவல். விறுவிறுப்புக் குறையாத வேக நடை. அபாரம். விரைவில் முடிந்ததே என்பதுதான் சோகம்.

என். தில்லைச்சந்திரன், பதுளை.

-• • •-

அனிதாவை மறக்க முடியவில்லை. நவீன எழுத்துலக வேந்தன் என்று சுஜாதாவுக்கு முரசு கொடுத்த மகுடம் மிகப்பொருத்தம்.

கே. நவராஜ், ஆரையம்பதி.

-• • •-

சுஜாதா ஜொள்ளாகவும், திறிலாகவும் படைத்துத் தந்த அனிதா இளம் மனைவி நினைவில் நிற்கும் தொடர்.

செல்வி பி. சொருபராணி, திருகோணமலை.

-• • •-

இளமை துள்ளும் அனிதாவை வாராவாரம் நம்மிடையே உலவவிட்ட சுஜாதாவுக்கும், முரசின் தொடர் தெரிவுக்கும் பாராட்டுக்கள்.

எம்.எம். நஜ்மா, கொழும்பு-12.

-• • •-

அனிதா கண்டோம்! அடுத்தது காயத்திரியையும் காண்பதில் மகிழ்ச்சி கொள்வோம். சுஜாதா தூள் கிளப்பட்டும்.

என்.எல். அன்சார், புதிய காத்தான்குடி.

கனவுமெய்ப்பட வேண்டும் தொடர்கதையின் தொடக்கமே தூள்கிளப்புகின்றது. பெண்களின் உணர்ச்சிகளை புரிந்துகொள்ளாத ஆண்களின் நிலை என்ன? முடிவையும் தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளது.

முருகேஸ் தெய்வீகரஞ்சனி, பது/ தெளிவத்தை.

-• • •-

டியர் முரசே!

உனது அத்தனை ஆக்கங்களும் வெகு சூப்பர். அதிலும் புதிய தொடரான "கனவுமெய்ப்பட வேண்டும்" அங்கம் இரண்டு என்னை மெய்சிலிர்க்க வைத்துவிட்டது. ஏன்- எதனால் அந்த பெண்ணிற்கு இந்தத் தண்டனைகள்? இறைவா இது புதுமை தொடர். புதுமை தொடரேதான்!

கே. புவனலோஜினி, சமகிபுர, இறக்குவானை.

-• • •-

காதிலை பூ கலைக் கல்லூரி பகுதியில் அறிக்கை அல்வாவும், மேடை அல்வாவும், அனுதாப அல்வாவும் வெகு சூப்பராக இருந்தன. உன் இனிய அல்வாவுக்கு மிக்க நன்றி.

எம். கறீமா சனூன், புத்தளம்.

அன்பின் முரசுக்கு!

தமிழக பிரபல எழுத்தாளர் பிரபஞ்சனின் 'கனவு மெய்ப்பட வேண்டும்' தொடர்கதை ஆரம்பமே அசத்தல்! தொடர வாழ்த்துக்கள்!! புதுமைகளைப் படைப்பதில் முந்திக்கொள்ளும் முரசின்சேவை வாழ்க!!

வ. சுரேஸ் கண்ணா, இருதயபுரம், மட்டுநகர்.

-• • •-

'கிண்ணியா அமீரலி'யின் 'உம்மா வருவாங்க' வில் சட்டையில்லாத பிள்ளை, 'வெள்ளைச் சீலை வாங்கி வாங்க' என்று எழுதுகிறாள்- ஏன்?

வறுமையின் கொடுமையை எடுத்துக் காட்டத்தானே! ஏன் கதாநாயகியைக் கொன்றீர்கள்? வெளிநாட்டில் வேலை செய்யும் உம்மா பணம் அனுப்பாமலேயா இருப்பாள்? காரணங்களைப் புட்டு வைத்தது பத்தாது!

எம். சுரேஸுக்கு நன்றி சொல்லுங்கள்!

எஸ். கரன்- பதுளை.

-• • •-

அன்பின் முரசே!

பசி வந்தால் பத்தும் பறந்து விடும் என்பார்கள். ஆனால் நீ வந்தால் பத்துடன் பசியும் பறந்து விடும். நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் பிரமாதம். 'அனிதா இளம் மனைவி' என்ற தொடர் முடிந்ததே என்ற எங்கள் கவலையை போக்க சுஜாதாவின் புதிய தொடரை தந்ததுக்கு நன்றி. என்றும் உன் பணி தொடர எங்கள் வாழ்த்துக்கள்.

க. சுந்தரேசன், புத்தளம்.

-• • •-

அன்பின் முரசே!

நீ 'எடிபலவும் இடம்பெயர்வும்' எடுத்துக் காட்டிய புகைப்படம் நெஞ்சை உருக்குதய்யா!

தகவல் பெட்டியில் தந்த பெரும் குண்டு மணமகன் கண்டேன், வியப்பு- அடேயப்பா- ஆள் மகா ராஜாதான். தினமுரசு "நீ தரும் பரிசு" அளவிடற்கரியது.

அ. அரசரெத்தினம், சேனையூர்.

-• • •-

என் இனிய முரசுக்கு என்னதான் சொல்லி எழுத! வாரா வாரம் உன் வரவை வழிமேல் விழிவைத்து காத்திருப்பேன், வலிமையூட்டும் பூலானின் கதை, வகையான கவிதை சிறுகதைகளுடன், வனிதை என்னைக் கவர்ந்துவிட்ட வாரமுரசே வாழ்க வளர்க!

எஸ். அன்னலெட்சுமி, மன்னம்பிட்டி.

-• • •-

முத்தான முரசே! நீ தந்துள்ள புதிய தொடர் கதை என் மனதில் இடம் பிடித்துவிட்டது. அத்தோடு வீயோடே தரும் அற்புதக்காட்சிகள் அனைத்தும் வியப்பூட்டுபவை. உன் பணி தொடர முத்தான வாழ்த்துக்கள்.

செல்வன் த. லக்ஸ்மணராஜ், மட்/ சத்துருக்கொண்டான்.



படிப்பகம்

www.padippakam.com

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் அது தொடர்பாக புலிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

23.03.97 அன்று 'புலிகளின் குரல்'லில் தேர்தல் முடிவுகள் தொடர்பான கண்ணோட்டம் வெளியாகியது. 'செய்தி வீச்சு' என்ற தலைப்பின்கீழ் இடம்பெற்ற அந் நிகழ்ச்சியில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டது:

## "சிங்கள மக்களின் தவறான தீர்ப்பு!" "மலையகத் தமிழர்கள் விழிப்படைந்து விட்டனர்"

### உள்ளூராட்சித் தேர்தல் குறித்து புலிகள் தெரிவிப்பு

"உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன முன்னணியை வெற்றிபெறச் செய்தது மூலம் சிங்கள மக்கள் தவறான தீர்ப்பை வழங்கியுள்ளனர். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதும் சிங்கள மக்கள் தமக்குத்தாமே குழிபறிப்பது போன்றதுதான். இந்த இரு கட்சிகளுமே மக்களுக்கு விமோசனம் பெற்றுக் கொடுக்கப்போவதில்லை.

தற்போது மக்கள் அளித்துள்ள வாக்குகளை சர்வதேச அளவில் சந்திரிகா அரசு பயன்படுத்தக்கூடும். படை நடவடிக்கைக்கான அனுமதியாகவும் கொள்ளக்கூடும்.

தேர்தலில் பொதுஜன முன்னணி வெற்றி பெற்றாலும் ஜனாதிபதி தேர்தலில் அதற்கு கிடைத்த வாக்கு எண்ணிக்கை இம்முறை குறைந்துள்ளது. இது அரசுக்கு கிடைத்துள்ள எதிர்ப்பையே காட்டுகிறது.

மலையகத்தைப் பொறுத்தவரை இம் முறை மலையகத் தமிழர்கள் விழிப்படைந்துவிட்டனர். மலையக முடி சூடா மன்னனாகத் திகழ்ந்து வரும் தொண்டமான் மலையகத்தில் வீழ்ந்துவிட்டார். பொதுஜன முன்னணி மலையக மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கிய போதும், மலையக மக்கள் அரசு சார்பான தொண்டமானின் பிரதிநிதிகளைத் தோற்கடித்துள்ளனர்." இவ்வாறு புலிகள் அமைப்பினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன முன்னணி தோல்வியடையும் அல்லது பலத்த நெருக்கடிக்கு உள்ளாகும் என்றே புலிகள் அமைப்பினர் முன்னர் எதிர்பார்த்தனர்.

வவுனதீவு முகாம் தாக்குதலின் பின்னர் புலிகள் விடுத்த செய்திக் குறிப்பில் அத் தாக்குதல் பொது ஜன முன்னணியை நெருக்கடிக்கு உள்ளாக்கும் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வன்னியில் தொடர் படை நடவடிக்கை!

# அரசு திட்டமிடுவதாக புலிகள் கணிப்பு!

"வன்னியில் தொடர் படையெடுப்புக்கு அரசாங்கம் திட்டமிட்டுவருகிறது. அத் திட்டத்தின் முதற்கட்டமாகவே வவுனியாவில் இருந்து மன்னார் மாவட்டத்துக்கு படைகள் நகர்த்தப்பட்டன." இவ்வாறு புலிகள் அமைப்பின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' கணிப்பு தெரிவித்துள்ளது.

மேலும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: புலிகள் தம்மைத் தயார்படுத்தக் கூடிய கால அவகாசத்தைக் கொடுக்காமல் இருப்பதற்காகவும், ஆறுதலாகச் சிந்தித்து செயற்படாமல் தடுப்பதற்காகவும் தொடர்ச்சியான படை நடவடிக்கையை மேற்கொள்ள அரசு விரும்புகின்றது.

### பலமுனைகளில்

வன்னித் தளப் பிராந்தியத்தின் பல்வேறு முனைகளிலும் இன்னும் படையெடுப்பு அரங்குகள் திறக்கப்படக்கூடிய சாத்தியப்பாடுகள் இருக்கின்றன. அதனை எதிர்பார்த்து, படையினரின் அசைவுகளை அவதானித்தபடி புலிகளின் படையணிகள் காத்திருக்கின்றன.

ஆரம்பிக்கப்படவுள்ள தொடர் படை நடவடிக்கைக்கு எதிராகப் புலிகள் நிகழ்த்தவுள்ள தந்திரோபாயமிக்க எதிர்ச்சமர் படையினருக்கு பாரிய விளைவுகளையே தரப்போகிறது. இப் படை நடவடிக்கைகள் தற்கொலைக்கு ஒப்பான காரியம் என்பது எதிர்காலத்தில் தெரியப்போகிறது.

ஏற்கனவே ஒரு தடவை அகன்று பரவி நிலைகொண்ட இந்தியப் படையினரை முறியடித்த அனுபவம் புலிகளுக்கு இருக்கிறது!" இவ்வாறு 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

### வன்னியில் ஆட்திரட்டல்

வன்னிப் பகுதியில் தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட படையினர் திட்டமிடுவதாகக் கூறும் புலிகள், ஆட்திரட்டல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டிசுட்டான் பகுதியில் புதிய உறுப்பினர்கள் பலர் இயக்கத்தில் இணைந்து கொண்டனர் என்று புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை வன்னிப் பகுதியில் அத்தியாவசியப் பொருட்களுக்கும், மருந்துப் பொருட்களுக்கும் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து வன்னிக்குச் சென்ற மக்கள் மட்டுமல்லாமல், வன்னியைச் சேர்ந்த மக்களும் அங்கிருந்து வெளியேறிச் செல்ல முற்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

வன்னியில் உள்ள இடம் பெயர்ந்த மக்களில் பெரும் கஷ்டங்களுக்குள்ளான குடும்பங்களை யாழ்ப்பாணம் செல்வதற்கு புலிகளும் அனுமதிக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

வன்னியில் இருந்து வள்ளங்கள் படகுகள் மூலம் யாழ்ப்பாணம் செல்லும் மக்களுடன் புலிகளும் வரக்கூடும் என்று படையினர் நினைக்கின்றனர். அதனால் அங்கு செல்லும் மக்கள் கடும் கண்காணிப்பின் பின்னரே சொந்தப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர். அதுவரை முகாம்களில் தங்கவைக்கப்படுகின்றனர்.

# முல்லைக் கடலில மோதல்

## கரும்புலித் தாக்குதல் சறுக்கல்

முல்லைக் கடலில் கடற்படையினருக்கும் கடற் புலிகளுக்கும் இடையே கடற்சமர் மூண்டது. 23.03.97 அன்று நள்ளிரவு 1.30 மணியளவில் இக் கடற் சமர் இடம்பெற்றது.

19.03.97 அன்று காணாமல் போன எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டரை முல்லைக் கடலில் தேடும் முயற்சி நடைபெறக்கூடும் என்று புலிகள் எதிர்பார்த்தனர்.

ஹெலியைத் தேடும் முயற்சியில் ஈடுபடும் கடற்படையினரைத் தாக்குவதற்கு கடற் புலிகள் திட்டமிட்டனர். கரும்புலிப் படகுகளும், கடற்புலிப் படகுகளும் முல்லைக் கடலில் தாக்குதலுக்குத் தயாராக சுற்றித் திரிந்தன.

எனினும் முல்லைக் கடலில் கடற்படையினர் பாரிய தேடுதலில் உடனடியாக ஈடுபடவில்லை. 23.03.97 அன்று இரவுதான் கடற்படையினரின் நடமாட்டத்தை கடற் புலிகள் அவதானித்தனர்.

கடற்புலிகளின் நடமாட்டத்தை ராடர்கள் மூலம் அவதானித்த கடற்படையினர் முன்கூட்டியே உஷாராகிவிட்டனர். அதனையடுத்து கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையே கடும் சமர் ஏற்பட்டது. கடற்படையினரை நோக்கி முன்னேறிய கரும் புலிப் படகுகள் இரண்டு வெடித்துச் சிதறின.

அதன்பின்னர் கடற்புலிகள் சமரை நிறுத்திவிட்டு விலகிச் சென்றுவிட்டனர்.

கடற்சமரில் தமது தரப்பில் ஒரு மாலுமி பலியானதாகவும், கடற்படையினர் எட்டுப் பேர் காயம் அடைந்தனர் என்றும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. கடற்படை படகுகளுக்கும் சேதம் ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது. கடற் புலிகள் தரப்பில் நூறுபேர் வரை பலியானதாக கடற்படையினர் தெரிவித்திருந்தனர்.

முல்லைக் கடற்சமர் தொடர்பாக புலிகள் விடுத்துள்ள செய்தியில்:, கடற்படையினர் மிகைப்படுத்திய செய்திகளை வெளியிட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

தமது தரப்பில் நான்கு கடற் கரும்புலிகளும், ஒரு கடற்புலியும் பலியானதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

கடற்கரும்புலிகள் தமிழ்மாறன், மதி அல்லது நாவலன், கலைவள்ளி, வானதி ஆகியோரும், கடற்புலி சுகனன் என்றழைக்கப்படும் மாவேந்தன் ஆகியோரே பலியானதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

# மலையகத்தில் ஏற்பட்ட தோல்வி!

## அரசு மீது தொண்டா குற்றச்சாட்டு

"நுவரெலியாப் பிரதேசத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த ஏராளமான வாக்காளர்கள் இருந்தும் அவர்கள் காங்கிரசுக்கு வாக்களிக்கவில்லை. இதற்கு முழு முதற்காரணம்- அரசாங்கம் தொழிலாளர் அபிலாசைகளை நிறைவேற்றத் தவறியமையேயாகும்!" என்று இ.தொ.கா. தலைவர் சௌ.தொண்டமான் பொ.ஐ. முன்னணிமீது குற்றம் சுமத்தியிருக்கிறார்.

தோட்டத் தொழிலாளர்கள், ஆட்சியிலிருக்கும் பொ.ஐ.முன்னணியால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு வருட ஆட்சியின்போது தோட்டத் தொழிலாளர்கள் எத்தகைய பயனையும் பெறவில்லை.

தொழிலாளர்கள் வாழ்ந்துவரும் லயன்களை அவர்களுக்கே சொந்தமாகக் கொடுப்பதென்ற திட்டமும் தற்போது அமுலுக்கு வந்த போதிலும், இத்திட்டத்தினை ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே தொடக்கி வைத்தது. பொ.ஐ.முன்னணி அரசாங்கம் இத்திட்டம் செயற்படுத்தப்படாமலிருப்பதற்கு வீண் தாமதப்படுத்தியது, என்று கூறியுள்ளார் அமைச்சர் தொண்டமான்.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார ஏடான 'சண்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் திரு.தொண்டமான், "எமது கட்சியின் சின்னமான சேவல் சின்னத்தில், நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பும் நோக்குடன் போட்டியிட்ட போதிலும் வெற்றி கிட்டவில்லை. கடைசிக் கட்டத்தில் ஐ.தே.கட்சியினர் மேற்கொண்ட பிரசாரங்கள் மக்களிடத்தில் பெரும் மனமாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்றே கருதுகிறேன்", என்றார்.

# பல்கலைக்கழக மாணவர்கள் ராகிங்

## வாள் எடுத்து விரட்டிய பொதுமகன்

யாழ் பல்கலைக்கழகத்தில் மீண்டும் ராகிங் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. புலிகள் இயக்கக் கட்டுப்பாட்டில் யாழ் குடாநாடு இருந்தபோது ராகிங் நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டு இருந்தன.

சமீபத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் புதிய மாணவிகளை 'ராகிங்' செய்வதில் ஈடுபட்டனராம். புதிதாக அனுமதி பெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு 'கெல்ட்' ஆங்கில வகுப்புக்கள் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றன.

அந்த வகுப்புக்கள் முடிந்து திரும்பிய மாணவிகளை சந்திகளிலும், வீதி முடக்குகளிலும் ராகிங் செய்வதில் ஈடுபட்டனர் சில சிரேஷ்ட மாணவர்கள்.

'ராகிங்' எல்லை மீறுவதைக்கண்ட அப் பகுதி மக்கள் சீற்றமடைந்தனர். பொது மகன் ஒருவர் நீண்ட வெட்டு வாள் ஒன்றுடன் மாணவர்களை நோக்கிப் பாய்ந்தார். பயந்து போன மாணவர்கள் ஓட்டம் பிடித்தனர்.

பின்னர் 'ராகிங்' அத்துமீறல்கள் தொடர்பாக படையினரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதாம்.

# குடாநாட்டில் தொடர் சுற்றிவளைப்பு!

## கட்டளைக்கு பணிய மக்கள் மறுப்பு

யாழ்குடாநாட்டில் பாதுகாப்புப் படையினர் சுற்றிவளைப்பு- தேடுதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் தென்மராட்சியில் மறவன்புலவு வடக்கு- கிழக்கு, மேற்கு, தெற்கு, கோயிலாக்கண்டி, கைதடி, நாவற்குழி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய சுமார் 3 மைல் சுற்றளவுப் பிரதேசம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

கடந்தவாரம் நடைபெற்ற இத்தேடுதல் நடவடிக்கையின்போது குழந்தைகள் முதல் முதியோர்வரை அனைவரும் வீடுகளை விட்டு வெளியேறி பாடசாலை ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு 20 பேரை மட்டும் தனியாக நிறுத்திவைத்த படையினர் ஏனையோரை திரும்பிச் செல்லுமாறு கூறினார்கள். ஆனால் தம் பிள்ளைகளை விட்டுச் செல்லமாட்டோம் என்று பெற்றோர்களும் உறவினர்களும் பிரச்சனைப் பட்டனர்; திரும்பிச் செல்ல மறுத்தனர். அதனையடுத்து ஆத்திரம் அடைந்த படையினரால் பொதுமக்கள் சிலர் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தாக்கப்பட்டபோதும் பெற்றோர்கள் எவரும் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை. அதனையடுத்து ஓட்டோ ஒன்றில் தலையாட்டி ஒருவர் அழைத்து வரப்பட்டார். தனியாக நிறுத்தப்பட்ட 20 பேரில் எவரையுமே தலையாட்டி அடையாளம் காட்டவில்லை.

அதன்பின்னர் கிராம சேவகர் முன்பாக அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, இச் சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் 20.03.97 அன்று இரவு 12 மணியளவில் நாவற்குழி கோயிலாக் கண்டியில் சீருடைதரித்தவர்களின் துப்பாக்கிச் சூடு காரணமாக இருவர் காயமடைந்தனர்.

கந்தசாமி அன்னபூரணம் (வயது 37) கந்தசாமி தவரஞ்சனி (வயது 14) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

# "காணாமல் போனோரை மீட்டுத் தருக!"

## யாழ் நகரில் பெற்றோர் கோரிக்கை

யாழ் குடாநாட்டில் இதுவரை கைது செய்யப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள் ஆகியோரின் பெற்றோர்கள் சமீபத்தில் யாழ்நகரில் ஒன்று கூடினார்கள். யாழ் நகரில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் அவர்கள் ஒன்றுகூடினர்.

'அன்னையர் முன்னணி', 'கைதானோர், காணாமல் போனோர் நலன் காக்கும் அமைப்பு' ஆகியவற்றைச் சேர்ந்த 404 பேர் கலந்துகொண்டனர்.

ஈ.பி.டி.பி. யாழ் மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் ஜெகன், ஈ.பி.டி.பி. யாழ் மாவட்ட பா.உ., இ.உ. பாஸ்கரன் ஆகியோரும் கூட்டத்தில் பங்குகொண்டனர்.

யாழ் குடாநாட்டில் கைதானோர், காணாமல் போனோர் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன:

யாழ் மாவட்ட இராணுவ அதிகாரியைச் சந்தித்து காணாமல் போனோர் தொடர்பாக பேச்சு நடத்துதல், ஜனாதிபதியை சந்தித்து தம் பிள்ளைகளை மீட்டுத் தருமாறு கோருதல், காணாமல் போனார் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

# காணாமல்போன ஹெலி!

## புலிகள் விடுத்த செய்தி!

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான எம்.ஐ.24ரக ஹெலி ஒன்று 19.03.97 அன்று காணாமல் போனதல்லவா?

இது தொடர்பாக பல்வேறு செய்திகள் வெளியாகி வருகின்றன. முல்லைத்தீவுக்கு சற்று வடக்கே கடற்பகுதிக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்தபோதே ஹெலி காணாமல் போனது. இரண்டு ரசிய விமானிகளும் விமானப் படையினர் ஆறுபேரும் ஹெலியில் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஹெலியை தாம் சுட்டுவீழ்த்தியதாகப் புலிகள் உரிமை கோரினர் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

ஆனால் புலிகள் இதுவரை அவ்வாறு உரிமை கோரவில்லை. "எம்.ஐ.24 ஹெலிக் கொப்டர் தாழப்பறந்த வேளையில் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டிருக்கலாம் என்று சிறி லங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஊகம் தெரிவிக்கின்றன" என்று மட்டுமே 'புலிகளின் குரல்' வானொலியில் செய்தி சொல்லப்பட்டது.

இதேவேளை, புலிகளின் தினசரியான ஈழநாதம் வெளியிட்டுள்ள செய்தியில், "எம்.ஐ.24 ஹெலிக்கொப்டர் முல்லைத்தீவுக் கடற்பகுதியில் வெடித்துச் சிதறியதைக் கண்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்" என்று தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து வெளியாகும் 'ஐலன்ட்' பத்திரிகைக் காணாமல்போன ஹெலி தொடர்பாக சந்தேகம் தெரிவித்துள்ளது.

"ஹெலியில் இருந்த வெளிநாட்டவர்கள் இருவரும் புலிகளிடம் பணம் வாங்கிக்கொண்டு ஹெலியை வன்னிக் காட்டுக்குள் இறக்கியிருக்கலாம்; புலிகளிடம் ஒப்படைத்திருக்கலாம்" என்று 'ஐலன்ட்' ஊகம் வெளியிட்டுள்ளது.

# கண்டி நகரை புனரமைக்க திட்டம்!

## ஜனாதிபதி அனுமதி! அமைச்சர் தெரிவிப்பு!

(கண்டி நிருபர்)

கண்டி நகரின் மத்தியில் அமைந்துள்ள போகம்பறைச் சிறைச்சாலை விரைவில் பல்லேகல திறந்த வெளிச் சிறைச்சாலைப் பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப்பட இருக்கின்றது.

இலங்கை சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் நிறைவு விழாவின் பொன்விழா 1998ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் 4ஆம் திகதி கண்டி நகரில் வெகு கோலாகலமாகக் கொண்டாட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விழாவுக்கு மெருகூட்டும் வகையில் கண்டி நகரும் அபிவிருத்தியாக்கப்பட இருப்பதாக பிரதி அமைச்சரும் கண்டி மாவட்ட எம்.பீயுமான திரு. லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிக்கிறார். திரு. கிரியெல்ல இந்த விழா குழுவின் தலைவரும் ஆவார்.

ஜனாதிபதியின் அனுமதியுடன் கண்டி நகர் புனரமைப்பது தொடர்பான வேலைத் திட்டத்தின்கீழ் போகம்பறை சிறைச்சாலையும் அது அமையப் பெற்றிருக்கும் இடத்தில் இருந்து அகற்றப்பட்டு அதே இடத்தில் மத்திய பிரதேசத்திற்கான நீதிபரிபாலன வலயம் உருவாக்கப்படும்.

இதேவேளையில், கண்டி நகரம் எங்கும் பரவலாக இயங்கிவரும் பஸ் நிலையங்களும் குட்செட் பஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

கட்டுகஸ்தோட்டையில் நிர்மாணிக்கப் பட்டுவரும் பொது பொருட்களஞ்சிய நிலையத்தில் கண்டி நகரில் உள்ள சகல விதமான பொருட்களும் தேக்கி வைக்கப்படும். கண்டி முஸ்லிம் ஹோட்டலுக்கு முன்பாக நிலச்சுரங்கப் பாதையும் 150 கடைத் தொகுதியும் சுதந்திர தின பொன் விழாப் பரிசாக கண்டி நகருக்கு வழங்கப்படும் எனவும் திரு. கிரியெல்ல தெரிவிக்கிறார்.

# மறுபடி கிடைக்குமா உணவு முத்திரை?

## சாத்தியமில்லை என்கிறார் அரசு அதிபர்

(ஏறாவூர் நிருபர்)

நாட்டில் 'சமுர்த்தி' உதவித் திட்டம் அமுலாகும் பகுதிகளில் அரசு வறுமை நிவாரண உணவு முத்திரை உதவிகளை ஏற்கனவே நிறுத்தியுள்ளது தெரிந்ததே. ஆனால் 'சமுர்த்தி' உதவித் திட்டம் இன்னமும் அமுலாகாத வடக்கு-கிழக்கு தமிழ் பகுதிகளிலும் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து உடனடியாக இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதனால் சென்ற வன்செயல்களின் போதும், தற்போதைய யுத்தச் சூழ்நிலைகளிலும் உயிர் உடமைகளை இழந்து, இடம் பெயர்ந்து, அகதிகளாகத் தொழிலற்று நிர்க்கதிக்குள்ளாகியிருக்கும் இலட்சக் கணக்கான மக்களுக்கும் உணவு முத்திரை நிறுத்தப்பட்டது.

நாட்டின் இதர பகுதிகளில் வறுமை நிவாரண உணவு முத்திரைத் திட்டத்திற்குப் பதிலாக 'சமுர்த்தி' உதவித் திட்டம் அமுலாக்கம் செய்யப்பட்டு உதவிகள் கிடைத்து வருகின்றன.

வடக்கு-கிழக்குப் பகுதியில் உள்ள 8 மாவட்டங்களிலும் 'சமுர்த்தி'த் திட்டம் அமுலாக்கப்படாத பிரதேசங்களிலும் இல்லாத இயலாத இலட்சக் கணக்கான வறிய மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றி மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. ஏ.கே. பத்மநாதன் தினமுரசுக்குக் கருத்துக் கூறுகையில், "கடந்த மாதம் ஜனாதிபதியுடன் நடந்த வேறொரு சந்திப்பில் இது விடயம் பற்றியும் நாம் எடுத்துச் சொன்னபொழுது, இது சம்பந்தமாக வேறு நடவடிக்கைக்குரிய ஆலோசனை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு தனது செயலாளரான திரு. பாலபட்டபெந்தியை ஜனாதிபதி பணித்ததாகத் தெரிகின்றது. ஆனால் இதுவரை எதுவிதமான அறிவுறுத்தல்களும் ஜனாதிபதியிடமிருந்து கிடைக்கவில்லை. கிடைத்த தகவல்களின்படி அரச உயர் மட்டத்திலும், திறைசேரி மட்டத்திலும் உணவு முத்திரையை மீண்டும் வழங்கும் சாத்தியக்கூறு தென்படவில்லை," என்று மேலும் தெரிவித்தார்.

# அனுமதிப்பத்திரம் படையினர் வசம்

## வாகனங்கள் புலிகளின் பகுதிகளில்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் கண்காணிப்பின் கீழ் இல்லாத பகுதிகளுக்குச் செல்லும் வாகனங்களின் அனுமதிப் பத்திரங்களை எல்லைப் பகுதியிலுள்ள படையினரின் கடைசிச் சோதனைச் சாவடியில் ஒப்படைத்து விட்டு புலிகளின் ஆளுகைக்குள் உள்ள பகுதிகளுக்குச் சென்று திரும்பி வரும்பொழுது ஒப்படைத்த அனுமதிப்பத்திரங்களை படையினரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நடைமுறை தற்சமயம் இருந்து வருகிறது. புலிகளின் பகுதிகளுக்குச் செல்லும் வாகனங்களை புலிகளால் எடுத்துச் செல்லப்படுவதைத் தடுப்பதற்காகவே இத்தகைய முறை பின்பற்றப்படுவதாக படை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

படைத்தரப்பினர் வாகனக் கடத்தலைத் தடுக்க எத்தகைய உபாயங்களைக் கையாண்டாலும் புலிகள் அவைகளை முறியடித்துக் காரியங்களைச் சாதித்து விடுகிறார்கள் என்று வாகனச் சாரதியொருவர் கூறுகிறார்.

# புலிகள் கொடுத்த ஆயுதம் - இரு இளைஞர்கள் பலி

மட்டக்களப்பு-களுவன்கேணியில் கடந்த 24.03.97 அன்று பதுங்கியிருந்து படையினர் சுட்டதில் ஆயுதங்களைத் தம்வசம் மறைத்து எடுத்து வந்த சிவிலியன்களான இரு இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

களுவன்கேணிப் பகுதியில் மாலையாகியதும் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து களுவன்கேணியில் புகையிரதக் கடவை சந்திக்கும் இடத்தில் பற்றைக் காடுகளுக்குள் படையினர் பதுங்கிக் கிடந்தனர். அவ்வேளையில் அப் பகுதியைக் கடக்க நினைத்த புலிகள் இயக்க உறுப்பினர் இருவர் படையினர் அங்கு பதுங்கியிருப்பதை அறிந்தனர். உடனே அவர்கள் தம்வசம் வைத்திருந்த இரு துப்பாக்கிகளையும் அவ்வழியே வந்த சிவிலியன்களான ச.தவராசா (வயது 26) மற்றும் சண்முகம் ஆகிய இருவரிடமும் உரப்பைகளில் மறைத்து, அங்கிருந்து அவற்றை குறித்த இடத்திற்குக் கொண்டு தருமாறு அவர்களை வற்புறுத்திக் கேட்டு ஒப்படைத்துள்ளனர். புலிகள் தம்மிடம் ஒப்படைத்த இரு ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு குறித்த இரு இளைஞர்களும் சைக்கிளில்; படையினர் பதுங்கியிருந்த பகுதியைக் கடக்க முயன்ற போது, அவர்களை வழிமறித்த படையினர் சோதனையிட்டனர். அப்போது இருவரின் சைக்கிள்களிலும் உரப்பைகளில் துப்பாக்கி மறைத்து வைக்கப்பட்டிருப்பதைப் படையினர் கண்டுவிட்டனர். உடனடியாக அவர்கள் இருவரையும் அவ்விடத்திலேயே படையினர் சுட்டுக் கொன்றனர்.

இதே இடத்தில் சமீப சில காலங்களுக்கு முன்னர் பொதுமக்கள் பயணம் செய்துகொண்டிருந்த வவுனியா-மட்டக்களப்பு இ.போ.ச.பஸ்ஸை வழிமறித்து படையினர் ஏறிச்சென்றபொழுது பதுங்கியிருந்த படையினர் புலிகள் பயணம் செய்கின்றனர் என்ற சந்தேகத்தில் சுட்டதில் பஸ்ஸிலிருந்த படையினரும், பொதுமக்களும் காயம்பட்ட சம்பவமும் நினைவிற் கொள்ளத்தக்கது.



படிப்பகம்

## அடிப்படை உரிமை மீறல்

# 'டெலிக்' ஆங்கில ஆசிரியர்கள் வழக்கு!

(ஏறாவூர் நிருபர்)

இவ்வருடம் ஜனவரி மாதம் 'டெலிக்' ஆங்கில ஆசிரியர்களை தகுதிகாண் பயிலுநர் ஆசிரியர்களாக நியமித்திருக்கும் முறை நாடளாவிய ரீதியில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. தமது நியமனம் சம்பந்தமான நியதிகளில் துரோகமிழைக்கப்பட்டிருப்பதாய் 'டெலிக்' ஆங்கில ஆசிரியர்கள் கருதுகிறார்கள். அரசாங்க வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப தமக்கு நியமனம் வழங்கப்படாததை எதிர்த்து இந்த ஆசிரியர்கள் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் 'டெலிக்' ஆங்கில ஆசிரிய சங்கங்களே இந்த வழக்கைத் தொடுத்துள்ளன. மேற்படி இரு ஆசிரியர் சங்கத்திலும் 151 ஆசிரியர்கள் அங்கத்தவராய் உள்ளனர்.

பிரதிவாதிகளாக கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரன, பொதுக் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் ஆகியோரும், தேசியகல்வி நிறுவக ஆங்கில இலாகாவின் பிரதிப்பணிப்பாளர், வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாவட்டக் கல்விப் பணிப்பாளர், கல்வி உயர்கல்வி அமைச்சின் மேலதிக நிருவாகச் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

1994ம் ஆண்டு ஜனவரி 13ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலின் படி போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்ததின் பிரகாரம் 1994ம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி பரீட்சை நடந்தது. பின்னர் ஒரு வருட ஆங்கில 'டெலிக் ஆசிரியர் பயிற்சிநெறியை முடித்து பரீட்சையில் தேறிய மாணவர்களுக்கு நியமனம் வழங்குவதற்காக கடந்த டிசம்பர் மாதம் நேர்முகப்பரீட்சைகள் நடந்தன. அதன்பின்னர் இவ்வருடம் ஜனவரி மாதம், இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஆங்கில பயிலுநர் ஆசிரியர்களாக 4 ஆண்டுகள் தகுதிகாண் நிலையில் எல்லாக் கொடுப்பனவுகளும் உட்பட ரூபா 2500/ மாத்திரமே மாதாந்தப் படியாக வழங்கப்படும் என்று இவர்களது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்த ஆங்கில ஆசிரிய நியமனத்திற்காக வெளியிடப்பட்ட 13.01.94 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்படி இவர்களது நியமனம் நிரந்தரமானதென்றும், ஓய்வூதிய உரித்துடையதென்றும், வருடதிரட்டிய சம்பளம் ரூபா 38,040.00 என்றும் கூறப்பட்டுள்ளது. எனினும் தற்சமயம் தமக்கு வழங்கப்பட்டுள்ள நியமனம் வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளை உதாசீனஞ் செய்திருக்கிறதென்றும் 'டெலிக்' ஆசிரியர்கள் விசனமடைந்துள்ளார்கள்.

# கல்விக் கண் இருக்கப் பயமேன்?

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவியான செல்வி பெனடிக்டா செபமாலை, 1996ல் இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வரலாறு, நாடகமும் அரசியலும் ஆகிய இரண்டு பாடங்களில் 'ஏ' தரச் சித்தியும், தமிழ், கிறிஸ்தவம் ஆகிய பாடங்களில் 'பி' தரச் சித்தியும் பெற்றுச் சாதனை புரிந்துள்ளார்.

முற்றாகப் பார்வையற்ற நிலையிலும் முயன்று வெற்றிக் கம்பத்தை அடைந்த இம் மாணவியின் துணிச்சலான முயற்சி மென்மேலும் வெற்றிகளைத் தேடித்தர "தினமுரசு"ம் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்ற அதேவேளை, இவரின் ஊக்கம் ஏனையோருக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும் எனவும் விரும்புகிறது.



# தூங்கும் கூடாரமா? அலுவலகமா?

(திருமலை நிருபர்)

மூதூர் பிரதேசப் பிறப்பு இறப்புப் பதிவாளர் அலுவலகம் சோம்பேறிகளின் கூடாரமாகிவிட்டதாகப் பொதுமக்கள் அங்கலாய்க்கிறார்கள். மாதாமாதம் கைநீட்டிப் பெற்றுக் கொள்ளும் சம்பளத்துக்கு கால்பங்கு வேலைகூட இந்த அலுவலக ஊழியர்கள் சிலர் செய்வதில்லை எனப் பரவலாகப் புகார்கள் எழுந்துள்ளன.

சகல விபரங்களும் கொடுக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பங்கள் கூட மூன்றுமாத காலமாகியும் வழங்கப்படுவதில்லையென முரசிடம் மூதூர்வாசிகள் பலர் குறைதெரிவித்துள்ளனர். சகல விபரங்களும் கொடுக்கப்பட்ட சான்றிதழ் விண்ணப்பம் அவசரதேவை என விண்ணப்பதாரர் தெரிவித்தால், அன்றையதினமே பல பதிவாளர் அலுவலகங்கள் வழங்கி வருகின்றன என்பதும், சாதாரண கவனிப்பில் மூன்று நாட்களில் சான்றிதழ் வழங்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் மூதூர் அலுவலகத்தைப் பொறுத்தவரையில் விண்ணப்பகாரர்கள் உத்தியோகத்தர்களைச் சந்தோஷப்படுத்தினாலன்றி எதுவும் நடைபெறுவதில்லை. போக்குவரத்துச் சிரமங்களின் மத்தியில் கிராமப்புறத்து மக்கள் ஒரு சான்றிதழ் பெறுவதற்காக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பலதடவை அலைய வேண்டியிருக்கிறது.

"சும்மா" இருந்து மக்களை வருத்த முடியும் என்பதற்கு இவர்களே சாட்சி.

# சிற்றூழியர் நியமனம்

யாழ் போதனா வைத்தியசாலையில் சேவையாற்ற 70 சிற்றூழியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மார்ச் 17 முதல் அவர்கள் பணியில் சேர்ந்தனர்.

ஈ.பி.டி.பி. யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, சிற்றூழியர்களுக்கான நியமனக் கடிதங்களை யாழ் போதனா வைத்தியசாலையில் வைத்துக் கையளித்தார்.

# கடமையாற்றத் தடை

(காரைதீவு நிருபர்)

அரசில் கடமையாற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் அந்தந்த பிரதேசத்தில் கடமையாற்ற முடியாது என்ற சுற்று நிருபம் முதற் தடவையாக கல்முனைக் கல்வி மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்டிருக்கிறது.

இதன்படி கல்முனை பிரதேசசபை உறுப்பினர்களான ஏ.ஏ.கபூர் மாவடிப் பள்ளிக்கும், எம்.எச்.எம். சுபைர் நயினாகாட்டிற்கும், வி. ஜெகதீஸன் சொறிக்கல்முனைக்கும் இம்மாதம் முதல் இடமாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஆசிரியர்களாவர்.

இச்சுற்று நிருபம் கடந்த 2 1/2 வருடங்களாக அமுல் செய்யப்படவில்லை. அது மட்டுமல்ல வட-கிழக்கில் கல்முனையைத் தவிர வேறெந்த பாகத்திலாவது அமுல் செய்யப்படுகிறதா? என்பது சந்தேகமாகவுள்ளது என உறுப்பினர்கள் தினமுரசிடம் முறையிட்டுள்ளனர்.

# யாழில் மின்சார விநியோகம்!

யாழ் குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்க பிரிட்டிஷ் அரசாங்கம் ஐந்து ஜெனரேட்டர்களை இலங்கை அரசிடம் கையளித்துள்ளது. ஐந்து பாரிய ஜெனரேட்டர்கள் அவ்வாறு வழங்கப்பட்டன.

ஐந்து ஜெனரேட்டர்களும் ஏப்ரல் மாத இறுதியில் யாழ்ப்பாணம் அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து ஜெனரேட்டர்களும் யாழ் சென்றதும் அவற்றில் இரண்டு வடமராட்சிப் பகுதியில் பொருத்தப்படும். ஏனைய மூன்று ஜெனரேட்டர்களும் திருநெல்வேலி, யாழ் இந்துக்கல்லூரி, நல்லூர் ஆகிய பகுதிகளில் பொருத்தப்படும்.

தற்போது யாழ் இந்துக் கல்லூரி அருகே உள்ள ஜெனரேட்டரை உரும்பிராய்ப் பகுதிக்கு மாற்றவும், நல்லூரில் உள்ள ஜெனரேட்டரைக் கோப்பாய்ப் பகுதிக்கு மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜெனரேட்டர்கள் மூலம் மின்சாரம் வழங்க வசதியாக மின் இணைப்பு வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே பாவனையில் இருந்தவற்றுள் சில பழுதடைந்துள்ளன. பாவனையாளர்கள், அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகளவான மின்சாரத்தைப் பயன்படுத்தியதாலேயே அவை செயலிழந்தன.

# லஞ்சமா?

அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர்கள் 100 பேருக்கு கப்பல்துறை முகத்தில் சிற்றூழியர்தர வேலை வழங்குவதற்காக கொழும்பில் நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டது. இதில் சுமார் 1000 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு வினவப்பட்ட கேள்விகளில், "நீங்கள் யாருக்காவது இவ்வேலை எடுப்பதற்கு லஞ்சம் (பணம்) கொடுத்துள்ளீர்களா?" என்பதும் ஒரு கேள்வி. நெருப்பில்லாமல் புகையுமா? ஒரு சில மேலதிகாரிகள் பணம் பெற்றுள்ளதாக விண்ணப்பதாரிகள் பலர் கவலையடைந்துள்ளனர். நீதியான தெரிவு நடக்குமா?

# எங்கு கேட்கின்றது?

(மன்னார் நிருபர்)

மன்னார்ப் பகுதியில் அண்மைக் காலமாக சில வேளைகளில் பாரிய சத்தங்கள் கேட்கின்றன. கடந்த 17.03.97 அன்றும் இவ்வாறான பாரிய குண்டுச் சத்தங்கள் கேட்டன.

இதற்கு முன்னரும் இரவு வேளைகளில் இவ்வாறான சத்தங்கள் கேட்டன. ஷெல் போன்ற பாரிய இரைச்சலுடன் சத்தம் கேட்கிறது. எனினும் என்ன நடக்கிறது- எங்கு நடக்கின்றது என்பதைக்கூட இங்குள்ளவர்களால் அறிய முடியவில்லை.

## விளம்பரப் பகுதி




S·H·M·S SWISS HOTEL MANAGEMENT SCHOOL

*ONE OF SWITZERLAND'S LEADING HOTEL INSTITUTES

*INTERNATIONALLY RENOWNED QUALIFICATION

*HIGH QUALITY SWISS TRAINING

*INTERNATIONAL WORK EXPERIENCE

*NUMEROUS SCHOOL AFFILIATIONS AND OFF. REGISTRATION IN SWITZERLAND

*LUXURY HOTEL STYLE ACCOMMODATION

*PRESTIGIOUS FACILITIES

In its beautiful facilities in Caux/Montreux, Switzerland, SHMS, The Swiss Hotel Management School offers the following course programmes:

* 1 year Certificate in Food & Beverage Management or Rooms Division Management
* 2 year Diploma in Hotel Operational Management
* 2.5 year Diploma in Hotel Management & Tourism
* 3 year BBA Degree in Hotel Management
* 4 year MBA Degree in Intl. Hotel & Tourism Management.
* 1 year Postgraduate Diploma in Hotel Mgmt & Tourism

Each year is divided into a 5 month academic term and a 5 month paid internship in Switzerland which is arranged by the school.

FREE SEMINARS

| DATE | PLACE | TIME |
|---|---|---|
| 04.04.97 (Fri) | COLOMBO - Ceybank Audotorium. | 10am - 1pm |
| 05.04.97 (Sat) | KANDY - Queens Hotel, Kandy. | 10am - 1pm |
| 06.04.97 (Sun) | ANURADHAPURA - Tourist Board Rest. House, Jayanthi Mawatha, Anuradhapura. | 10am - 1pm |
| 07.04.97 (Mon) | TRINCOMALEE - Town Hall, U.C., Trincomalee. | 10am - 1pm |
| 09.04.97 (Wed) | AMPARA - Galoya Safari Lodge, Jayanthi Mawatha, Amoarai. | 10am - 1pm |
| 10.04.97 (Thu) | GALLE - Town Hall, Galle. | 10am - 1pm |

Mr. GUY PETERS, Regional Marketing Manager of SHMS, the Swiss Hotel Management School, Switzerland will be available at the seminars for any questions and clarifications.

Next Intake: September 1997

A professional study programme, excellent facilities, affordable fees and much more may be the reasons why more and more students decide to study at

SHMS, THE SWISS HOTEL MANAGEMENT SCHOOL

*Representative in Sri Lanka:*

DALUWATTA & JAFFE ASSOCIATES
L.G. 15, Peoples Park, Colombo - 11, Sri Lanka.
Tel: 320 139, 852 525 Fax: 433 597

UNION
யூனியன் மோட்டிஸ்
கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

SPOKEN ENGLISH
By Pon. SAKTHIVEL
Dip. in. English (London)
ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்று மாத காலத்தில் நவீன உளவியல் அடிப்படையில் கற்றுத் தரப்படும்.
காலம் : 3 மாதம் (6-4-97முதல்)
பாடவேளை: 8A.M - 10A.M
குறிப்பிட்ட தொகை மாணவர்களே அனுமதிக்கப்படுவர் தொடர்புகட்கு
A. C. A
55, ST. LUCIAS STREET, COLOMBO-13. TEL : 335287

பழுதுபார்த்தல்
T.V, VIDEO DECK, RADIO
போன்ற எலக்ரோனிக் உபகரணங்கள் வெளி நாட்டில் பயிற்சி பெற்றவர்களினால் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் திருத்தப்படும்.
LIBRA ELECTRONICS
5, DEVOS AVENUE, BAMBALAPITIYA.
TELE PHONE: 585126

BRIGHTன் SPOKEN ENGLISH
(தபால் மூலம் கல்வி)
ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மிகச் சிறந்த பாடநூல்களுடன் கூடிய பாடத்திட்டம். விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, FIRST FLOOR, P.O.BOX- 162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO-11. T.P. : 434770

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06
T.P: 586218, 078-63611
Fax: 503030

QUADIR GASTRIC TABLET
காதிர் கேஸ்டிக் மாத்திரை

உலகில் ஏராளமான மக்களை மிகவும் வேதனைப்படுத்திக் கொண்டிருக்கும் நோய்களான "குன்மம்" எனப்படும் "கேஸ்டிக்", "குடல்புண்" எனப்படும் "அல்சர்" அடிக்கடி ஏப்பம், வயிறு ஊதுதல், ஜீரணக்குறைபாடு, அடிக்கடி காற்றுப்பறிதல், வயிறு இரைதல், குடல் எரிவு, நெஞ்சில் எரிவு, உணவு உண்டதும் ஒரு வகையான தொல்லைகள், மலக்கட்டு, வாய்வுப்பிடிப்புகள், மூட்டுக்களில் தோன்றும் வலிகள், வாயுவால் வயிற்றில் ஏற்படும் வலிகள் முதலிய நோய்களை பூரணமாக குணப்படுத்தி உண்ணும் உணவுகளை நன்றாக ஜீரணிக்கச் செய்து, தினமும் இலகுவாக மலம் கழிய வைத்து நல்ல பசியையும் ஏற்படுத்தி, உடல் பலவீனத்தை நீக்கி உற்சாகத்தையும், ஆரோக்கியத்தையும் அளிக்கக் கூடிய அபூர்வ சக்தி வாய்ந்த ஓர் யூனானி மருந்து.
பல ஆயிரக்கணக்கான மக்களை குணப்படுத்தி கை கண்டது.
சாப்பிட இலகுவான முறையில் மாத்திரைகளாக்கப்பட்டது. நல்ல இதமான வாசனைச் சுவையுடையது. மேற் கூறிய நோய்களில் நின்றும் பூரண நிரந்தர சுகம் பெற நம்பிக்கையான மருந்து நீங்கள் பாவித்தும் உண்மையை உணர்ந்து கொள்வீர்கள்.

21 நாட்கள் பாவிக்கக் கூடிய 126 மாத்திரைகள் கொண்ட ஒரு போத்தலின் விலை ரூ. 330/- மட்டுமே

V.P.P. யில் தேவைப்படுவோர் M. C. A. WAHEID என்ற பெயருக்கு "தெமட்டக்கொடையில்" பெறக் கூடியவாறு ரூ 50/- மணி ஒடர் பதிவுத்தபாலில் அனுப்பவும்.

இங்கே நேரில் பெறலாம்

QUADIR MAKAM - MEDICAL HALL
DR. AL - SHEIK - ABDUL WAHEID SAGKAFF
36, Dematagoda Place, Dematagoda, Col. 09.
Tel: 692313, 681847 Fax: 692313

அமீர் ஸ்டோர்ஸ்
128, மார்கட் வீதி,
கல்முனை.
தொலை : 065 - 9478

www.padippakam.com

# மினித் தேர்தலும் எச்சரிக்கை மணியும்!

## திருப்பம் வருமா?

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

**நாரதர்**

எதிரியின் பலம், பலவீனம் அறிந்து போர் தொடுப்பதுதான் சரியான யுத்த தந்திரம்.

தனது பிரதான எதிரியான ஐ.தே. கட்சி மினி யுத்தத்துக்கு முழுமையாகத் தயார் இல்லாத நிலையில், அதனை போருக்கு கூவியழைத்தது பொதுஜன முன்னணி.

தேர்தலை எதிர்நோக்க தயாராக இருப்பதாக ஐ.தே.கட்சி கூறியபோதும் அது ஒரு வெற்று மிரட்டல் மாதிரித்தான்.

ஐ.தே.கட்சியின் 17 வருடகால ஆட்சி தொடர்பான அதிருப்திகள் என்ற பனி மூட்டம் இன்னமும் பூரணமாக விலகாத நிலையில் அக் கட்சியை தேர்தல் களத்தில் சந்திப்பதற்கு பொது ஜன முன்னணியிடம் தயக்கம் இருக்கவில்லை.

உள்ளூராட்சித் தேர்தல்களை பொது ஜன முன்னணி தள்ளிப்போட்டமைக்கு காரணம் ஐ.தே.கட்சிமீதுள்ள பயம் அல்ல.

பொது ஜன முன்ன்ணி வேறு ஒரு கணக்குப் போட்டிருந்தது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் புலிகளை ஓரம்கட்டிய செய்தியோடு வாக்காளர்களை சந்திக்கவே அது விரும்பியது.

**பாராளுமன்றத்தில் ஏனைய கட்சிகளின் தயவில்லாமல் தனிப் பெரும் பான்மையை பெறக்கூடிய பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தவும் யுத்த வெற்றியை நம்பியிருந்தது ஆளும் தரப்பு.**

யாழ் குடாநாட்டை கைப்பற்றிய பின்னர் புலிகளை இனிமேல் ஓரம் கட்டுவது அப்படி ஒன்றும் பெரிய காரியமல்ல என்று ஆளும் தரப்பு நினைத்திருந்தது.

ஆளும் தரப்பு நினைத்தது போல நடந்திருந்தால், உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பதிலாக பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்குக் கூடச் சென்றிருக்கலாம்.

ஆனால் வன்னியை தளமாக்கிக் கொண்ட புலிகள் கெரில்லா யுத்தத்தை தொடர்ந்தனர்.

முல்லைத்தீவு முகாம்மீது பாரிய தாக்குதல், கிழக்கில் தொடர் தாக்குதல்கள் என்று போர்க்கள நிலவரம் நீண்டகால யுத்தத்துக்கான அறிகுறிகளை தெளிவாகக் காட்டியது.

ஏற்கனவே அரசாங்கம் பெற்ற யுத்த வெற்றிகளையும் புலிகளின் தாக்குதல்கள் கேள்விக்குள்ளாக்கக்கூடிய சூழல் உருவானது.

வெற்றி தோல்விகள் அடிக்கடி கைமாறக் கூடிய போர்க்களத்தில், பாரிய வெற்றிக்காக காத்திருப்பதில் சாதகம் அதிகமா? பாதகம் அதிகமா? என்று கணக்கிட்டது ஆளும் தரப்பு.

பாதகம்தான் அதிகம் என்ற நிலையில் தான் இறுதியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முன்வந்தது அரசாங்கம்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.கட்சியிடம் பொது ஜன முன்னணிக்கு பயம் ஒன்றும் கிடையாது. புலிகளிடம்தான் பொது ஜன முன்னணிக்கு உண்மையான பயம்.

தேர்தல் நேரத்தில் பாரிய பாய்ச்சலில் புலிகள் ஈடுபட்டால் தமது யுத்த வெற்றிப் பிரசாரம் அடிபட்டுப் போய்விடும் என்று பயந்தது பொது ஜன முன்னணி.

'ஒப்பரேஷன் எடிபல' மூலமாக புலிகளை தற்காப்புக் கட்டத்துக்குள் தள்ள படையினர் நினைத்தபோதும், பொது ஜன முன்னணி பயந்தது போலவே புலிகள் கிழக்கில் பாரிய தாக்குதல் தொடுத்தனர்.

வவுணதீவு முகாம்மீதும், சீனக்குடா விமானதளம்மீதும் இருமுனைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆனால் இம் முறை அதிஷ்டம் பொது ஜன முன்னணியின் தரப்பில் இருந்தது.

எதிர்பாராமல் நிகழ்ந்த நாலந்த எல்லாவல கொலை ஆளும் தரப்புக்கு பிரசார ஆயுதமாக கிடைத்தது.

**யுத்த வெற்றிப் பிரசாரத்தை மட்டும் நம்பியிருக்காமல், ஐ.தே.கட்சியின் 17 வருட கால ஆட்சியை நினைவூட்டவும், ஐ.தே.கட்சி மீதான எதிர்பிரசாரத்தை முக்கிய பிரசாரமாக முதன்மைப்படுத்தவும் நாலந்த எல்லாவல கொலை சாதகமாக அமைந்தது.**

ஐ.தே.கட்சியை கொலைகாரர்கள் என்று பொது ஜன முன்னணி குற்றம் சாட்டியது. அதற்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் தனது தரப்பு நியாயத்தை அடுக்கியது ஐ.தே.கட்சி.

இரண்டு பிரதான கட்சிகளின் இந்த அரசியல் யுத்தம்மீது வாக்காளர்களின் கவனம் திரும்பியதால் போர்ச் செய்திகள் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டன.



**அதனால்தான் புலிகளின் தாக்குதல்கள் தேர்தல் களத்தில் பாரிய அதிர்வுகளாக எதிரொலிக்கவில்லை.**

அதேசமயம் யுத்த வெற்றிகள் தொடர்பாக தேர்தல் மேடைகளில் பொது ஜன முன்னணி பிரசாரம் செய்யத் தவறவில்லை.

ஐ.தே.கட்சிக்கோ அரசாங்கத்தின் யுத்த வெற்றிகள் பற்றிய பிரசாரத்திற்கு பதிலடி கொடுக்க அவகாசம் இருக்கவில்லை. அரசாங்கம் சொல்வதுபோல புலிகளை பலவீனமாக்கிவிடவில்லை என்று ஆதாரம் காட்டிப் பேசக்கூடிய சந்தர்ப்பம் ஐ.தே. கட்சிக்கு கிடைக்கவில்லை.

அப்படிப் பேசினால் தமக்கும் புலிகளுக்கும் ஆளும் தரப்பு முடிச்சுப்போட்டுவிடும் என்றும் பயந்தது ஐ.தே.கட்சி. படையினரின் வீரத்தை இகழ்வதாகவும் பழி போடப்படலாம் என்ற பயமும் இருந்தது.

புலிகளுக்கு பிரேமதாசா ஆயுதம் வழங்கியதைச் சித்தரிக்கும் சுவரொட்டிகளும் பரவலாக ஒட்டப்பட்டன.

**எனவே-அரசாங்கத்தின் யுத்த வெற்றி தொடர்பான பிரசாரத்தை சேதமாக்க முடியாத நிலையில் இருந்தது ஐ.தே.கட்சி. உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதல்களையும் அராசங்கத்தின் யுத்த வெற்றிப் பிரசாரத்திற்கு எதிராக அக்கட்சியால் பயன்படுத்த முடியவில்லை.**

தென்னிலங்கையில் கிராமப்புறத்தில் உள்ள சாதாரண சிங்களக் குடிமகனுக்கு யாழ்ப்பாணம் என்றால் புலிகளின் குகை என்றுதான் ஒரு எண்ணம் இருக்கிறது.

எனவே ஐக்கிய தேசியக் கட்சி அரசால் முடியாததை பொது ஜன முன்னணி அரசு சாதித்துள்ளது. புலிகளின் குகையைப் பிடித்துள்ளது என்பதே பெரிய வெற்றியாக தெரிந்திருக்கும்.

**யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய செய்தியை இனவாத அர்த்தத்தில் பொது ஜன முன்னணி சொல்லாவிட்டாலும் கூட, எங்கோ கிராமத்தில் உள்ள சிங்களக் குடிமகன் அதனை இனரீதியான பெருமிதமாக நினைத்திருக்கலாம்.**

ஆக, யுத்த வெற்றி, ஐ.தே.கட்சியின் 17 வருட கால ஆட்சிமீதான குற்றச்சாட்டு என்ற இரண்டு பிரசார ஆயுதங்களை வைத்துக் கொண்டு இம்முறை புகுந்து விளையாடியது பொது ஜன முன்னணி.

**ஐ.தே.கட்சியின் பிரசார பலவீனம், ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு மாற்றாக கருதப்படக்கூடிய தலைமை இன்மை, அரச கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜன தொடர்பு சாதனங்களின் பிரசார பலம், மற்றும் அதிகார பலம் என்ற மேலதிக சாதகங்களும் பொது ஜன முன்னணியின் காட்டில் வாக்கு மழை கொட்ட வைத்தன.**

ஆனாலும், ஆயிரம் இருந்தும், வசதிகள் இருந்தும், ஆள், அம்பு சேனை இருந்தும் மினித் தேர்தல் களத்தில் பொது ஜன முன்னணி பெற்றுள்ள வெற்றியில் பலவீனங்களும் இல்லாமல் இல்லை.

தேர்தல் நடைபெற்ற 238 உள்ளூராட்சி சபைகளில் 194 சபைகளை கைப்பற்றியிருப்பது மேலோட்டமாகப் பார்க்கும்போது அமோக வெற்றியாகத் தெரியலாம்.

ஆனால், கடந்த பாராளுமன்ற தேர்தலிலும் அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தலிலும் வீசியடித்த சந்திரிக்கா அலையின் வேகம் இம்முறை தாழ்ந்திருக்கிறது.

**ஜனாதிபதித் தேர்தலில் 62 சதவீத வாக்குகளை அறுவடை செய்து சாதனை படைத்தவர் ஜனாதிபதி சந்திரிக்கா. இம் முறை 77 சதவீதமான வாக்காளர்கள் வாக்களித்தும்கூட ஏறத்தாழ 51 சதவீதமான வாக்குகள்தான் கிடைத்துள்ளன.**

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு-கிழக்கு மக்களும் வாக்களித்தனர். அந்த எண்ணிக்கையை கழித்துவிட்டுப் பார்த்தாலும்கூட இம் முறை தெற்கில் பொது ஜன முன்னணிக்கு வாக்குவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

**நகரப்புறங்களைவிட கிராமப்புறங்களில் தான் பொதுஜன முன்னணி இம் முறை அதிக எண்ணிக்கையான வாக்கு வித்தியாசத்தில் ஐ.தே.கட்சியை வெல்ல முடிந்துள்ளது.**

பிரசாரங்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், சுதந்திரமான தகவல்கள் மூலம் உண்மை நிலையை எடைபோடக்கூடிய வாக்களர்கள் நகரப்புறங்களில்தான் அதிகம்.

குறிப்பாக யுத்த வெற்றிப் பிரசாரங்களை கிராமப்புற மக்கள் சுலபமாக நம்பிவிடக் கூடும். ஆனால் நகரப்புற வாக்காளர்களுக்கு கிராமப்புற வாக்காளர்களைவிட பல தகவல்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு அதிகம்.

**மற்றொரு முக்கிய விடயம், கொழும்பிலும், மலையகத்திலும் உள்ள தமிழ் பேசும் வாக்காளர்கள் இம் முறை பொதுஜன முன்னணிக்கு குறைந்தளவே வாக்களித்துள்ளனர்.**

தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையை மிக அதிகளவில் பெற்ற முதலாவது சிங்களத் தலைவராக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் திகழ்ந்தவர் ஜனாதிபதி சந்திரிக்கா. வடக்கில் தேர்தல் நடைபெற்ற பகுதிகளிலும், கிழக்கிலும், மலையகத்திலும், கொழும்பிலும் பெருவாரியான தமிழ் பேசும் வாக்காளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிக்காவுக்கு அமோக ஆதரவளித்தனர்.

> **உள்ளூராட்சித் தேர்தல் நேரத்தில் புலிகள் ஏற்படுத்திய அதிர்வுகள் தேர்தல் களத்தில் பெரிதாக எதிரொலிக்கவில்லை! ஆயினும்-புலிகள் போரில் தோற்கடிக்கப்பட்டிருந்தால் பொதுஜன முன்னணி மாபெரும் வெற்றி பெற்றிருக்கும்!**

இம் முறை கொழும்பில் பொது ஜன முன்னணியின் ஆதரவுடன் போட்டியிட்ட சுயேட்சைக் குழுவுக்கு கணேசலிங்கம்தான் தலைவர். அப்படியிருந்தும் கணேசலிங்கத்துக்கு கிடைத்த விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை கூட ஆக பதினாலு ஆயிரம் மட்டும் தான். ஒரு வாக்காளர் மூன்று விருப்பு வாக்குகளை போட முடியும். அதன்படி பார்த்தால் ஐயாயிரம் தமிழ் பேசும் வாக்காளர்கள் கூட கணேசலிங்கத்துக்கு வாக்களிக்கவில்லை என்றாகிறது.

குறைந்தது 40 ஆயிரம் தமிழ் பேசும் வாக்காளர்களாவது கொழும்பு மாநகர சபையில் வாக்களித்திருப்பர் என்று கருதப்படுகிறது.

**மலையத்தின் தனிக்காட்டு ராஜா என்றழைக்கப்பட்ட தொண்டமான் ஆதரவளித்தும் கூட அவருக்கும், பொது ஜன முன்னணிக்கும் சேர்த்து படு தோல்வியைக் கொடுத்துள்ளனர் மலையக வாக்காளர்கள்.**

உள்ளூராட்சித் தேர்தலில் மிக அதிர்ச்சியான, ஆச்சரியமான விஷயம் அதுதான். அது மட்டுமல்ல கொழும்பில் தொண்டா சொல்லியும் கூட இ.தொ.கா. உறுப்பினர்கள் கூட பொது ஜன முன்னணிக்கு சார்பாக உற்சாகமாக வேலை செய்யவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலின் மூலம் தெரியும் மற்றொரு முடிவு: புதிய வாக்காளர்களை வென்றெடுக்க ஐ.தே.கட்சி தவறிவிட்டது. ஜனாதிபதி தேர்தலில் தனக்கு வாக்களித்த வாக்காளர்களில் குறிப்பிட்ட வீதத்தினரின் நம்பிக்கையை தக்கவைக்க பொது ஜன முன்னணி தவறிவிட்டது.

வாக்காளர்களில் ஒரு பகுதியினர் இரண்டு பிரதான கட்சிகளிலும் நம்பிக்கை இழந்த நிலையில் மூன்றாவது அணியொன்றை நாடத் தலைப்பட்டுள்ளனர். அதன் பிரதிபலிப்பாக ஜே.வி.பி.க்கு இரண்டரை இலட்சம் வாக்குகள் மொத்தமாகக் கிடைத்துள்ளன.

**தேர்தல் முடிவுகள் இனவாத சக்திகளுக்கு மரண அடி என்று சொல்லப்படுவதுகூட அவ்வளவு சரியாக இல்லை. ஏனெனில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் தூக்கி வீசப்பட்ட இனவாத கட்சி மகாஜன எக்சத் பெரமுனை. தினேஷ் குணவர்த்தன தலைமையிலான அக் கட்சிக்கு இத் தேர்தலில் மொத்தம் ஒரு இலட்சம் வாக்குகள் கிடைத்துள்ளன.**

இது பெரிய தொகையல்ல. ஆனால் இனவாத சக்திகள் வீழ்ச்சியடையவில்லை மறுபடி எழுந்துகொள்ள ஆரம்பித்துள்ளன என்பதன் அடையாளமாக கொள்ளப்படக் கூடியதுதான்.

பொது ஜன முன்னணிக்கு கிடைத்துள்ள வெற்றியை சமாதானத்துக்கு கிடைத்துள்ள வெற்றியாகவும், அரசியல் தீர்வுத் திட்டத்துக்கு கிடைத்துள்ள வெற்றியாகவும் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் கூறியிருக்கிறார்.

'விடிய விடிய ராமர் கதை, விடிந்த பின்னர் சீதை ராமருக்கு என்ன முறை?' என்ற கதையாக இருக்கிறது சிவசிதம்பரம் கூறியுள்ள கருத்து.

பொது ஜன முன்னணியின் வெற்றிக்கான காரணங்களில் ஒன்று: வடக்கு-கிழக்கு யுத்தம் தொடர்பான வெற்றிப் பிரசாரம்.

"இன்னும் ஒரு வருட காலத்திற்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவோம். புலிகளை வெற்றி கொள்ளுவோம்" என்று தேர்தல் பிரசார மேடைகளில் ஜனாதிபதியே வாக்குறுதி அளித்திருந்தார்.

**எக் கட்டத்திலும் புலிகளுடன் பேச்சு நடத்துவது பற்றியோ, சமாதானக் கதவுகளைத் திறப்பது தொடர்பாகவோ ஜனாதிபதி பேசவேயில்லை.**

அரசியல் தீர்வுத் திட்டம் இதுதான் என்று இன்னமும் முடிவு செய்யாத நிலையில், எந்த திட்டத்துக்கு கிடைத்த ஆதரவு என்று சிவசிதம்பரம் சொல்கிறார் என்பது தெரியவில்லை.

அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி பேசியிருந்தார். அது எத்தகைய தீர்வு என்பதை அவர் கோடிட்டுக் காட்டவில்லை என்பதுதான் முக்கியமான விஷயம்.

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் திடீர் திருப்பங்கள் ஏற்படும் என்று ஆருடங்கள் கூறப்பட்டன.

ஆனால் திருப்பம் எதுவும் தற்போதைக்கு ஏற்படப் போவதில்லை. பாராளுமன்ற பொதுத் தேர்தலை நடத்தக் கூடிய நம்பிக்கையையும் ஆளும் தரப்புக்கு தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தவில்லை.

**உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் பற்றி வெளியே என்ன சொல்லிக் கொண்டாலும், முதலாவது எச்சரிக்கை மணி ஒலித்துள்ளது என்பது ஆளும் தரப்புக்கு தெரியும்.**

ஆதரவு அலையில் வீழ்ச்சி ஏற்பட்டு வரும் நிலையில் அரசியல் தீர்வு போன்ற விஷப் பரீட்சைகளில் கண்ணை மூடிக் கொண்டு காலை வைக்க ஜனாதிபதி முன்வருவாரா என்பது சந்தேகம்தான்.

ஏனெனில், அரசியல் தீர்வு ஒன்றை முன்வைத்து சர்வஜன வாக்கெடுப்புக்கு சென்றால் ஐ.தே.கட்சி மட்டுமல்ல, ஜே.வி.பி, தினேஷ் குணவர்த்தனா கட்சி போன்றவையும் எதிர்க்கவே செய்யும்.

ஒருவேளை வடக்கு-கிழக்கு, மலையக வாக்குகளின் பலத்தில் சர்வஜன வாக்கெடுப்பில் தீர்வுத் திட்டம் தப்பிப் பிழைத்தால் அடுத்த பொதுத் தேர்தலில் சிங்கள மக்களின் கணிசமான வாக்குகள் பொது ஜன முன்னணிக்கு எதிராகத் திரும்பும்.

**எனவே-ஐ.தே.கட்சியின் ஆதரவு இல்லாமல் குறைந்த பட்ச அரசியல் தீர்வுத் திட்டத்தைக்கூட முன்வைக்க முடியாத நிலைதான் ஏற்பட்டுள்ளது.**

அது மட்டுமல்ல மற்றொரு முக்கிய விடயம் ஜனாதிபதி ஆட்சி முறை. அடுத்த பொதுத்தேர்தலில் ஆளும் தரப்பு வெற்றி பெற வேண்டுமானால் அதிகார பலமும் கணிசமாகத் தேவை என்பதை மினித் தேர்தல் அனுபவம் உணர்த்தியிருக்கும்.

எனவே ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றியமைக்க பொது ஜன முன்னணி முன்வரப்போவதில்லை.

ஜனாதிபதி ஆட்சி முறையை நீடிப்பதற்கு நியாயம் சொல்லவும் யுத்தம்தான் உதவும்.

யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கு உறுதியான தலைமைத்துவத்தை வழங்க நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி தேவை என்று கூறிக்கொள்ள முடியும்.

**ஆக, மொத்தத்தில் மினித் தேர்தல் முடிவுகள் இனப் பிரச்சனை, அரசியல் தீர்வு, யுத்தம் என்ற முக்கிய விடயங்களில் விரும்பக்கூடிய திருப்பத்தை ஏற்படுத்துவதாக அமையவில்லை.**

---

## அதிரடி அய்யாத்துரை



**தலைநகரில்** போட்டியிட்ட ஆளும் தரப்புக்கு ஆதரவான சுயேச்சைக் குழுவுக்குள் கடைசிக் கட்டத்தில் உட்பூசலாம். கணேசர் மேயராகக்கூடாது எண்டு பெரும்பான்மை இன வேட்பாளர் ஒருவர் வெளிப்படையாகவே சொல்லித்திரிந்தாராம். வெற்றிபெற்றால் நானே நகர பிதா எண்டு அடம்பிடிச்சாராம். கடைசியில் பார்த்தால் 'உள்ளதையும் கெடுத்தான் நொள்ளைக் கண்ணன்' எண்ட கதையாகிப் போச்சுதாம்.

**மீன்பாடும் தேனாட்டின்** தமிழ் வெகுஜனப் பிரதிநிதி அவர். அவரது பாரியாரிடம் வேலைவாய்ப்புக்காக பணம் கொடுத்தாராம் ஓர் இளைஞர். பணத்தையும் திருப்பிக் கொடுக்காமல், வேலையும் பெற்றுக் கொடுக்காமல் இருக்க இளைஞர் உணர்ச்சி வசப்பட்டாராம். பாரியாருக்கு படு கோபம். பலர் முன்பாக அந்த இளைஞரை செருப்பால் அடித்தாராம். இளைஞர் ரெண்டு எழுத்தாரிடம் முறையிட்டாராம். பாரியாரை விசாரணைக்கு வருமாறு ரெண்டு எழுத்தாளர் அழைத்தனர். பாரியார் இந்தா அந்தா எண்டு நாளைக் கடத்தினாராம். திடீரென்று ஒரு நாள் பிரதிநிதி வீட்டைச் சுற்றி சென்றி போட்டுவிட்டு உள்ளே புகுந்தாராம் ரெண்டு எழுத்துப் பொறுப்பாளர் ஒருவர். பச்சை மட்டையால் பாரியாருக்கு பலத்த பூசையாம்! சில மாதங்களுக்கு முன்னர் நடந்த பூசை இது. தகவலை நல்லா உறுதிப்படுத்த வேண்டியிருந்ததால் இந்தத் தாமதம். செல்வமுள்ள ராசாக்கள் செல்வம் சேர்க்க நினைத்தால் செல்வமில்லாப் பாவிகள் யாரிடம் சென்று முறையிடுவது? புரிந்தால் சரிதான்!

**இதுவும்** மற்றொரு தேனகச் செய்தி. கண்டனம், அவசரத் தந்தி என்றெல்லாம் தேனகப் பிரதிநிதிகள் சிலர் பெயரில் அடிக்கடி செய்தி வருவது தெரியும்தானே! விஷயம் அவுட்டாகிப் போச்சுது. குறிப்பிட்ட பிரதிநிதிகள் மேலிடத்துக்கு தந்தி அனுப்புவதோ, கடிதம் அனுப்புவதோ கிடையாதாம். பின்னர் எப்படிச் செய்தி வருகுது தெரியுமோ? சில செய்தியாளர்கள்தான் அவர்கள் பெயரில் அப்படி ஒரு செய்தியை தமது பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்புவது வழக்கமாம். செய்தியை அனுப்பிப்போட்டு, "அண்ணா நீங்கள் கண்டனம் செய்ததாகவும் அம்மையாருக்குக் கடிதம் போட்டதாகவும் செய்தி கொடுத்துப் போட்டேன்!" எண்டு தெரிவிக்கப்படுமாம். அதற்கேற்ப அவ்வப்போது அன்பான கவனிப்பாம். பாவம் மக்கள்!

**கூட்டான கட்சியின்** நீலமானவர் மூலமாக மேலிடத்தில் இருந்து ஆதரவு கேட்கப்பட்டதாம். அதனால்தான் கடைசி நேரத்தில் எலக்‌ஷனில் மூக்கை நுளைச்சு அறிக்கை விடப்பட்டதாம். தலைநகரில் சற்றுத் தள்ளாட்டம். தமிழ் வாக்குகள் திசைமாறும் எண்டு அறிந்தபின்னர்தான் மேலிடம் உதவி கேட்டதாகத் தகவல். "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு!" பார்த்தியளோ? நட்பின் இலக்கணமாகவே மாறிப் புல்லரிக்க வைச்சுப் போட்டினம் கூட்டான கட்சியினர். கொள்கைகளை மறந்தாலும் குறளை மறக்கேல்லை.

**"இரண்டு மணிக்குப் பின்னர் வாக்குச் சாவடிப் பக்கம்** தலைகாட்டினால் சுட்டுப்போடுவோம்!" எண்டு சில பகுதிகளில் சனத்துக்கு பகிரங்க மிரட்டலாம். வெளியே வராத சனம் சார்பாக வாக்கும் போடப்பட்டதாம். இதெல்லாம் பரவலாக அடிபடும் பேச்சுக்கள். எப்படியோ எதிர்காலத்தில் எப்போதாவது ஆட்சி மாறினால், அப்போது ஒரு விசாரணைக் கமிஷன் வைக்கலாமல்லோ. அதற்காக இப்பவே புகார்களை கட்டுக் கட்டாக வைச்சிருக்கினமாம் எதிர்த்தரப்பார்.

**வவுனியாவில்** மர்மமாகக் கொல்லப்பட்ட இரு பெண்களும் ரெண்டு எழுத்தார் பற்றி தகவல் கொடுப்போராம். அவர்களுக்கும் அவர்களிடம் தகவல் பெறுவோருக்கும் இடையே ஏற்பட்ட ஊடல் கூடல் விவகாரம்தான் கொலையில் முடிந்ததாம். தமிழ் அமைப்பு ஒன்றின் மூலமாக கதை முடிக்கப்பட்டது எண்டு பட்சி சொல்லுகுது.

**"நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்.."** எண்டு ஆட்சிக்கு வருவோரை மிரட்டிக் கொண்டிருந்தவர் மலையகத் தனித்துவத் தலைவர். இந்தமுறை அவர் ஆணையிட்டாலும், சனம் மட்டும் புள்ளடியை ஆனைக்கு இட்டுப் போட்டுதுகள்! பொல்லடி விழுந்தமாதிரி கலங்கிப் போயிருக்கிறாராம் தலைவர்.

ஓர் அருமையான பொன் மொழி.

உபயம்: தமிழ்வாணன்.

**"காலம் ஓடுகிறது;**
**நாம் நடக்கிறோம்.**
**அதனால்தான் நம்மால்**
**முன்னுக்கு வர முடியவில்லை!"**



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

182

# சரணடைந்த புலிகளின் பொறுப்பாளர்

## குவியலாய் நகைகள் – சாக்குகளில் பணம்

**பட்டப் பெயர்கள்**

யாழ் குடாநாடு இந்தியப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபின்னர் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாகின.

இந்தியப் படையினரின் நடவடிக்கைகள் தொடர்பாக யாழ் குடாநாட்டு மக்களிடம் பயமும், அதிருப்தியும் காணப்பட்டன. அதே சமயம் மக்கள் மத்தியில் ஒரு சாரார் இந்தியப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கவும் செய்தனர்.

சில பகுதிகளில் இந்தியப்படையினர் மக்களுடன் விரோதமில்லாமல் நடந்து கொண்டனர். புலிகள் தாக்கினால் மட்டுமே பதிலடியாக மூர்க்கத்தனமான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டனர். சாதாரண சமயங்களில் சாதுக்களாக நடந்து கொண்டனர்.

குறிப்பிட்ட பகுதிகளில் நிலை கொண்டிருந்த இந்தியப் படைப் பிரிவுகளுக்கும் அப்பகுதிகளில் உள்ள மக்களுக்கும் இடையே சுமுகமான உறவுகள் ஏற்படத் தொடங்கின.

தமது பகுதிகளில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையின் முக்கிய பொறுப்புக்களில் இருந்தவர்களுக்கு அப் பகுதிகளில் உள்ளவர்கள் பட்டப் பெயர்களையும் சூட்டியிருந்தனர்.

சத்யராஜ், அமிதாப்பச்சன், கமல், ரஜினி என்று நடிகர்களின் பெயர்களே பட்டப்பெயர்களாகச் சூட்டப்பட்டன.

பாடசாலைகள் இயங்கத் தொடங்கிய போது காவல் நிலைகளில் இருந்த படையினர் மாணவிகளுடன் சேட்டைகள் புரிந்தனர். கேலி செய்தனர்.

அதேநேரம் சில மாணவிகளுக்கும் காவல் நிலைகளில் பணிபுரிந்த இந்தியப் படையினர் சிலருக்கும் இடையே நட்பும் ஏற்பட்டது. அந்த நட்பு மெல்ல வளர்ந்து காதலாக மாறிய சம்பவங்களும் இருக்கின்றன.

ஹிந்திச் சொற்களை புரிந்துகொண்டு இந்தியப் படையினருடன் நட்பாகி நன்றாக ஹிந்தி பேசப் பழகியவர்களும் பலர் இருந்தனர்.

பொதுமக்களுக்கும், இந்தியப் படையினருக்கும் இடையே நல்லுறவுகளும், நட்பான சூழலும் காணப்பட்டபோது புலிகள் எரிச்சல் அடைந்தனர்.

இப்படியே விட்டால் இந்தியப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதை மக்கள் விரும்பப்போகிறார்கள்.

அது மட்டுமல்லாமல் இந்தியப் படைக்கும்-மக்களுக்கும் பரஸ்பர உறவுகள் ஏற்பட்டால் தம்மைப்பற்றிய தகவல்களும் போய்ச் சேர்ந்துவிடும். யார் தகவல் கொடுக்கிறார்கள் என்றும் கண்டு பிடிக்க முடியாது என்று புலிகள் சஞ்சலம் அடைந்தனர்.

அதனால் இந்தியப் படையினரோடு நட்பாக இருப்பவர்கள், சிரித்துப் பேசுபவர்கள், இந்தியப் படை முகாம்களுக்கு சென்று வருவோர் துரோகிகளாகக் கருதப்படுவர் என்று எச்சரிக்கப்பட்டனர்.

**மனைவி கைது.**

யாழ்ப்பாணத்தில் மானிப்பாய், நவாலி பகுதிகளில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினருக்கு ஒரு தகவல் எட்டியது.

மிக முக்கியமான தகவல் அது.

புலிகள் இயக்க மானிப்பாய் பொறுப்பாளராக இருந்தவர் மயூரன்.

யாழ் குடாநாட்டில் இந்தியப் படையினர் வருகைக்கு முன்னர் புலிகள் பாரிய நிதி திரட்டலில் ஈடுபட்டிருந்தனர். மானிப்பாய் பகுதியிலும் பெருந்தொகையான பணமும், நகைகளும் போராட்ட நிதியாகத் திரட்டப்பட்டன

திரட்டப்பட்ட நிதியில் ஒரு பகுதியை தலைமையிடம் ஒப்படைத்த மயூரன் மறு பகுதியை தன் பொறுப்பில் வைத்திருந்தார்.

இந்தியப் படையினர் மானிப்பாய், நவாலிப் பகுதியைக் கைப்பற்றிய பின்னர் மயூரன் அங்கு எங்கோதான் பதுங்கி இருக்கிறார் என்று இந்தியப் படையினருக்கு தெரிய வந்தது.

மயூரனைச் சல்லடை போட்டுத் தேடினார்கள்.

அப்போதுதான் அந்தத் தகவல் கிடைத்தது.

மயூரன் திருமணமானவர். அவரது மனைவி ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்தவர். அவரது வீட்டாரும் பெரும் பணக்காரர்கள். ஆனைக்கோட்டை உயரப்புலம் என்னும் இடத்திலுள்ள வீட்டில்தான் மயூரனின் மனைவி இருக்கிறார். என்பதுதான் தகவல்.

படையினர் விரைந்தனர்.

மயூரனின் மனைவி கைதானார்.

'மயூரனின் மனைவியை விடுதலை செய்யவேண்டுமானால், மயூரன் சரணடைய வேண்டும்' என்று கூறிவிட்டனர் இந்தியப் படையினர்.



யாழ் மணிக்கூட்டு கோபுரம் அருகே இந்தியப் படை

**ஆயுதங்கள்–நகைகள்**

மனைவி கைது செய்யப்பட முன்னர் மயூரன் ஒரு திட்டத்தோடு இருந்தார். தன் பொறுப்பில் இருந்த நகைகளையும், பணத்தையும் சுருட்டிக்கொண்டு வெளிநாடு செல்வதுதான் மயூரனின் திட்டம்.

ஏற்கனவே பல சுருட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் மயூரன். சிறுவர்களின் பொழுது போக்குக்காக சிறுவர் பூங்காக்களை யாழ் குடாநாட்டின் பல இடங்களில் புலிகள் அமைத்திருந்தனர்.

மானிப்பாயில் உள்ள ஆனைக்கோட்டையில் உள்ள கூழாவடி என்னும் இடத்தில் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டது. அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலும் ஒரு பெரிய தொகையை அமுக்கிக் கொண்டவர் மயூரன்.

இது தவிர மயூரன் தொடர்பாக பல புகார்கள் முன்னரே இருந்தன.

இந்நிலையில் இந்தியப் படையினர் யாழ் குடாநாட்டை கைப்பற்றியதும் கம்பி நீட்டத் திட்டமிட்டார் மயூரன்.

புலிகள் இயக்க முக்கிய தலைவர்கள் யாழ் குடாநாட்டில் இல்லையென்பதால் மயூரனுக்கு கம்பி நீட்டும் தைரியம் வந்தது.

ஆனால் அவரது மனைவி கைது செய்யப்பட்டதால், வேறு வழியின்றி இந்தியப் படையினரிடம் சென்று சரணடைந்தார் மயூரன்.

கட கடவென்று மயூரன் சகல தகவல்களையும் கக்கினார். ஆயுதங்கள், பணம், நகை புதைத்து வைத்திருந்த இடங்களையெல்லாம் காட்டிக் கொடுத்தார்.



இந்தியப் படை–நிவாரண உதவி

நவாலியில் வீரசிங்கம் வளவு என்று இருக்கிறது. மிகப் பெரிய அந்த வளவுக்குள் பாழடைந்த ஒரு பெரிய வீடும், தென்னை, மா, கொய்யா மரங்களும் இருந்தன.

அங்குதான் ஆயுதங்களைப் புதைத்து வைத்திருந்தனர்.

தோண்டத் தோண்ட ஆயுதங்கள். இரண்டு லொறிகளில் அங்கிருந்த ஆயுதங்களையும், ஏனைய உபகரணங்களையும் ஏற்றிச் சென்றனர்.

மயூரன் வசம் இருந்தபணமும், நகைகளும் வேறொரு இடத்திலும் புதைத்து வைக்கப்பட்டிருந்தன.

சாக்குக் சாக்காக ரூபாய் நோட்டுக்கள். பெட்டி பெட்டியாக தங்க நகைக் குவியல்கள்.

எல்லாமுமாக அப்போதைய பெறுமதியே பல இலட்சங்கள் தேறும். இப்போது என்றால் குறைந்தது ஒரு கோடியாவது தேறும்.

தமக்குத் தேவையான தகவல் தந்தால் விடுதலை செய்வதாக மயூரனுக்கு உத்தரவாதம் கொடுத்திருந்தனர் இந்தியப் படை அதிகாரிகள்.

அதன்படி பின்னர் மயூரன் விடுதலை செய்யப்பட்டார். புலிகளிடம் மாட்டினால் அதோ கதிதான் என்று பயந்து கொழும்புக்கு தப்பி வந்தார். கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள ஹோட்டலில் தங்கியிருந்தார். பின்னர் கனடாவுக்கு பறந்து சென்றார். தற்போது கனடா பிரஜையாக இருக்கிறார்.

மானிப்பாயில் கைது செய்யப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்களில் முக்கியமான மற்றொருவர் ஐயர். சுதுமலையைச் சேர்ந்தவர். மயூரனின் பொறுப்பின்கீழ் செயற்பட்டவர்.

இந்தியப் படையினரிடம் மாட்டிய ஐயர் தமக்குத் தெரிந்த இயக்க உறுப்பினர்கள் தொடர்பான விபரங்கள் அனைத்தையும் ஒப்புவித்தார். மானிப்பாயில் உள்ள புலிகள் இயக்க உறுப்பினர்கள் அனைவரது விபரங்களும் ஐயருக்கு அத்துப்படி. ஐயர் கொடுத்த விபரங்கள் மூலமாக புலிகள் இயக்க உறுப்பினர்கள் மட்டுமன்றி, மானிப்பாயில் இருந்த புலிகள் இயக்க ஆதரவாளர்கள் பலரும் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

**கப்டன் பலி**

மானிப்பாய்-நவாலிப் பகுதியில் இந்தியப் படையினரை எதிர்த்து புலிகள் இயக்க கீழ் மட்ட உறுப்பினர்கள் போரிட்டனர்.

இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பில் சிக்கிய புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலர் மானிப்பாயில் சயனைட் உட்கொண்டு பலியானார்கள்.

நவாலியில் இந்தியப் படையினரின் ஒரு பிரிவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

இந்தியப் படையினருக்கும் ஊரிலுள்ள நாய்களுக்கும் எட்டாப் பொருத்தம். இரவில் அல்லது அதிகாலையில் இந்தியப் படையினர் பதுங்கி பதுங்கி நடந்து செல்வர். உடனே நாய்கள் பலமாகக் குலைக்கத் தொடங்கி விடும்.

எங்காவது புலிகள் தூங்கிக் கொண்டிருந்தால்கூட நாய்கள் குலைக்கும் சத்தம் கேட்டு எழுந்து தப்பிச் சென்றுவிடுவர்.

அதிலும் வேடிக்கை என்னவென்றால் புலிகளைக் கண்டால் நாய்கள் குரைக்காமல் இருந்துவிடுவதும் உண்டு. இந்தியப் படையினரைக் கண்டால் நிச்சயமாக குரைக்கத் தொடங்கிவிடும்.

அதனால் இந்தியப் படையினருக்கு நாய்கள்மீதும் சற்று எரிச்சல்தான்.

நவாலியிலும் அப்படித்தான் நடந்தது. அதிகாலையில் ரோந்து நடவடிக்கைக்காக சென்று கொண்டிருந்தனர் இந்தியப் படையினர்.

நாய்கள் விடாமல் குரைக்கத் தொடங்கின. பதுங்கியிருந்த புலிகள் உஷாராகினர்.

வளவு ஒன்றுக்குள் பதுங்கியிருந்து இந்திய ரோந்துப் பிரிவுமீது புலிகள் தாக்குதல் நடத்தினர்.

**எதிர்பாராத திடீர் தாக்குதல்.**

இந்தியப் படை தரப்பில் கப்டன் சிவசாமியும், மேலும் சில படையினரும் கொல்லப்பட்டனர்.

புலிகள் தாக்கிவிட்டு வளவுகள் ஊடாகப் பாய்ந்து சென்றுவிட்டனர்.

தமது கப்டன் பலியானதால் ஆத்திரம் கொண்ட படைவீரர்கள் புலிகள் பதுங்கியிருந்து தாக்கிய வளவுக்குள் இருந்த வீட்டுக்குள் புகுந்தனர்.

அந்த வீட்டுக்குள் இருந்த 53 வயதான ஒரு பெண்மணியை இந்தியப் படையினரின் துப்பாக்கிகள் சல்லடை போட்டன.

**ஆசிரியர் பலி**

இப்படித்தான் இன்னொரு சம்பவம். யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியில் இராணுவ காவலரண் ஒன்று இருந்தது.

புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கைக்குண்டொன்றை அக் காவலரண்மீது வீசிவிட்டு ஓடிவிட்டார்.

கைக்குண்டுவீச்சில் இராணுவத்தினர் சிலர் காயமடைந்தனர். உடனே அவர்களது சகாக்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி வழியாக கண்மூடித்தனமாகச் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி சென்றனர்.

எதிரில் வந்தவர்கள், நின்றவர்கள் எல்லோர்மீதும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

துப்பாக்கிச் சூடு பட்டு விழுந்து கிடந்தவர்களில் இருவர் கைகுலுக்கிய நிலையில் பிணமாகக் கிடந்தனர்.

அவர்களில் ஒருவர் பெயர் ஜேம்ஸ் அருமை நாயகம். மற்றவர் அந்தோனிப் பிள்ளை புருனோ கிறிஸ்டி.

சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியரான ஜேம்ஸ் அருமை நாயகத்தின் மாணவன்தான் புருனோ கிறிஸ்டி. பாஷையூரைச் சேர்ந்தவர். பேராதனை பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பட்டப்படிப்புப் படித்து திறமை சித்தி அடைந்த புருனோ கிறிஸ்டி தனது ஆசிரியரைச் சந்தித்து ஆசீர்வாதம் வாங்கச் சென்றிருந்தார்.

தன் மாணவன் திறமைச் சித்தி அடைந்தான் என அறிந்து வியந்த ஆசிரியர் ஜேம்ஸ் அருமைநாயகம் உச்சிகுளிர்ந்தார். மாணவனுக்கு கைலாகு கொடுத்து பாராட்டினார். அப்போதுதான் சூடு விழுந்தது.

ஆசிரியரும் மாணவனும் அப்படியே பிணமாக விழுந்தனர். அருகில் நின்ற ஆசிரியரின் மனைவி விழுந்து படுத்துக் கொண்டதால் உயிர்தப்பினார்.

கிட்டத்தட்ட பத்துப்பேர் இச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர்.

எவ்வாறுதான் பொதுமக்களுடன் நல்லுறவுடன் நடந்து கொள்ள முற்பட்டாலும்கூட, தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டால் தமிழ் மக்கள் யாவரையுமே எதிரிகளாகவே நினைத்துச் செயற்பட்டது இந்தியப் படை.

புலிகள் தாக்கியதால்தானே அவர்கள் இப்படி நடந்து கொண்டார்கள் என்பது ஏற்கமுடியாத வாதமாகும்.

வரிந்துகட்டி விதண்டாவாதம் புரிவதற்காக முன்வைக்கப்படும் வாதமாக அது அமையலாமே தவிர, இந்தியப் படையினரின் கட்டுப்பாடற்ற நடவடிக்கையை நியாயப்படுத்த முடியாது.

**கைதுகள்**

புலிகள் இயக்கத்தினருக்கு உணவு சமைத்துக் கொடுத்தவர்கள், உதவி செய்தவர்கள், வீடு கொடுத்தவர்கள் என்று பலர் கைது செய்யப்பட்டனர்.

பல பெண்களும் அவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். கெட்ட வார்த்தைகளால் தூஷிக்கப்பட்டனர்.

புலிகள் இயக்க உறுப்பினர்களுடன் அவர்களை இணைத்து தரக்குறைவான கேள்விகளும் கேட்கப்பட்டன.

கட்டுமஸ்தான தோற்றம் கொண்ட ஆண்கள் புலிகள் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டனர்.

புலிகள் என்றால் உடல்ரீதியாக நல்ல பலசாலிகளாக இருப்பார்கள். பார்வைக்கு முரட்டுத்தனமாக இருப்பார்கள். பெரிய மீசை வைத்திருப்பார்கள் என்றெல்லாம் இந்தியப் படையினர் தமது விருப்பப் படியெல்லாம் கற்பனை செய்து கொண்டனர்.

புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அப்போது அடர்த்தியான மீசை வளர்த்திருந்தார். புலிகளின் முக்கிய தளபதிகளும் தமது தலைவர் போல மீசை வளர்த்திருந்தனர்.

புலிகளுடன் போர் ஆரம்பமான பின்னர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இந்தியப் படையினருக்கு பிரபாகரனையோ, ஏனைய புலிகள் இயக்க முக்கிய பிரமுகர்களையோ நேரில் காணும் சந்தர்ப்பம் இருக்கவில்லை. புகைப்படங்களில் பார்த்திருப்பார்கள். அதனைவைத்து அவர்கள் மனதில் உருவான சித்திரம்தான் கட்டுமஸ்தான தேகமுடைய இளைஞர்களுக்கு சோதனையாக அமைந்தது.

கைது செய்யப்பட்ட தோற்றப் பொலிவான இளைஞர்கள் சிலரை அவர்கள் எங்கு கைது செய்யப்பட்டனரோ அப் பகுதி பொறுப்பாளராகவே குற்றம் சாட்டிய வேடிக்கைகளும் நடந்துள்ளன.

**ஏனைய இயக்கங்கள்**

கைதுகள், படுகொலைகள், பாலியல் பலாத்காரங்கள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, மறுபுறம் அவற்றின் தாக்கத்தால் மன நோய்களும் ஏற்படத் தொடங்கின.

மன நோயால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் யாழ் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அந்த இளம் பெண்ணை ஆஸ்பத்திரியில் கடமையில் இருந்த இந்தியப் படையினர் தாதிமார் உடைமாற்றும் அறைக்கு கொண்டுசென்றனர். அங்குவைத்து பாலியல் பல்லுறவுக்கு உட்படுத்தினார்கள். தொடர்ந்து நான்கு இரவுகள் அவ்வாறு பாலியல் வல்லுறவு மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் அப் பெண் காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கும் பாலியல் பலாத்காரம் தொடர்ந்தது.

பனையேறி விழுந்தவனை மாடேறி மித்ததுபோல தொடர் துன்பங்கள் மக்களை ஆட்டிப் படைத்தன.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது– இராஜதந்திரி



# தலைவிதியைத் தீர்மானிக்கும் இராணுவ அணுகுமுறைகள்

இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர் ஓ.எஸ்.எம். செனிவிரட்ண தலைமையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவொன்று இலங்கையில் அமைக்கப்பட்டுள்ளது.

அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் கூடுதல் அதிகாரங்களைக் கொண்டதாக இந்த ஆணைக்குழு அமையுமென்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

இலங்கையின் சர்வோதயத் தலைவர் ஏ.ரி.ஆரியரட்ணவும் இந்த ஆணைக்குழுவில் ஓர் உறுப்பினராக இடம்பெறுகிறார்.

**மனித உரிமைகள் செயலணிக்குழு என்ற அமைப்பை ஏற்கனவே அரசு ஏற்படுத்தியிருந்தது. இந்த அமைப்பு உருவானதன் பின்னர்கூட, கடந்த காலங்களில், பல்வேறு வடிவத்திலும் மனித உரிமை மீறல்கள் நடந்திருந்தன. கொலை, சித்திரவதை, ஆட்கடத்தல் என்பவை மட்டும் அடிப்படை மனித உரிமை மீறல்களல்ல; ஜனநாயக நாடொன்றில் அனைத்து உரிமைகளையும் பெற்ற பிரஜைகளைப் பாதிக்கும் எந்தவொரு அடாவடித்தனமும் அடிப்படை மனித உரிமை மீறலாகவே கொள்ளப்படும்.**

இந்த நாட்டில் அடிப்படை மனித உரிமைகள்பற்றிப் பேசும்போது கடந்த 17 வருடகால ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் நிலவிய கொடுமைகள் மற்றும் வடக்கு–கிழக்கு யுத்தத்தினால் தோன்றிய கொடுமைகள் என்பன பற்றியே பேசப்படுவதுண்டு.

ஆனால் அடிப்படை மனித உரிமை மீறல்கள் என்பது, இலங்கை சுதந்திரமடைந்ததுமுதற்கொண்டு, நேரடியாகவோ, மறைமுகமாகவோ இடம்பெற்று வருவதையே காணமுடிகின்றது.

இன ரீதியாக ஏற்பட்ட மொழிப் பிரச்சினையைக் கூட அடிப்படை மனித உரிமைமீறல் சார்ந்ததாகவே கொள்ளவேண்டும். மலையக மக்களின் வாக்குரிமைகூட ஒருகாலத்தில் பறிக்கப்பட்டிருந்தது. அதுகூட அடிப்படை மனித உரிமைமீறல் சார்ந்ததேயாகும்.

சுதந்திரத்துக்குப் பின்னர் கல்வி, தொழில்வாய்ப்பு, குடியேற்றங்கள் என்பவை குறித்துக் காணப்பட்ட நிலைப்பாடுகள்கூட அடிப்படை மனித உரிமை மீறல் சார்ந்தவையே.

இனரீதியாக ஆரம்பித்த அடிப்படை மனித உரிமை மீறல்கள் காலப்போக்கில் நாடளாவிய ரீதியில் வியாபிக்க ஆரம்பித்தன.

இதன் காரணமாகவே இலங்கையில், 1971ம் ஆண்டில், சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சி உருப்பெற்றது. இக் கிளர்ச்சியை அடக்கும் விதத்தில் கையாளப்பட்ட அணுகுமுறைகள் பலவும்கூட அடிப்படை மனித உரிமை மீறல்களாகவே இருந்தன.

தமிழ் மக்கள் மீதும் அடக்கு முறைகள், மனித உரிமை மீறல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. தமிழ் இளைஞர்களும் தீவிரவாதப் போக்கில் நாட்டம் கொண்டனர்.

இதன்பின்னர் அடிப்படை மனித உரிமைகள் என்பதன் அர்த்தம்கூட முற்றிலுமாக மழுங்கடிக்கப்பட்டது. அடிப்படை மனித உரிமைகள் என்ற விடயத்தை, ஒரு நீண்ட உள்நாட்டு யுத்தம் தாறுமாறாகப் புறக்கணித்துவிட்டுள்ளது.

**வடக்கு–கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல; தென்னிலங்கையில்கூட அண்மைக்காலங்களில் சிங்கள மக்கள் மத்தியிலும் அரசியல், சமூகப் பிரச்சினைகள் காரணமாக வகை, தொகையின்றி அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதைக் காணமுடிந்தது.**

எனவே இலங்கையில் அடிப்படை மனித உரிமை மீறல்கள் என்ற விடயம் நிரந்தரமாகவும், ஒரு தொடர்கதையாகவும் செல்வதைத் தவிர்க்கும் விதத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவொன்றை அமைத்துள்ளதாக அரசு கூறியுள்ளது.

**இருந்தபோதிலும், ஒரு நீடித்த, அர்த்தமற்ற யுத்தமொன்றைக் கொண்டுள்ள நாட்டில் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பணி மிகவும் சிரமமானதாகவே இருக்கும்.**

செயலணிக்குழு, ஆணைக்குழு என்று பல்வேறு அமைப்புகளும் மனித உரிமைகளைப் பாதுகாக்க முன்வரலாம். ஆனால் ஆட்சியதிகாரங்களில் இருப்போரின் நடவடிக்கைகளில் நேர்மையைக் காண முடியாவிட்டால் எந்தவொரு முயற்சியும் பயனற்றதாகவே இருக்கும்.

இலங்கையில் அடிப்படை மனித உரிமை மீறல்களின் ஆரம்பம், எவ்விதத்தில் அவை மீறப்பட்டுள்ளன என்பவற்றை ஆராயும் பட்சத்தில், காலத்துக்குக் காலம் ஆட்சியதிகாரங்களில் இருந்தவர்களே மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பாளிகளாக இருந்துள்ளதை அறியமுடியும்.

அரசியல் அமைப்பு ரீதியாக நிர்வாகங்கள், அதிகாரங்கள், ஆட்சிமுறை என்பவற்றை மாற்றியமைக்கும் அம்சங்கள் இடம்பெற்றனவே தவிர, அடிப்படை மனித உரிமைகளை இடித்துரைக்கும் விடயங்கள் எதுவுமே காணப்படவில்லை.

இந்நிலையில், இன்றைய அரசாங்கம் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கவென ஆணைக்குழுவொன்றை அமைத்திருப்பது வரவேற்கக்கூடியதொரு விடயமாகும். இருந்தபோதிலும் அந்த ஆணைக்குழுவின் வெற்றிகரமான நடவடிக்கைகள், ஆட்சியதிகாரங்களில் இருப்போரின் அரசியல் சார்ந்த அணுகுமுறைகளிலேயே பெரிதும் தங்கியிருக்கின்றது.

உலகில் இன்று பல்வேறு நாடுகளிலும் அடிப்படை மனித உரிமைகள்பற்றி அதிகம் பேசப்படுகின்றன. ஆனால் மறுபுறத்தே அரசியல், பொருளாதார ரீதியாகக் காத்திரத்தன்மையைப் பேண முடியாதவிடத்து அடிப்படை மனித உரிமைகளைப் பேண முடியாதென்பதை பலநாடுகள் அனுபவரீதியாகவே உணர்ந்துள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை கூட அரசியல், பொருளாதார ரீதியான காத்திரத்தன்மை என்பது நிலை தளர்ந்து போயுள்ளது.

இலங்கை ஒரு ஜனநாயக சோஷலிசக் குடியரசு என்று அழைக்கப்படுகின்றது. ஆனால் கடந்த 17 வருடங்களுக்கும் மேலாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை என்பது ஏறத்தாழ ஒரு சர்வாதிகாரப் போக்கைக் கொண்டதாகவே இருக்கின்றது.

அரசியல் விடயங்களுடன், இராணுவ ரீதியான செயற்பாடுகளும் ஆட்சியதிகாரத்தை நிர்ணயிப்பவையாகவுள்ளன.

**வடக்கு–கிழக்கில் கடந்த 17 வருடங்களுக்கும்மேலாக 'ஓர் இராணுவத்தர்பாரே' இருந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய நிலை, நாட்டில் ஒருபகுதி மக்களின் தலைவிதியை இராணுவ அணுகுமுறைகளே நிர்ணயிப்பதையும் புலப்படுத்துகின்றது.**

எனவே எந்தவொரு நாட்டில் இராணுவம் வியாபிக்க ஆரம்பிக்கின்றதோ அங்கு அடிப்படை மனித உரிமைகளுக்கும் படிப்படியாக கால்கட்டுக்கள் போடப்படும் சூழ்நிலைகளே தோற்றம் பெறுகின்றன.

**இந்நிலையில் முற்றுமுழுதாக அடிப்படை மனித உரிமைகள் பேணப்படுவதற்கு இராணுவ ரீதியான அழுத்தங்கள் குறைவடைய வேண்டியது அவசியமானதாகின்றது.**

இராணுவ ரீதியான அழுத்தங்களைக் குறைப்பதற்கு அரசியல் நடவடிக்கைகள் விரிவடைந்து உறுதிபெற வேண்டியது அவசியமானதாகின்றது.

அரசியல் நடவடிக்கைகள்கூட பரந்துபட்டதாகவும், சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, போன்ற அடிப்படை ஜனநாயக அம்சங்களைக் கொண்டவையாகவும் அமைய வேண்டும்.

அரசியல் அணுகுமுறைகள், ஜனநாயக நடைமுறைகள் என்ற போர்வையில் ஆட்சியதிகாரங்களில் இருப்போர் பிடிவாதப் போக்கையும், தம் மனம் போனபோக்கில் சுயநலமானவற்றையும் முதன்மைப்படுத்துவார்களேயானால் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வைக்கண்டுவிட முடியாது.

கெடுபிடியினால் ஏற்பட்டுள்ள விளைவுகளுக்கு வடக்கு–கிழக்குப் பிரச்சினை ஒருநல்ல உதாரணமாக இருக்கின்றது.

இப்பிரச்சினை தொடர்பாக எதிரும், புதிருமாக நிற்கும் இருசாராருமே வளைந்து கொடுக்காதமையினாலேயே காரசாரமான நிலைக்கு அப் பிரச்சினை வந்துள்ளது.

**வடக்கு–கிழக்குப் பிரச்சினைக்கு யுத்தமல்ல, அரசியல் தீர்வே ஏற்புடையதாக இருக்குமென்பதனை தற்போது இடம் பெற்றுவரும் நிகழ்வுகள் எடுத்தியம்புகின்றன.**

பொருளாதார ரீதியாக நீண்டதோர் யுத்தத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் இலங்கை அரசு திண்டாடுகிறது. இதுவரை 16க்குமதிகமான விமானங்களை ஆயுதப் படையினர் இழந்துள்ளனர். இவை அனைத்துமே பலகோடி ரூபா பெறுமதியானவையாகும்.

இவற்றைவிட நாளுக்கு நாள் ஏற்படும் உயிரிழப்புகள் கூட படையினர் தரப்பில் பெரும் பணநஷ்டத்துக்கே இடமளிக்கின்றன.

தொடர்ந்து ஒரு யுத்தத்தை முழுப்பலத்துடன் முன்னெடுப்பதற்கு முன்னெப்போதுமில்லாதவாறு பண ஒதுக்கீடுகளை அரசு ஒதுக்கவேண்டியிருக்கும். யுத்தம் மற்றும் பாதகமான பொருளாதார நிலை காரணமாக இலங்கை நாணயத்தின் பெறுமதி நாளுக்கு நாள் குறைவடைந்து செல்கின்றது.

இந்நிலையில் தொடர்ந்து விமானங்களையும், கப்பல்களையும் வாங்கி யுத்தம் புரிவதென்பது, பெரும் சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நிலையையொத்தாகவே இருக்கும்.

எனவே யுத்தநெருக்கடி, பொருளாதார நெருக்கடி என்பவற்றுக்கு மத்தியில் அரசியல் நடவடிக்கைகளும் ஆட்டங்காணவே செய்யும்.

அத்தகைய நிலைமையில் அடிப்படை மனித உரிமைகளும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மீறப்படும்.

இந்நிலையில் இலங்கையில் புரையோடிப்போயுள்ள வடக்கு–கிழக்குப் பிரச்சினைக்கு எட்டப்படும் இறுதியும் முடிவுமான அரசியல் தீர்வே, உயர்ந்த தரத்தில் அடிப்படை மனித உரிமைகளையும் பேணுவதற்கு வழியமைக்கும் எனக் கருத முடியும். ■

# கூட்டணி அடித்த 'பல்டி'

**உள்ளூராட்சித் தேர்தலைப் பின்போடுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார் கூட்டணித் தலைவர். 'முடியாது' என்று சொன்னார் ஜனாதிபதி. பின்னர் கூட்டணியே தேர்தல் களத்தில் தலையைநீட்டி பொ.ஜ.முன்னணியையும் ஆதரித்தது.**

வடக்கு–கிழக்கு தவிர்ந்த உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன முன்னணியை கடைசி நேரத்தில் ஆதரித்து அறிக்கை விட்டது கூட்டணி.

கடந்த பாராளுமன்றத் தேர்தலிலும், அதன் பின்னரும் கூட்டணியினர் கூறிவந்த அல்லது தம்மை சாணக்கியர்களாகக் காட்ட முயன்ற நிலைப்பாடுகளுக்கு நேர்மாறானதாக அது அமைந்தது.

**'அரசும்–புலிகளும் பேசவேண்டும். யுத்தம் நிறுத்தப்படவேண்டும். அதற்கு ஒரே நம்பிக்கை சந்திரிக்காவே' என்று கடந்த பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் கூட்டணியினர் கூறினர்.**

அந்த நிலைப்பாடு காரணமாகவே பாராளுமன்றத்தில் பொதுஜன முன்னணி அரசுக்கு ஆதரவளிப்பதாகவும் கூட்டணியினர் கூறினார்கள்.

அதே நோக்கத்துடன்தான் ஜனாதிபதி தேர்தலிலும் சந்திரிக்காவுக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்தனர்.

அதன்பின்னர் அரசு–புலிகள் பேச்சு முறிந்தது. போர் தொடர்ந்தது.

மட்டக்களப்பில் ஜோசப் பரராஜசிங்கம் பா.உ. ஒரு கூட்டத்தில் உரையாற்றினார். பத்திரிகைகள் சிலவற்றில் கொட்டை எழுத்தில் வெளியான பேச்சின் சாரம்சம் இதுதான்:

**"புலிகளுடன் பேச்சு நடத்தி போரை நிறுத்தவே அரசுக்கு ஆதரவளிக்கிறோம். நமது நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளா விட்டால் அரசைக் கவிழ்க்கவும் தயங்கோம்!"** அதுதான் ஜோசப் பரராஜசிங்கத்தின் இடிமுழக்கம்.

திட்டவட்டமாக சொல்லில் மட்டுமன்றி செயலிலும்–யுத்தம் மூலமே சமாதானம் என்பதே தமது நிலைப்பாடு என்பதை வெளிப்படுத்தியுள்ளார் சந்திரிக்கா.

பூடகமாகச் சொல்லவில்லை. தந்திரமாக மறைத்துச் சொல்லவில்லை. நேரடியாகவே சொல்லியிருக்கிறது அரசாங்கம்: "புலிகளுடன் பேச்சுக் கிடையாது. புலிகளை பலவீனமாக்கியே தீருவோம்!"

ஆக கூட்டணியினரின் நிபந்தனைகளை (அப்படி ஒரு நிபந்தனையும் விதிக்கப்பட வில்லை என்பது வேறு விடயம்) அரசாங்கம் 'ப்பூ' ஒன்று ஊதித்தள்ளிவிட்டது என்பதுதான் அர்த்தம்.

"போர் நிறுத்தம் வேண்டும்!" என்று எப்போதாவது ஒருமுறை அறிக்கை விட்டுக் கொள்ளுவதும் கூட்டணியின் வழக்கம்.

போர்நிறுத்தம் அல்ல, போர் தொடரும் என்று ஜனாதிபதி உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்களில் அப்பட்டமாகவே கூறியிருக்கிறார்.

அது மட்டுமல்லாமல், வடக்கு–கிழக்கு யுத்த வெற்றிகள்தான் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலின் முக்கிய சாதனையாக ஆளும்தரப்பால் முன்வைக்கப்பட்டது.

'ஒப்பரேஷன் எடிபல' இராணுவ நடவடிக்கை உள்ளூராட்சித் தேர்தலுக்காகவே விசேஷ தயாரிப்பாக மேற்கொள்ளப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தல் முழக்கங்கள் தெற்கில் கேட்டுக் கொண்டிருக்கும்போது, வடக்கு–கிழக்கில் போர் முழக்கங்களும், ஷெல் வீச்சுக்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

"புலிகளை வென்றே தீருவோம்! வென்றே தீருவோம்!" என்று தெற்கில் பிரசார முழக்கங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

**யுத்தத்தை நிறுத்தாதது மட்டுமல்ல, மேலும் யுத்தத்தை திவிரப்படுத்தி புலிகளை வெல்லுவோம் என்ற வாக்குறுதியையும் இம் முறை உள்ளூராட்சித் தேர்தலில் வழங்கியுள்ளது பொதுஜன முன்னணி.**

கூட்டணியினர் உண்மையாகவே சமாதானத்துக்காக, புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே அரசாங்கத்தை ஆதரித்தனர் என்றால் இப்போதுள்ள நிலை என்ன?

கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலை என்பதே பொருத்தம்.

அது மட்டுமல்ல, யுத்தத்தை நிறுத்த கூட்டணி விரும்புவதாயின் பொதுஜன முன்னணி அசுர பலம் பெறுவதை தந்திரோபாயம் காரணமாக விரும்பமாட்டாது.

பொதுஜன முன்னணி அசுரபலம் பெற்றுவிட்டால் பொதுத் தேர்தலுக்குக் கூடத் தயாராகலாம். அப்படித்தயாரானால் பாராளுமன்றத்தில் தமிழ்க் கட்சிகளின் தயவும் தேவைப்படமாட்டாதே! கூட்டணியின் கருத்தையும் கேட்கும் அவசியம் இருக்காதே!

**எனவே சாணக்கிய ரீதியில் பார்த்தாலும் உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டணி பொதுஜன முன்னணிக்கு பலம் தேடியதை நியாயப்படுத்த இயலாது.**



அது தவிர பொதுஜன முன்னணியின் வெற்றியை பலவீனப்படுத்த புலிகள் பல்வேறு தாக்குதல்களை நடத்தி பல உறுப்பினர்களை பலிகொடுத்திருந்தனர்.

புலிகளை தாம் மதிப்பது போல காட்டும் கூட்டணியினர் என்ன செய்துள்ளனர்? பொறுத்த கட்டத்தில் புலிகளின் விருப்புக்கு மாறாக செயற்பட்டும் உள்ளனர். ஆக புலிகளை மதிப்பதாக சொல்வதெல்லாம் அவர்களிடம் உள்ள துப்பாக்கிகளுக்குப் பயந்துதான் என்பதும் தெளிவாகிவிட்டது.

ஆக, உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டணியினர் பொ.ஜ.முன்னணியை ஆதரித்தமைக்கு ஆயிரம் நியாயங்களை அவர்கள் கூறக்கூடும். சட்டத்தரணிகள் என்பதால் சட்டப்படி தப்பில்லை என்றும் கூறக்கூடும்.

கூட்டணியின் ஆதரவுக்கு உண்மையான அர்த்தங்கள் இவைதான்:

* **போரைத் தொடரும் அரசின் முடிவுக்கு ஆதரவு.**
* **புலிகளோடு பேசமாட்டோம், அரசியல் தீர்வு யோசனையை அவர்களுக்கு அனுப்பமாட்டோம் என்னும் நிலைப் பாட்டுக்கு ஆதரவு.**
* **சர்வதேச ரீதியில் இலங்கை அரசு தன் அரசியல் இமேஜை உயர்த்திக் கொள்ளவும், அதன் மூலம் இராணுவப் பொருளாதார உதவிகள் பெறவும் ஆதரவு.**

கூட்டணியின் இவ்வாறான முன்பின் முரணான நிலைப்பாடுகள் ஒன்றும் புதியவை அல்ல.

அரசியல் கட்சி என்ற வகையில் பொ.ஜ.முன்னணியை அல்லது ஐ.தே. கட்சியை ஆதரிப்பதும், விடுவதும் கூட்டணியின் சொந்த விருப்பு வெறுப்பாக இருக்கலாம். ஆனால் தமது நிலைப்பாடுகளை மக்களுக்கு திரிபுபடுத்திச் சொல்லும் அரசியல் நாடகத்தை கூட்டணி தொடர்வது தான் கண்டிக்கத்தக்கது. செய்வதைச் சொல்லுங்கள். அது சரியாகவும் இருக்கலாம் பிழையாகவும் இருக்கலாம். ஆனால் மக்களை முட்டாள்களாக்காதீர்கள்! ■



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான் தேவி

**கடந்த வாரம்**

பொலிஸாரிடம் இருந்து கைப்பற்றிய துப்பாக்கிகளில் ஒன்றை பூலானுக்கு பரிசளிக்கிறான் விக்கிரம்மல்லா. திடீரென்று விக்கிரம்மல்லா தனியாக எங்கோ செல்கிறான். பூலான் கவலையடைகிறான். திரும்பி வருகிறான் மல்லா அவன் சொல்லும் செய்தி பூலானுக்கு அதிர்ச்சி தருகிறது.

இனி......



பூலான்

தருவது ரசிகன்

37

விக்கிரம் மல்லா பத்திரமாகத் திரும்பி வந்துவிட்டான் என்பது மகிழ்ச்சியாக இருந்தது. என்னிடம் வந்து அவன் சொன்ன சேதி கேட்டதும் அந்த மகிழ்ச்சி மறைந்து போனது.

விக்கிரம்மல்லா தனியாக எங்கள் கிராமத்துக்குச் சென்றிருக்கிறான். எங்கள் வீட்டுக்குப் போயிருக்கிறான்.

என் கதி அறியமுடியாமல் வீட்டில் எல்லோரும் நிம்மதியில்லாமல் இதுநாள்வரை தவித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

என்னைப் பற்றிய செய்தி சொல்லத்தான் வந்திருக்கிறேன் என்று மல்லா சொன்னதும் அம்மா உரத்து அழுது ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாளாம். அம்மா அழுவதைப் பார்த்து தம்பியும், தங்கைகளும் அழத் தொடங்கிவிட்டார்களாம்.

என்னைக் காணவில்லை. என்னைப் பற்றி செய்தி சொல்ல முன்பின் அறிமுகம் இல்லாத ஒருவன் வந்திருக்கிறான். எனக்கு என்னவோ ஆகிவிட்டது. அதைச் சொல்லவே வந்திருக்கிறான் என்று நினைத்துத்தான் அம்மா அழத்தொடங்கியிருக்கிறாள்.

மல்லாவுக்கு நிலமை புரிந்துவிட்டது. "உங்கள் மகள் உயிரோடு, பத்திரமாக இருக்கிறாள். மகிழ்ச்சியோடு இருக்கிறாள். அவள்தான் என்னை உங்களிடம் அனுப்பினாள்" என்று சின்னப் பொய் கலந்து கூறியிருக்கிறான்

முதலில் நம்பமாட்டாமல் பாத்தாளாம் அம்மா. "பூலான் எங்கே? எங்கே இருக்கிறாள். என் மகள், என் செல்லம் என்ன செய்கிறாள்? நான் பார்க்கவேண்டும்!" என்றாளாம் அழுதபடியே.

"அழாதீர்கள் அம்மா. அவளே உங்களை வந்து பார்ப்பாள். இங்கு நிலமை எப்படி இருக்கிறது என்று பார்க்கத்தான் நான் முதலில் வந்தேன்" என்றான் மல்லா.

"நீங்கள் யார் தம்பி? உங்களை எப்படித் தம்பி நாங்கள் நம்புவது?" என்று கேட்டாள் அம்மா.

உடனே மல்லா... மல்லா.. விக்கிரம் மல்லா சொன்னான்..

"பூலான் என் மனைவி"

மல்லா சொன்னதைக் கேட்டதும் அம்மா திக்பிரமை பிடித்தவள்போல, உச்சியில் இடி விழுந்ததுபோல ஆகிவிட்டாளாம்.

மல்லா அதைச் சொன்னபோது எனக்கும்தான் பேச நா எழவில்லை.

ஒரு பக்கம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. மறுபக்கம் சந்தேகமாகவும் இருந்தது.

மல்லா உண்மையாகவே அந்த வார்த்தையை சொல்லியிருப்பான் என்றால் உலகத்தில் இந்த நிமிடம் நான் மட்டும்தான் மிகவும் மகிழ்ச்சியானவளாக இருப்பேன்.

ஒரு வேளை.. ஒருவேளை.. அம்மாவை நம்பவைக்கச் சொல்லியிருப்பான் என்றால்...

விளக்குத் திரியைத் தூண்டிவிடுவதுபோல என் சந்தேகத்தை தூண்டிவிடக்கூடிய வகையில் மல்லா சொன்னான்;

"பூலான் என்னை மன்னித்துக் கொள்!"

"ஏ.. ஏன்?"

"உன்னை என் மனைவி என்று சொன்னதற்காக!"

ஏன் அப்படியே இருந்தால் நன்றாகத்தானே இருக்கும். மல்லா! எனக்கு அத்தப் பாக்கியம் கிடையாதா? என்று தொண்டை வரை வந்த கேள்வியை அடக்கிக் கொண்டு தலையைக் குனிந்தபடி நின்றேன்.

தொடர்ந்து மல்லா சொன்ன செய்திகள் என் கவனத்தை பிடித்து இழுத்தன.

நான் கொள்ளைக் கோஷ்டியில் சேர்ந்துவிட்டதாக என் சித்தப்பா வீட்டாரும், சித்தப்பாவின் மகன் அந்தப் பிசாசு மையாதீனும் கிராமம் முழுக்க தண்டோராப் போடாத குறையாகச் சொல்லித்திரிகிறார்களாம்.

பொலிஸ்காரர்கள் அடிக்கடி வந்து என்னைத் தேடிச் செல்கிறார்களாம். என் தங்கச்சிமார் தண்ணீர் எடுக்கச் சென்றால் கிராமப் பெண்கள் கேலி செய்கிறார்களாம்.

"அக்கா எங்கே முந்தானை விரித்துக் கொண்டிருக்கிறாளோ?" என்று காது படவே பேசுகிறார்களாம்.

கேட்க கேட்க நாடி நரம்பெல்லாம் கொதித்தது. கேலி செய்தவர்களில் ஒருத்தியின் கழுத்தையாவது நெரிக்கவேண்டும் போல என் கைகள் பரபரத்தன.

மல்லாதான் ஆறுதல் சொன்னான்; "கோபப்படாதே பூலான். இதெல்லாம் சகஜம். புரிகிறதா? இதெல்லாம் சகஜம். உணர்ச்சிவசப்படக் கூடாது. உணர்ச்சியின் பிடியில் சிக்கினால் கண்மண் தெரியாது. குறிவைக்க முடியாது! எதிரி தப்பிவிடுவான். திட்டம் போட்டு அடிக்க வேண்டும். குறி வைத்தால் தலை உருளவேண்டும். புரிகிறதா? திட்டம் போட்டு அடி. அடிப்போம்!"

அடிப்போம் என்பதை அழுத்தமாகச் சொன்னான். எனக்கு அவனது ஆறுதல் வார்த்தைகள் தேவையாக இருந்தன. முதுகில் தட்டிக் கொடுப்பதுபோல இருந்தன. எனினும் அம்மா என்ன பாடுபடுவாள் என்று நினைக்கும்போதுதான் துக்கத்தை அடக்க முடியவில்லை.

மல்லா அடுத்துச் சொன்ன செய்தியும் என் துக்கத்தை அதிகப்படுத்தி மனதைக் குடைந்தது.

எனக்காகப் பிணைப் பணம் செலுத்திய பூல்சிங் என்னைத் தேடுகிறாராம். நான் வழக்குத் தவணைகள் எதற்கும் செல்லாமல் இருந்தமையால் பிணையாகச் செலுத்திய பணத்தை பூல்சிங் இழந்துவிட்டாராம்.

இருபத்தைந்து ஆயிரம் ரூபா பணம் என்னால் அவருக்கு இழப்பு. பாவம் பூல்சிங். கைமாறு கருதாமல், முகப் கோணாமல் கடவுள் மாதிரி நின்று உதவிய மனுசன்.

அவரை நோகடிக்கவும், நஷ்டமடையவும் செய்துவிட்டேனே என்று நினைக்க நினைக்க கவலையாக இருந்தது. அழுகை அழுகையாக வந்தது.

ஆனாலும் என்னால் எப்படி பூல்சிங்குக்கு உதவமுடியும்? வழக்கு விசாரணைக்குச் சென்றதால் இல்லாத பொல்லாத பொய்யெல்லாம் சோடித்து என்னைச் சிறையில் போட்டுவிடுவார்கள்.

மீண்டும் அந்த நரகம். மீண்டும் அந்த நாய்கள். மீண்டும் அந்த புரஹும் பன்றிகள்.

"என்ன யோசிக்கிறாய்?" என்றான் மல்லா. என்னத்தைச் சொல்வது. துக்கம் பீறிட அழத்தொடங்கிவிட்டேன்.

என் தோளில் தட்டினான் மல்லா.

அப்படியே அவன் தோளில் சாய்ந்து அழத்தொடங்கிவிட்டேன். எத்தனை நேரம் அப்படியே கிடந்திருப்பேனோ தெரியாது.

மல்லாவின் இடது தோள்பகுதி சட்டை என் கண்ணீரால் தொப்பலாக நனைந்திருந்தது. சின்னக் குழந்தைமாதிரி நடந்து கொண்டேனே என்று எனக்கே வெட்கமாகி விட்டது.

"பூல்சிங்குக்கு நீ இங்கே இருப்பது தெரியும் பூலான்!" என்றான் மல்லா.

"எப்படி?" என்றேன் ஆச்சரியமாக.

"பாபா கான்ஷியாம் பூல்சிங்கின் கூட்டாளி"

"யாரது பாபா கான்ஷியாம்?"

"எம்மைப்போல ஒரு கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவன். அந்தக் கூட்டத்திற்குத் தலைவன்!"

"அதனால் எனக்.. எமக்கென்ன?"

"அவன் உதவியுடன் உன்னை மீட்டுக் கொண்டு போகத் திட்டம் போடுகிறாராம் பூல்சிங்!"

எனக்குத் திக் என்றது.

மல்லாவின் முகத்தைப் பார்த்தேன்.

சலனமில்லாமல் என்னையே பார்த்தான்.

"என்னால் உங்களுக்கு பிரச்சனை வருமா? அவர்கள் பெரிய கோஷ்டியா?" என்றேன்.

மல்லா பதில் சொல்லவில்லை.

வாய்விட்டுச் சிரித்தான்

போய்விட்டான்!

எனக்கு அவன் சிரித்ததின் அர்த்தம் புரியவில்லை. மறுநாள்தான் அவன் சிரிப்புக்கு நானாகவே அர்த்தம் செய்துகொள்ள வேண்டி நேர்ந்தது.

மறுநாள் மாலையில் மல்லாவும் வேறு சிலரும் சீட்டாட்டத்தில் இருந்தனர்.

எம்மிடம் சிறிய வானொலிப்பெட்டி ஒன்று இருந்தது. சில நேரம் அதன் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டால்தான் பாடும். எனக்குச் சிரிப்பாக இருக்கும்.

அன்றும் வானொலியில் விவித பாரதி வர்த்தக சேவையை பலத்த சப்தத்தோடு எம் ஆட்கள் சிலர் கேட்டுக் கொண்டிருந்தனர்.

மல்லாமீது பிடிப்பு ஏற்பட்ட பின்னர் காதல் பாடல்களைக் கேட்பதில் எனக்கும் ஆர்வம் ஏற்பட்டிருந்தது. நினைவில் வைத்திருந்த பின்னர் தனியாக அமர்ந்து முணுமுணுப்பேன்.

பாடலைக் கேட்டபடி தூரத்தே பார்த்த போது யாரோ சிலர் நாங்கள் இருந்த இடத்தை நோக்கி நடந்துவந்து கொண்டிருந்தனர்.

எங்கள் ஆட்கள் யாரும் அவர்களைத் தடுத்ததாகத் தெரியவில்லை.

நான் கூர்ந்து பார்த்தேன்.

இப்போது கொஞ்சம் கொஞ்சமாக அவர்களைப் பார்க்க முடிந்தது.

முன்னால் வருவது யார்..?

அது.. அது..

பூல்சிங்...! பூல்சிங்கேதான்!

நான் மல்லாவிடம் ஓடினேன். அவன் சீட்டாட்டத்தில் மிக்க ஆர்வமாக இருந்தான்.

"பூல்சிங் வருகிறார்!" என்றேன் சற்றுச் சத்தமாக.

என் குரல் கேட்டு சீட்டாட்டத்தில் இருந்த ஏனையோர் தலையை உயர்த்திப் பார்த்தார்கள்.

மல்லா மட்டும் தலையை உயர்த்தாமல், சீட்டொன்றை இறக்கிய படியே "தெரியும்" என்றான் அலட்சியமான குரலில்.

"அவனோடு வேறு சிலரும்.." என்று நான் தவிப்புடன் தொடர்ந்து சொல்ல முற்பட, "அதுவும் தெரியும்" என்றான்.

பின்னர் தொடர்ந்து சீட்டாட்டத்தில் ஈடுபட்டான். நான் ஓடிப்போய் உள்ளே மறைந்துகொண்டு, ஒரு இடுக்கு வழியாக வெளியே நடப்பதை கவனித்துக் கொண்டு நின்றேன்.

மல்லாவை நினைத்தால் இதுவரை ஆசை ஆசையாக வந்திருக்கிறது. பிரியம் வந்திருக்கிறது. இன்றுதான் முதன் முதலாக மல்லாவை நினைக்க, அவன் சீட்டாட்டத்தில் சிரத்தையாக இருப்பதைப் பார்க்கப் பார்க்க எரிச்சல் எரிச்சலாக வந்தது.

அப்போதுதான் நினைத்தேன்,

"என்ன இருந்தாலும் இவன் ஒரு கொள்ளைக்காரன்தானே. மலையாக நம்பியிருந்தது யார் குற்றம்? என் குற்றம்தானே!" நினைக்க நினைக்க மனம் வெதும்பியது.

'நான் ஒரு துரதிஷ்டம் பிடித்தவள். என் விதி அதுதான். அதை மாற்ற யாரால் முடியும்?' என்றும் மனம் ஓலமிட்டது.

மனம்தான் கணநேரத்தில் எத்தனை சிந்தனைகளை வெளித்தள்ளிவிடுகிறது.

பூல்சிங்கும் அவருடன் இரண்டு பேரும் வந்திருந்தனர். அவர்கள் பாபு கான்ஷியாமின் ஆட்களாக இருக்கலாம் என்று நினைத்தேன்.

அவர்களைக் கண்டதும் மல்லா எழுந்து வரவேற்றான். தொடர்ந்து ஏதேதோ பேசினார்கள். அவர்கள் பேசியது எதுவும் எனக்குக் கேட்கவில்லை. கண்டறியாத வானொலி வேறு பாடிக்கொண்டிருந்தது சனியன்.

மல்லா என்னை ஒப்படைக்கப் போகிறானா? மீண்டும்... மீண்டும் அந்த நரகமா? உடம்பெல்லாம் துவண்டுவிட்டது போலிருந்தது.

சட்டென்று எனக்குள் அந்த தீர்மானம் வருவதற்கும், மல்லா உரத்த குரலில் "பூலான்" என்று அழைப்பதற்கும் சரியாக இருந்தது.

முகத்தில் எந்த உணர்ச்சியுமில்லாமல் நடந்து சென்றேன். யாரையும் பார்க்கவில்லை. மல்லாவையும்தான்.

நேராக பூல்சிங்கின் முன்னால் போய் அவர் காலில் விழுந்தேன்.

என் தலையை தொட்டு ஆசீர்வதித்தபடி "புறப்படு மகளே! என்னோடு புறப்படு!" என்றார்.

**(தொடர்ந்து வரும்)**

## எல்லை மீறிப் பாயலாமா?

தமிழக சஞ்சிகை ஒன்றில் ஒரு வாசகி வெளியிட்டுள்ள உள்ளக் குமுறல் இது. நம் நாட்டுக்கு குறிப்பாக தலைநகர நிலவரத்தோடு ஒத்துப்போவதால் தருகிறோம். படியுங்கள்.

இன்னும் திருமணமாகாத இளம்பெண் நான். சம்பத்தில் தனியார் சூப்பர் டிலக்ஸ் பஸ்சில் திருநெல்வேலியிலிருந்து சென்னை சென்றுகொண்டிருந்தேன்.



எனக்கு பக்கவாட்டு சீட்டில் புதிதாக திருமணமான தம்பதி ஒன்று அமர்ந்திருந்து. பஸ் நகரப் பகுதியைத் தாண்டி வெளியே வந்தபோது, இருவரும் காதல் சில்மிஷங்களில் ஈடுபட ஆரம்பித்தனர்.

பஸ்சில் வீடியோவின் இளம் வெளிச்சத்தில் அவர்களின் நடவடிக்கை அனாவசியமாக மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது. அவர்களது செயல்களும் நாகிரகமானதாக இல்லை.

ஒருவர்மீது ஒருவர் சரிவதும், மோப்பம் பிடிப்பதும், மடியில் படுப்பதும்.... என்னதான் புதுமணத் தம்பதியாக இருந்தாலும் பலர் பயணம் செய்யும் பஸ்வண்டியில் இந்த அத்துமீறல்கள் தேவைதானா?

புதுமணத் தம்பதியரே! உங்கள் நெருக்கம் நாலுபேர் பார்த்து முகம் சுளிக்கும் அளவிலும், என் போன்ற இளம் உள்ளங்கள் சபலத்திற்கு உள்ளாகும் விதத்திலும் இருக்க வேண்டுமா? சிந்தியுங்கள்!" இதுதான் அந்த இளம் பெண்ணின் உள்ளக்குமுறல்.

## எய்ட்ஸ் ஊசி பயங்கரம்

### ஊசியுடன் மர்ம மனிதன்!

தமிழ்நாட்டில் சென்னையில் பயங்கரப் பீதியொன்று கடந்த மாதம் கிளம்பியிருந்தது.

எய்ட்ஸ் நோயாளி ஒருவன் சமூகத்தைப் பழிவாங்க 'எய்ட்ஸ்' ஊசியுடன் அலைகிறான் என்பது ஒரு தகவல்.

பாகிஸ்தானின் சதித் திட்டப்படி தமிழ் நாட்டில் குழப்பம் விளைவிக்க 'எய்ட்ஸ்' ஊசிப் பயங்கரம் கட்டவிழ்த்து விடப்பட்டதாக மற்றொரு சந்தேகம்.

நீங்கள் பஸ் நிறுத்தத்தில் நிற்கிறீர்கள், அல்லது பஸ்ஸில் செல்கிறீர்கள் பக்கத்தில் நிற்கும் ஒருவர் கூட்டத்தோடு கூட்டமாக உங்கள் உடலில் ஊசியால் குத்திவிட்டுப் போய்விடுவார்.

'சுருக்'கென்று வலத்தாலும் கூட்டத்தில் யாராவது ஒருவரது சட்டைப் பட்டன் அல்லது பின் பட்டிருக்கலாம் என்று நினைப்பீர்கள்.

பெரிதுபடுத்த மாட்டீர்கள். அத்தோடு மறந்தும் விடுவீர்கள்.

ஆறேழு மாதங்கள் கழித்துத்தான் உடம்பில் மாற்றங்கள் தெரியும். டாக்டரிடம் சென்று உங்கள் இரத்தத்தை பரிசோதித்தால் 'எய்ட்ஸ்' இருப்பது தெரியவரும்.

எப்படி? இது எப்படி?

ஷாக்! அதிர்ந்து நிற்பீர்கள்!

நினைக்கவே நடுக்கம் வருகிறதல்லவா? இப்படி நடப்பதாகத் தெரிந்தால் வீதியில் இறங்கி நடமாடவே பயமாக இருக்குமல்லவா?



அப்படித்தான் சென்னை நகர வாசிகளை உலுக்கிக் கொண்டிருக்கிறது 'எய்ட்ஸ் ஊசி' விவகாரம்.

இதனால் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்றவற்றில் அறிமுகமில்லாதவர்களை ஏற்றிச் செல்லவே யாரும் இப்போது முன் வருவதில்லை. பின்னால் இருந்து ஊசியைக் குத்திவிடுவார்களோ என்று பயம்.

பொலிஸாருக்கும் தினமும் எக்கச்சக்கமான தொலைபேசி அழைப்புக்கள் வந்தனவாம்.

'என்னை ஒருவன் ஊசியால் குத்திவிட்டான்' என்று ஆண் குரல்களும், பெண் குரல்களும் மாறி மாறிப் பொலிசாரிடம் தொலைபேசி மூலமாக ஒப்பாரி வைத்தார்களாம். ஆனால் யாருமே தம்மை நேரில் அடையாளம் காட்டவும் இல்லை. தாம் குத்தப்பட்டதாக வைத்தியசாலைக்கு செல்லவும் இல்லை. எனினும் வெறும் புரளி என்று ஒதுக்கித் தள்ளாமல் பொலிசார் சிவில் உடையில் பஸ் நிறுத்தங்களில் நடமாடிக் கண்காணித்தனர். ஸ்கூட்டர்களில் சென்று யாராவது சந்தேகமானவர்கள் 'லிஃப்ட்' கேட்கிறார்களோ என்றும் பார்த்தனர். யாரும் மாட்டவில்லை.

பின்வரும் விடயங்கள் "எய்ட்ஸ் ஊசி" பயங்கரப் புரளிதான் என்று நினைக்கவைக்கின்றன.

★ எய்ட்ஸ் கிருமிகள் வெளிச் சீதோஷ்ண நிலையில் இரண்டு நிமிஷத்துக்கு மேல் தாக்குப் பிடிக்காது. எனவே ஊசியில் செலுத்திக் கொண்டுவந்து வைத்திருக்க முடியாது.

★ ஊசி வைத்திருப்பவன் எய்ட்ஸ் நோயாளியாக இருந்தால் தன் உடம்பில் இருந்து ஊசி மூலம் இரத்தத்தை எடுத்து உடனடியாக மற்றவர் மீது செலுத்தவேண்டும். அப்படிச் செய்யும்போது மற்றவர் கண்ணில் பட்டுவிடக்கூடும்.

★ இதுவரை 'எய்ட்ஸ் ஊசி' விவகாரம் கதையாகப் பரவியிருக்கிறதே தவிர யாருமே பாதிக்கப்பட்ட ஆதாரம் இல்லை.

எனவே எய்ட்ஸ் நோய் தொடர்பான பீதியை ஏற்படுத்தி மக்களுக்கு அதன் தாக்கத்தை உணர்த்தும் நல்ல நோக்கத்தோடு கட்டவிழ்த்து விடப்பட்ட வதந்தியா? அல்லது மக்களைக் குழப்பும் முயற்சியா என்பதுதான் சந்தேகம்! மற்றப்படி எய்ட்ஸ் ஊசி என்பதெல்லாம் வெறும் பொய் என்கிறார்கள் தமிழக டாக்டர்கள்.

அமெரிக்காவில் 'எய்ட்ஸ் ஊசி' என்று மிரட்டி கொள்ளைகளும் நடப்பதுண்டு என்னும் தகவல்கள் வெளியாகியுள்ளன. துப்பாக்கிக் குண்டைவிட 'எய்ட்ஸ் ஊசி' மிரட்டலுக்கு பயன் உண்டாம்.

துப்பாக்கிக் குண்டு உடனே கொன்றுவிடும். எய்ட்ஸ் கொஞ்சம் கொஞ்சமாக அல்லவா கொல்லும். அதுதான் எல்லோரும் நடுங்குகிறார்கள். புரளிகளை நம்பாமல் உஷாரானால் புரட்டர்களை மிரட்ட முடியும். ஏதற்கும் நாமும் உஷாராக இருப்பது நல்லது.

## மிரட்டுகிறார் மடோனா



உலகப் புகழ் பெற்ற பொப் பாடகி மடோனா. தன் உடல் அழகைக் காட்டி பல கோணங்களில் போஸ் கொடுத்து தனியான செக்ஸ் புத்தகம் ஒன்றையே வெளியிட்டவர் மடோனா. அந்தப் புத்தகத்திற்கு செம கிராக்கி. பல நாடுகளில் கடும் தடை.

மடோனா செய்த மற்றொரு புரட்சி குழந்தை பெற்றுக் கொண்டது. ஆண் நண்பர் ஒருவர் துணையுடன் குழந்தை பெற்றார். அதற்கு மட்டும்தான் அவரது நட்பு என்று அறிவித்ததுதான் மடோனா செய்த புரட்சி. (கண்றாவிப் புரட்சி)

தற்போது மற்றொரு சாதனை படைத்துள்ளார் மடோனா. 'எவிடா' என்னும் படத்தில் நடித்ததற்காக மடோனாவுக்கு பரிசு கிடைத்துள்ளது. 'கோல்டன் க்ளோப்' என்னும் விருதுதான் கிடைத்தது.

'எவிடா' படம் சர்ச்சையை கிளப்பியுள்ளது. அர்ஜென்டினா நாட்டின் முன்னாள் அதிபர் ஜீவன் டோமில்கோ என்பவரின் துணைவி பெயர்தான் எவிடா. தனது கவர்ச்சியால் பலரை படுக்கை யறையில் வீழ்த்தி அதிகாரத்தை சுவைக்கிறார் எவிடா என்பதுதான் கதை. 'எவிடா'வாக நடித்திருப்பவர் மடோனா.

அர்ஜென்டினாவில் அப்படத்தை திரையிட கடும் எதிர்ப்புக் கிளப்பியது. படம் திரையிட்ட அரங்குகள் முன் மறியல் போராட்டங்கள் நடந்தன. விளம்பரச் சுவரொட்டிகள் மீது தார்பூசப்பட்டன. திரையரங்கு வாசலில் பூச்சி மருந்துகள் தெளிக்கப்பட்டன.

அப்படியிருந்தும் மடோனாவின் கவர்ச்சியைக்காண கூட்டம் அலைமோதியது.

பொப் உலகில் கலக்கியது போதாது என்று ஹொலிவூட் திரையுலகையும் கலக்க நினைக்கிறார் மடோனா.

போதாக்குறைக்கு சமீபத்தில் மடோனா வீசிய குண்டொன்று அமெரிக்க பெரும் புள்ளிகள் பலரின் தூக்கத்தைக் கெடுத்துவிட்டது.

அப்படி என்ன சொன்னார் மடோனா? பெரிதாக ஒன்றும் சொல்லவில்லை.

"என்னுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்ட அமெரிக்க வி.ஐ.பி.களின் பட்டியலை எடுத்து விடட்டுமா? ஆதாரமாக சில அடையாளங்களும் சொல்லவா? நான் வாய் திறந்தால் பல பெரிய மனிதர்களின் முகமூடிகள் கிழியும்!" என்று எச்சரித்துள்ளார் மடோனா.

இது போதாதா பெரும் புள்ளிகளின் தூக்கத்தைக் கெடுக்க? மடோனாவுடன் சமரசம் செய்ய பல பெரும் புள்ளிகள் முன்வந்துள்ளார்களாம். எவ்வளவு பணம் கொடுத்தும் வாயை மூடத் தயாராம்.

'அவளைத் தொடுவானேன், அவதிப் படுவானேன்? என்பது இதைத்தானோ?!



படிப்பகம்

www.padippakam.com



# புகுந்து தாக்கும்

← 'உலக சமாதானம் ஓங்கும்' என்று குரல் கொடுப்பதும் அமெரிக்காதான். பயங்கரமான போர் ஆயுதங்களை உற்பத்தி செய்து குவிப்பதும் அமெரிக்காதான்.

அமெரிக்க கடற்படையினரின் பாவனைக்காக தயாரிக்கப்பட்டுள்ள புதிய சண்டை விமானம் இதுதான். எப்.ஏ.18 ஈ சூப்பர் றோர்னெட் என்று இதற்கு பெயர் சூட்டியுள்ளனர்.


கடந்த பெப்ரவரி 21ம் திகதி இதனை வெள்ளோட்டம் விட்டுப் பார்த்தனர். படு திருப்தியாம். இனிமேல் சண்டைகளில் பயன்படுத்தப்படுமாம். ஊடுருவிச் சென்று எதிரி நிலைகளை சங்காரம் செய்வதில் திறன் வாய்ந்தது இது.

# ஆட்டமா சதிராட்டமா?

↓ பாவையும் விழக்கூடாது, பானையும் உடையக்கூடாது. நடன பாவமும் தவறக்கூடாது. எத்தனை கடினமான சாகசம் பார்த்தீர்களா? எல்லாமே மண்பானைகள் தான்.

இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு புதுடில்லியில் இராணுவ அணிவகுப்பு நடைபெற்றபோது, திரிபுரா மாநில பெண்கள் சாகசம் செய்து காண்பித்தனர். அப் பெண்களில் ஒருவர் தன் அழகான உடலை வில்லாக வளைத்து பார்வையாளர்களின் விழிகளை விரியச் செய்த காட்சிதான் இது.

# தாங்கும் பல்





↑ நம்மிடமும் பல் இருக்கவே இருக்கிறது. ஆனால் நம் பல் எல்லாம் இந்தப் பயில்வானின் பறகள் போல் வருமா? யப்பா! என்னே பலம்?!

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் 'கிராமிய ஒலிம்பிக்' போட்டிகள் வருடா வருடம் நடைபெறுவது உண்டு.

அந்தப் போட்டியில்தான் சைக்கிளில் நின்றபடி இன்னொரு சைக்கிளை தன் பற்களால் கௌவிக் கொண்டு மைதானத்தைச் சுற்றி வலம் வருகிறார். அண்ணர் அசகாய சூரர்தான்!




# ஓட்டமா இது ஓட்டமா?

← ஓட்டப் பந்தயங்களில் பல ரகமான ஓட்டங்கள் இருக்கின்றன. நம் நாட்டிலும் விளையாட்டுப் போட்டிகளில் பல விதமான ஓட்டப் பந்தயங்களைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் படுக்கை ஓட்டப் போட்டியைப் பார்த்திருக்கிறீர்களா? படத்தில் இருக்கிறது பாருங்கள், படுக்கை ஓட்டப் போட்டிக் காட்சிதான் இது.

என்ன, ஆச்சரியமாக இருக்கிறதல்லவா, பிரேசில் நாட்டில் உள்ள ரியோ டி ஜெனிரோ நகரில் ஆண்டுதோறும் படுக்கை ஓட்டப் போட்டி நடைபெற்றுவருகிறது. இந்த ஆண்டு மழை கொட்டி வீதியில் பெரு வெள்ளம் காணப்பட்டது. அப்படியிருந்தும் படுக்கை ஓட்டப் போட்டி வெகு சிறப்பாக நடைபெற்றது. ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை நடைபெறும் இப் போட்டியில் இம் முறை 16 குழுக்கள் பங்கு கொண்டன. அவற்றில் ஒதோன் ஹோட்டல் நிறுவன ஊழியர்களின் குழுதான் வெற்றிபெற்றது.

போட்டிகள் முடிவடைந்ததும் படுக்கைகள் மருத்துவமனைக்கு அன்பளிப்பாக கொடுக்கப்பட்டன. விளையாட்டுமாச்சு, சேவையுமாச்சு.

## தகவல் பெட்டி



படிப்பகம்

www.padippakam.com

## மினி சினி

* கேடி குஞ்சுமோன் தயாரிக்க நாகார்ஜுன்-முன்னாள் உலக அழகி சுஷ்மிதா சென் நடிக்கும் 'ரட்சகன்' தமிழில் வெளியாகும் அதே நேரத்தில் இந்தியில் வெளியாகவுள்ளது. இந்தியில் இதன் பெயர்-'பியார் கா ரக்ஷக்'.

* 'காதல் பள்ளி' படத்தை இயக்கி வரும் பவித்ரன் அடுத்து 'கபிலன்', 'சிவாஜி' என இரண்டு படங்களைத் தயாரிக்கிறார். இதில் 'சிவாஜி' என்ற படத்தை அவரே இயக்குகிறார்.

* 'மகளிர் மட்டும்' படத்தை கமல் இந்தியில் 'லேடீஸ் ஒன்லி' என்ற பெயரில் தயாரிப்பது தெரிந்ததே. 'மகளிர் மட்டும்' படத்தில் இறுதிக்காட்சியில் மட்டும் கமல் தோன்றுவார். இந்தியில் இந்த வேடத்தில் நடிப்பவர் யார் தெரியுமா? சரிகா கமலஹாசன்.

* கடந்த வருடம் ஹொலிவூட்டில் வெளியாகி பெருவெற்றிபெற்ற ஆங்கிலப்படம் 'இன்டிபென்டன்ஸ் டே'. தற்போது இந்தப் படம் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

* 'சிறகுகள் முறிவதில்லை' படத்தை இயக்கிவரும் பாரதிராஜா, அடுத்து பிரகாஷ்ராஜ் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார். இப்படத்தை 'மறவன்', 'சாமுண்டி' படங்களை இயக்கிய மனோஜ்குமார் இயக்கவுள்ளார்.

* நீண்ட இடைவெளிக்குப் பின்னர் எஸ்.வி.சேகர் 'ராஜாமகள்' என்ற படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். ஜெயராம்-சுருதி நடிக்கும் இப்படத்தை குருதனபால் இயக்குகிறார்.

* கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் 'பிஸ்தா', மனோபாலா இயக்கும் 'நந்தினி' ஆகிய படங்களைத் தயாரித்து வரும் பிரமிட் பிலிம்ஸ் நடராஜன், அடுத்து 'ரிதம்' என்ற படத்தைத் தயாரிக்கவுள்ளார்.

* மலையாள மெகா ஸ்டார் மம்முட்டியின் மனேஜர் பாபு தமிழில் படம் ஒன்றைத் தயாரிக்கிறார். கதாநாயகனாக மம்முட்டி நடிக்கும் இப்படத்தில் அவருக்கு ஜோடியாக சௌந்தர்யா நடிக்கிறார்.

* 'புதையல்' படத்தைத் தயாரித்த கோவை செழியன் அடுத்து விஜயகாந்த் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார். விஜயகாந்தின் 'உளவுத்துறை' முடிவடைந்ததும் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகும்.

* 'செந்தமிழ்ப்பாட்டு', 'செந்தமிழ்ச் செல்வன்' ஆகிய படங்களைத் தயாரித்தவர் இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதனின் மகன் எம்.எஸ்.வி.கோபி. இவர் தற்போது 'ஆஹா என்ன பொருத்தம்' படத்தில் நடித்து வருகிறார்.

## 'அரவிந்தன்' நஷ்டம்

'நாட்டாமை' படத்தின் சூப்பர் வெற்றியின் பின்னர் சரத்குமாருக்கு பல படங்கள் காலை வாரி விட்டுள்ளன.

லேட்டஸ்ட்டாக அரவிந்தனும் காலைவாரியிருக்கிறது. தயாரிப்பாளர் சரியில்லையாம். சென்னை தவிர ஏனைய பகுதிகளில் ஒரே நேரத்தில் படத்தை திரையிடவும் முடியவில்லையாம். தயாரிப்பாளரால் தன் பெயர் கெட்டுவிட்டதே என்று புழுங்குகிறார் சரத். ஆனாலும் தயாரிப்பாளருடன் எந்தப் பிரச்சனையுமில்லை என்று வெளியே சொல்லிக் கொள்கிறார். பெருந்தன்மை!

'அரவிந்தன்' படம் மூலமாக இதுவரை ஒண்ணே கால் கோடி ரூபா நஷ்டம் என்று தலையில் கைவைக்கிறார் தயாரிப்பாளர் சிவா.

'அரவிந்தன்' படத்தில் சரத்குமாரைவிட கொஞ்ச நேரமே தோன்றும் பார்த்திபனுக்குத் தான் பாராட்டுக்கள் குவிந்துள்ளன. அது போதாது என்று சரத்குமாரின் சட்டையைப் பிடித்து பார்த்திபன் உலுக்குவது போல விளம்பரம் செய்திருக்கிறார் தயாரிப்பாளர். சரத்மீது அப்படி என்ன கோபமோ?

## கண்மணி ஒரு கவிதை

'ஆவாரம்பூ', 'தேவர் மகன்', 'தேவராகம்' படங்களை இயக்கிய பரதன் தற்போது இயக்கும் படம் 'கண்மணி ஒரு கவிதை'. வினீத்தும்-சாக்ஷியும் ஜோடியாக நடிக்கின்றனர்.

'புதையல்' படம் நன்றாக ஓடுவதால் சாக்ஷியும் தனது இடத்தைத் தக்கவைத்துள்ளார். தற்போது தமிழகத்தில் திரையிடப்பட்டுள்ள 'மாப்பிள்ளைக் கவுண்டர்' படத்திலும் சாக்ஷிதான் பிரபுவின் ஜோடி.

'கண்மணி ஒரு கவிதை' படத்தில் நாசர், பாபுமோகன், கவிதா, சாந்தி கிருஷ்ணா ஆகியோரும் நடிக்கின்றனர். தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மும்மொழிகளிலும் தயாராகிறது. இசை: இளையராஜா. பாடல்கள், மு.மேத்தா.

## வீட்டில் தாலி

கல்யாணத்தின் முன்னர் பெண் உரிமை பற்றிப் பேசியவர் சுகாசினி. அதனால் வீட்டில் இருக்கும்போது மட்டும் தாலி அணிகிறார். வெளியே வரும்போது கழட்டி வைத்து விடுகிறார். தோழிகள் கேலி செய்வார்கள் என்ற வெட்கம்தான்.

☆ ☆ ☆


ரோஜா
படம் சிஷ்யா

## மன்னவா சறுக்கல்

பிரசாந்த்- சங்கவி நடித்துள்ள 'மன்னவா' படம் வெளிவந்துள்ளது. பிரசாந்த்துக்கு மற்றொரு தோல்விப் படம்.

பிரசாந்த்தைவிட சங்கவியின் நெஞ்சுறுதியை நம்பி படம் பண்ணியிருக்கிறார்கள். பிரசாந்த்துக்கு சங்கவியின் நெஞ்சுறுதியுடன் மோதிப் பார்ப்பதுதான் முக்கிய வேலை. வஞ்சகமே இல்லாமல் மோதியும், புரண்டும், துணிச் செலவை மிச்சப்படுத்தியும் நடித்திருக்கிறார் சங்கவி.

கவுண்டமணி ஊர்வசி நகைச்சுவை மட்டும் பரவாயில்லை ரகம். எத்தனைகாலம்தான் அப்பாவித்தனமாகவே நடித்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள் ஊர்வசி?

'ஜீன்ஸ்' படத்திற்காக மீசையை மழித்து மொட்டையும் போட்டபின் 'மன்னவா' படத்தின் சில காட்சிகளில் நடித்திருக்கிறார் பிரசாந்த். ஒட்டு மீசையும், தலையில் துண்டும் கட்டி சமாளித்திருக்கிறார். கம்பீரம் இல்லாத மன்னவன்.

## ரம்பாவின் பந்தா

அடிமைச் சங்கிலி படத்தில் ரம்பாவும், ரோஜாவும் அர்ஜுன் ஜோடிகளாக நடிக்கின்றனர்.

ரோஜாவின் காதலர் ஆர்.கே. செல்வமணிதான் தயாரிப்பாளர். ரோஜாவுக்கு தன்னைவிட முக்கியத்துவம் கொடுப்பதாக நினைத்த ரம்பா படப்பிடிப்புக்களுக்குச் செல்லாமல் பிகு பண்ணுகிறார். அதனால் படப்பிடிப்புத் தள்ளிப் போகிறதாம். வெறுத்துப் போயிருக்கிறார் ஆர்.கே. செல்வமணி.


அஜித்குமார்
படம் உல்லாசம்

## 'எய்ட்ஸ்' வதந்தி— ரோஜாவின் பதிலடி

பெப்ரவரி மாத இறுதியில் தமிழக சஞ்சிகைகள் சிலவற்றில் ஒரு சுவையான புரளி கிளப்பப்பட்டது. புரளியைக் கிளப்பியது கலைஞர் கருணாநிதியின் குடும்ப நிறுவனத்தைச் சேர்ந்த 'குங்குமம்' சஞ்சிகை. 'நடிகைக்கு எய்ட்ஸ்' அதுதான் தலைப்பு. ஜாடைமாடையாகக் குறிப்பிடப்பட்ட நடிகை ரோஜா.

அதனையடுத்து வேறு தமிழக சஞ்சிகைகளும் அந்தக் கிசுகிசுவை வெளியிட்டன.

உண்மையில் நடந்தது என்ன? ரோஜாவுக்கு தூசி என்றால் அலர்ஜி. 'அரசியல்' பட சூட்டிங்கின்போது ரோஜா அலர்ஜி காரணமாக தும்மத்தொடங்க படப்பிடிப்பை இரத்துச் செய்தார் செல்வமணி. ரோஜாவுக்கு சுகமான பின்னர் படப்பிடிப்பு தொடர்ந்தது.

இதற்கிடையே மும்பாய் நடிகைகளுக்கு போட்டியாக இருப்பதற்காக உடல் எடையையும் கடுமையான டயட் மூலம் குறைக்கத் தொடங்கினார் ரோஜா. இதனை வைத்து மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டு 'எய்ட்ஸ்' வதந்தி கிளப்பப்பட்டது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் ரோஜாவோ, அவர் காதலனோ 'எய்ட்ஸ்' வதந்தியால் அதிர்ச்சியடையாமல் இருந்ததுதான்.

"சில பத்திரிகை நிருபர்களுக்கு விகாரமான புத்தி. கிசு கிசு எழுதட்டும். எனக்கும் செல்வமணிக்கும் காதல் என்பதை கண்டுபிடித்து முன்னர் எழுதினார்கள். எப்படித்தான் கண்டுபிடிக்கிறார்களோ என்று வியந்தேன். ஆனால் இப்போது கற்பனையாக ஒரு அபாயகரமான செய்தியை வெளியிட்டிருக்கிறார்களே. இது ஓவர். வக்கிரப் புத்தி. தங்கள் சகோதரிகளுக்கோ, மனைவிக்கோ 'எய்ட்ஸ்' என்று கற்பனை செய்வார்களா இந்த வக்கிரப் புத்திக்காரர்கள்?" என்று பேட்டி கொடுத்துள்ளார் ரோஜா.

வதந்தியை ஆரம்பித்து வைத்த 'குங்குமம்' சஞ்சிகை கப்சிப்பாகிவிட்டது. 'விகடன்', 'குமுதம்' உட்பட பல சஞ்சிகைகள் ரோஜாவின் மறுப்பை வெளியிட்டுள்ளன.

ஒரு குறும்புக்கார சினிமா நிருபர் சொன்னது இது: "நடிகைகளுக்கு 'எய்ட்ஸ்' என்று செய்தி போட்டால் நல்லது தானே. நடிகைகளை நடிப்பு தவிர்ந்த தேவைகளுக்கு உபயோகப்படுத்த ஹீரோக்களும், இயக்குநர்களும் பயப்படுவார்கள். நடிகைகளுக்கு தொல்லை இருக்காது. ஆயினும் குறிப்பிட்ட ஒரு நடிகையின் பெயரைப் போடாமல் பொதுவாக மிரட்டியிருக்கலாம்" என்றார்.

'அரசியல்' படத்தில் மம்முட்டியுடன் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார் ரோஜா.

## செந்தில் ஜோடி விசித்ர

ரஜினியின் 'அருணாச்சலம்' படத்தின் கதை... ரஜினி ஒரு படம் தயாரிக்கிறார். அப்படத்தின் கதாநாயக... ஜெயராம் நடிப்பதாக இருந்தது. படத்தின் க... ஜெயராம் வெளியே சொன்னதால் அவர் தூக்கப்ப... ரஜினியின் உபயத்தில் மீண்டும் ஜெயராம் நடிப்பார்... செய்தி வந்தது.

ஆனால் இயக்குநர் சி.சுந்தர் விரும்பவில்லை, அ... ரஜினி வற்புறுத்தவில்லையாம். ஜெயராம் நடிக்க... வேடத்தில் நடிப்பவர் செந்தில். அவருக்கு ஜோடி... வாம். மற்றொரு செய்தி மம்முட்டிதான்... முக்கு பதிலாக நடிக்கப் போ... சொல்கிறது. எது... ரஜினி பட...


பாண்டியராஜன்-சங்கீதா
படம் அட்ராசக்கை அட்ராசக்கை



படிப்பகம்

www.padippakam.com

## யாருக்கு என்ன பட்டம்?

தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் தினமலர் பத்திரிகை சினிமா நடிகர்கள் நடிகைகளுக்கு சுவாரசியமான பட்டப்பெயர்கள் வைத்திருக்கிறது. அந்தப் பட்டப் பெயர்களை வைத்துத்தான் கிசுகிசு எழுதுகிறது.

### இதோ சில பட்டப்பெயர்கள்

ட்டுக்கும் பத்துக்கும் இடைப்பட்ட
நடிகர் : மன்சூர் அலிகான்.
ன் நடிகை : மீனா.
பெல் நடிகர் : கவுண்டமணி.
க்கழகி : சுகன்யா
வீர நடிகர் : நெப்போலியன்.
ப்பர் நடிகர் : கமல்
தவுக நடிகை : கவுதமி.
டமண்டு : வைரமுத்து
தாப்பி இயக்குநர் : பாலுமகேந்திரா
ல்லேஜ் இயக்குநர் : பாரதிராஜா
க தேசன் : இராமராஜன்.
லர் பெல் : மணிவண்ணன்.
ாத்து நடிகர் : மன்சூர் அலிகான்
ரன்க நடிகர் : பிரபுதேவா
டிதடி சாந்தி : விஜயசாந்தி
ராமிஸ் கிங் : சத்யராஜ
டி பில்ட் நடிகர்: சரத்குமார்
நர் ஹவுஸ் நடிகர்: பிரபு
ரியனுபா: பானுப்பிரியா.
நதேவி: ஸ்ரீதேவி
ரபி: பிரபு

## மாட்டிக்கொண்டார் பிரபு

பிரபு-மந்த்ரா ஜோடியாக நடித்துவரும் படம்: 'தேடி வேன் வந்தது.'

வேகமாகவும், கலகலப்பாகவும் படம் வளர்ந்து வருகிறது. பிரபுவுடன் மிக நெருக்கமாக விதம் விதமான கவர்ச்சி உடைகளில் தோன்றுகிறார் மந்த்ரா. (உதாரணத்துக்கு இங்கே ஒரு படம் பிரசுரமாகியுள்ளது.)

படத்தின் சுருக்கமான கதை இதுதான்: வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒரு தேவை இருக்கும். அந்தத் தேவைக்காக எதையாவது தேடிக்கொண்டிருப்பது இயல்பு.

இந்தப் படத்திலும் ஒவ்வொருவரும் ஒன்றைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். கடைசியில் அவர்கள் தேடுகின்ற எல்லாம் கிடைத்துவிடுகின்றது. அதனால்தான் படத்தின் பெயரை 'தேடிவேன் வந்தது' என்று வைத்துள்ளனராம்.

படமாக்கப்பட்ட காட்சி ஒன்று இது: மந்த்ராவும், அமிர்தாவும் அக்காள் தங்கைகள். இருவரும் டென்னிஸ் கிளப்பில் உறுப்பினர்கள்.

பிரபு-கவுண்டமணி இருவருக்கும் பொய் சொல்லுவதும் வசமாக மாட்டிக்கொள்ளுவதும் வாடிக்கை. டென்னிஸ் கிளப் உறுப்பினர்கள் என்று பொய் சொல்லி உள்ளே புகுந்து விடுகிறார்கள். மந்த்ராவும், அமிர்தாவும் அவர்களை இனங்கண்டு கொள்கிறார்கள். இருவரிடமும் வசமாகச் சிக்கிய பிரபு-கவுண்டமணி கூட்டணி பாட்டுப்பாடி ஆட்டமாடி சமாளிக்கிறது. இப்படி கலகல காட்சிகள் நிறைய உண்டாம்.



பிரபு-மந்த்ரா
படம்: தேடினேன் வந்தது

முகப்பில்
ரோஜா
கார்த்திக்
படம்: 'உதவிக்கு வரலாமா'
பிரபு
படம்: 'தேடினேன் வந்தது'

## காதோடு சொல்லுகிறோம்

நாட்டாமை நாயகனுக்கு அரசியல் வட்டாரம் அட்வைஸ் பண்ணியும் அவர் கேட்கவில்லையாம். மூன்றெழுத்து நடிகையை விடமாட்டேன் என்று ஒரே பிடியாய் தொங்குகிறாராம். அதுதான் தலைவர் கடுப்பில் இருந்தாராம். புதுவை பிரசாரத்திற்கும் அழைக்கவில்லையாம்.

'இஸ்தூர' நடிகை உடல் அழகைக் காட்டி நடித்த படம் தெலுங்கில் இருந்து தமிழுக்கு வருகிறது. தயாரிப்பாளரிடம் கெஞ்சிக் கூத்தாடி சில காட்சிகளை வெட்டச் செய்தாராம் நடிகை. அதற்காக தயாரிப்பாளரை விசேஷமாக கவனித்ததாகவும் தகவல்.

'மந்திர' நடிகையும், குமார இளம் நடிகரும் தினமும் சந்திக்காமல் இருக்க முடியவில்லையாம். இளைய திலகத்தின் ஜோடியாக நடித்துவரும் மந்திர நடிகை அவரை எப்படியோ தாஜா பண்ணிக் குளிரவைத்துவிட்டு இளம் காதலரைக் காண பறந்துவிடுகிறாராம். இளம் நடிகரின் அப்பா விஜயமான குமாரர் இவர்கள் காதலுக்கு பச்சைக் கொடி காட்டுவதா, சிகப்புக் கொடி காட்டுவதா? என்று தெரியாமல் முடியைப் பிய்த்துக் கொண்டிருக்கிறாராம்.

'ரோஜ' நடிகைக்கு 'எய்ட்ஸ்' என்று செய்தி போட்ட தமிழக பத்திரிகைகளையும், அவற்றைப் பார்த்து செய்தி போட்ட மலேசிய, சிங்கப்பூர் தமிழ்ப் பத்திரிகைகள் மீதும் வழக்குப் போடப்போவதாக எச்சரித்துள்ளார் நடிகையின் காதலர்.

'சங்க' நடிகையின் வீட்டுக்குள் சுதந்திரமாக சென்றுவரக்கூடிய உரிமையை சமீபத்தில் பெற்றுள்ளவர் 'அப்ஸ்' நடிகர். அவர் சென்ற சமயத்தில் பெயரில் 'ராம்' உள்ள மூன்றெழுத்து நடிகரும் நடிகையின் வீட்டுக்குள் இருந்து வெளியே வந்தாராம். 'அப்ஸ்' நடிகர் முகம் களிக்க, 'சங்க' நடிகை எப்படியோ சமாளித்து சரிசெய்துவிட்டாராம்.

## ஜாலியான விசித்ரா

பசையுள்ள புள்ளிகளுடன் பதமாக ஒட்டிக்கொள்வது விசித்ராவின் வழக்கம். சென்னையில் உள்ள பிரபல நட்சத்திர ஹோட்டல் உரிமையாளரின் மகன், மருத்துவக்கல்லூரி மாணவர் ஒருவர், பிரபல நடிகர்கள் என்று நீண்ட பட்டியலே இருக்கிறது.

தற்போது விசித்ரா ஒட்டியிருப்பது தமிழக பெண் பொலிஸ் அதிகாரியின் மகனுடன். மகனது காதலை தடுக்க முடியாது என்ற நிலையில் திருமணத்துக்கு ஓகே சொன்னார் பெண் பொலிஸ் அதிகாரி. ஆனால் விசித்ராவோ சொத்தைப் பிரித்துக்கொண்டு வந்தால்தான் கல்யாணம் என்று கண்டிஷன் போட்டாராம். காதலர் மறுத்துவிட்டார். விசித்ராவின் சுயரூபம் அறிந்து 'டாட்டா' காட்டிவிட்டார்.



ஜோதிலட்சுமி
படம்: முத்து மணி

## ...படியும் 'சீமைப்பசு'

...த்திபனின் காட்டில்தான் இப்போது அடைமழை. ... 'பாரதி கண்ணம்மா' ஓடிய ஓட்டம்தான். ... படங்களில் ஒப்பந்தமாகி படு பிஸியாக கலக்கிக் ...டிருக்கிறார்.

...ங்கேயன் காளை' படத்தில் பார்த்திபனின் ...யாக நடிப்பவர் ரவளி. பார்த்திபன் வார்த்தையில் ...ப்வதானால் 'சீமைப்பசு'.

...மைப்பசுவை காளைக்கு ரொம்பப் பிடித்துவிட்டது. ...னால் தனது அடுத்த படத்திலும் அவரையே ...ரிசு செய்துள்ளார் பார்த்திபன்.

...படத்தின் பெயர்: 'அபிமன்யு'. பொலிஸ் அதிகாரி...க நடிக்கிறார் பார்த்திபன். மணிவண்ணன், ...வரன், ஆனந்தராஜ், சந்திரசேகர், மலேசியா ...சுதேவன் ஆகியோரும் நடிக்கின்றனர். கதை, ...ரைக்கதை, வசனம், இயக்கம் கே. சுபாஷ். இசை: ...தவா. பாடல்கள் புலமைப்பித்தன், பழனிபாரதி. ...ாங்கேயன் காளை' படத்தை தயாரிக்கும் பட நிறு...வனம்தான் இதனையும் தயாரிக்...கிறது.

## அரவிந்தசாமியின் சாசனம்

'முள்ளும் மலரும்', 'உதிரிப் பூக்கள்' போன்ற அசத்தலான படங்களை இயக்கியவர் மகேந்திரன். மகேந்திரன் இயக்கும் 16வது படம் 'சாசனம்'.

'சாசனம்' படத்தில் முற்றிலும் மாறுபட்ட பாத்திரத்தில் நடிக்கிறார் அரவிந்தசாமி. கதா நாயகிகள் இருவர். ஒருவர் ரஞ்சிதா. இன்னொருவர் சோனாலி.

நாசர், தலைவாசல் விஜய், சுகுமாரி உட்படப் பலர் நடிக்கின்றனர். ஒளிப்பதிவு பி.சி. ஸ்ரீராம். இசை: இளையராஜா.

## எட்டடி—பதினாறடி?

'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்' என்பதுதான் பழமொழி. அதனைப் பொய்யாக்கிவிட்டார் ஜோதிலட்சுமி. (மேலே பார்க்கவும்)

முன்னர் கவர்ச்சிக் குலுக்கலில் அசத்திவிட்டு ஓய்ந்திருந்தவர் ஜோதிலட்சுமி. தனக்கிருந்த பழைய தொடர்புகளையும், தனக்கு தெரிந்த நெளிவு சுழிவுகளையும் பயன்படுத்தி மகள் ஜோதிமீனாவுக்கு குலுக்கல் டான்ஸ் ஆடும் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்தார்.

'முத்து' படத்தில் ஜோதிலட்சுமியை பாட்டியாக ஆடவைத்தார் ரஜினி. அதன் பின்னர் மறுபடியும் ஆடவருமாறு அமோக அழைப்புக்கள். இதில் விசேஷம் என்னவென்றால் இப்போது மகள் ஜோதி மீனாவைவிட ஜோதிலட்சுமிக்குத்தான் சான்ஸ் குவிகிறதாம்.

திரைக்குவந்துள்ள 'நேசம்', 'வாய்மையே வெல்லும்' ஆகிய படங்களில் தாயும் மகளும் ஒரே பாடலுக்கு போட்டி போட்டு ஆடுகிறார்கள். தன்னைத்தான் ஒப்பந்தம் செய்ய வந்திருக்கிறார்கள் என்று ஜோதிமீனா தயாரிப்பாளர்களை வரவேற்பாராம். "அம்மா எங்கேம்மா?" என்று கேட்கிறார்களாம் தயாரிப்பாளர்கள்.

அதனால் ஜோதிமீனாவுக்குச் சற்று வருத்தம்தான். ஆனாலும் "எனக்காகத்தானே அம்மாவும் சம்பாதிக்கிறார்" என்று ஆறுதல்பட்டுக் கொள்கிறாராம் ஜோதிமீனா.

இது ஒருபுறமிருக்க ஜோதிலட்சுமி மீண்டும் ஆடத்தொடங்கிவிட்டதால் பழைய கவர்ச்சி நடிகைகள் பலர் அதிஷ்டக்குலுக்கலில் தமக்கும் சான்ஸ் கிடைக்கும் என்று அலைகிறார்களாம்.

## பிரசாந்த் உருக்கம்

ஜீன்ஸ் படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கிறார் பிரசாந்த். கதாநாயகி ஐஸ்வர்யா என்பதெல்லாம் தெரிந்த பழைய செய்தி.

தெரியாத செய்தி இது: பிரசாந்த், ஐஸ்வர்யா விசிறியாம். படப்பிடிப்பில் ஐஸ்வர்யாவுடன் விழுந்து விழுந்து பேசுகிறாராம். ஐஸ்வர்யாவுடன் காதல் காட்சிகளிலும் உருகி நடித்துள்ளாராம். இளமையாக சுறுசுறுப்பாக இருக்கும் பிரசாந்தை ஐஸ்வர்யா ராய்க்கும் பிடித்திருக்கிறதாம். அதற்காக காதல் கீதல் என்று நினைக்க வேண்டாம். சும்மா ஒரு பொழுது போக்குத்தான். ஐமாய்க்கட்டும் நமக்கென்ன! ஜீன்ஸ் படத்தில் 'இரட்டை வேடத்தில் நடிக்கும் மற்றொருவர் நாசர். பிரசாந்தின் அப்பாவாக நடிப்பவரும் அவரே.



சுமன-ரம்பா
படம் ரம்பா ஓ ரம்பா



படிப்பகம்

# கருச்சிதைவின் காரணங்கள்

பெரும்பாலான நோய்கள் தண்ணீர் மூலமாகவே பரவுகின்றன. அதன் மூலமாக ஒரு நோய் தாய்க்கு வந்தால், அது கருவறையில் இருக்கும் குழந்தையையும் பாதிக்கும். எனவே தண்ணீரைக் கொதிக்க வைத்து, ஆறிய பின் குடிக்க வேண்டும்.

இதுதான் முதல் கர்ப்பம் என்றால் காய்கறி, பால், மீன், முட்டை போன்ற சத்தான உணவுகளை உட்கொள்ள வேண்டும். தலைவலி, காய்ச்சலுக்குக் கண்ட மாத்திரைகளையும் வாங்கிப் போடக் கூடாது. இது குழந்தையின் உயிருக்கே ஆபத்தாக முடியும். தலைவலி காய்ச்சல் என்றால் உடனே மருத்துவரை அணுகி, அவர் ஆலோசனையின் பேரில் வாங்கப்படும் மாத்திரைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

* கருவுற்ற காலங்களில் பெண்கள் கண்டிப்பாக மது அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.
* நீண்டதூர கார்ப் பயணம், சைக்கிள், ஓட்டோ, பஸ் பயணம் செய்யக்கூடாது. இந்த மாதிரி நேரங்களில் கூட கருச்சிதைவு ஏற்பட்டுவிட வாய்ப்பிருக்கிறது.

மூன்று, நான்கு மாதங்கள் வரை மிகவும் கவனமாக இருப்பது அவசியம்.

* கருவுற்றிருக்கும் ஒரு தாயின் நிறை, ஒவ்வொரு மாதத்திற்கும் 2 கிலோ வரைக்கும் ஏறலாம். 1.05 கிலோவில் இருந்து 2 கிலோ வரைக்கும் ஏறலாம். அதற்குமேல் ஏறினால் அது நல்லதல்ல. அதே போல் 1.05 கிலோ வரைக்குமாவது எடை ஏறாமல் இருந்தால் தாயின் உடம்பு பலவீனமாக இருகிறது என்று தெரிந்து கொள்ளலாம். எனவே, அதற்குரிய ஆகாரங்களை அவர்கள் சாப்பிட வேண்டியிருக்கும்.

டாக்டர் ஷீலா சத்யகுமார்

* இரண்டு கிலோவிற்கு மேல் ஏறினால் தாய்க்கு நீர்ச்சத்து, உப்புச்சத்து மிகுதியாகி விட்டதன் அறிகுறி. அதனால் காலில் வீக்கம் ஏற்பட்டு விடும். இந்த மாதிரி இருக்கிறதா என்று பார்த்து விட்டு உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்குமாறு டாக்டர்கள் சொல்வார்கள்.
* சிலருக்கு கணுக்கால் நரம்பு சுற்றிக் கொள்ளும். "கால் ஒரு மாதிரி இழுக்குது" என்று சொல்வார்கள். இன்னும் சிலருக்கு மூலைச்சூடு மாதிரி இரத்தம் கூட வரலாம். இவையெல்லாம் கர்ப்ப காலத்தில் பெண்கள் எதிர்பாக்கின்ற பிரச்சனைகள் தான். இந்தப் பிரச்சனைகள் இருந்தால் உணவுக் கட்டுப்பாட்டையும் (கீரை, காய்கறி, நிறைய சாப்பிட வேண்டும்) அதற்குரிய மாத்திரைகளையும் சாப்பிடுவதன் மூலம் நிவர்த்தி செய்துகொள்ளலாம்.
* இதுபோக மார்பகங்களை அவர்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். குழந்தை பிறந்த பிறகு ஒவ்வொரு தாயும் தன் குழந்தைக்குப் பால் கொடுக்கத்தான் ஆசைப்படுவாள். அப்படிப்பட்ட அந்தத் தாய்க்கு மார்பகங்களைப் பாதுகாக்கவும் தெரிந்திருக்க வேண்டும். ஒரு வேளை மார் சுரத்தில் புண் இருந்தாலும் சரி, வெடிப்பிருந்தாலும் சரி உடனடியாக டாக்டரைச் சந்தித்து சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். குழந்தை பிறந்த பிறகு அது இருப்பது தெரிய வந்தால் குழந்தைக்கும் கஷ்டம் தாய்க்கும் கஷ்டம்.
* இரண்டாவது செக்-அப்பிற்கு வரும் போது தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். மூன்றாவது, நான்காவது மாதங்களிலும் 'டெட்டனஸ்' தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். இதைப் போடாவிட்டால் குழந்தைக்கு 'டெட்டனஸ்' என்ற நோய் வந்து விடும். இந்தத் தடுப் பூசி போடுவதன் மூலம் தாய்க்கும், குழந்தைக்கும் நோய்த் தடுப்பு ஏற்படுகின்றது.



* புதிதாக மணமானவர்களுக்கு அந்த மாதத்திலேயோ அல்லது அடுத்த மாதத்திலேயோ முதன் முதலாகக் குழந்தை உண்டாகிவிடுன்றது. ஆனால் எல்லாக் கருவுமே நன்றாக வளருகின்றது என்று சொல்ல முடியாது. சிலருக்குத் திடீரென்று கருச்சிதைவு ஏற்படலாம். அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

கரு சரியாக உருவாகாமல் இருத்தல், தாயின் கர்ப்பப்பை பலவீனமாக இருத்தல், நீண்ட தூரம் பயணம் செய்தல், ஹோர்மோன் பிரச்சனை போன்ற காரணங்களாகக்கூட இருக்கலாம். இன்னும் சிலருக்கு இரண்டு, மூன்று வருடங்கள்கூட (நாலைந்து தடவை) கரு தங்காமல் சிதைவு ஏற்படுகின்றது. இது மனதை மிகவும் துக்கப்படுத்துகின்ற விஷயம். இப்படி ஆனவர்களுக்கு முழுமையான எல்லாப் பரிசோதனைகளையும் செய்ய வேண்டி இருக்கும்.

அதே போல தந்தைக்கும் இரத்தப் பரி சோதனையில் துவங்கி, எல்லாப் பரிசோதனையும் உடற்கூறு ரீதியாகச் செய்து பார்த்துத்தான் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும்.

## சமைப்போம் சுவைப்போம்

[தொகுத்துத் தருவது — சுகந்தினி]

### கோவா வடை

**தேவையானவை:**

கடலைப் பருப்பு -1/2 கிலோ
முட்டைக் கோவா - 1/4 கிலோ
பூண்டு - 10 பல்லு
இஞ்சி - 1 துண்டு
பச்சை மிளகாய் - 10
வெங்காயம் - 100 கிராம்
கறிவேப்பிலை - சிறிதளவு
சீரகம் - சிறிதளவு
உப்பு - அளவாக
எண்ணெய் - தேவையான அளவு.

**செய்முறை:**

கோவா, வெங்காயத்தை அரிந்து கொள்ளவும். கடலைப்பருப்பைத் தண்ணீரில் கொட்டி ஊறவைத்து, சீரகம், இஞ்சி, பச்சைமிளகாய் இவற்றையும் சேர்த்து கிரைண்டரில் போட்டு சிறிது மொற மொறப்பாக அரைத்துக் கொள்ளவும். பின்னர் அரிந்து வைத்துள்ள கோவா, வெங்காயம் ஆகியவற்றையும் போட்டு மேலும் சிறிது நேரம் அரைத்த பின்னர் கறிவேப்பிலையை போட்டுப் பிசைந்து வைத்துக் கொள்ளவும். வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றிக் கொதித்தவுடன் வடை தட்டிப் போடுவது போல் போட்டு சிவந்தவுடன் எடுக்க வேண்டும்.

## நகமும் நிறமும்

* ஆரோக்கியமாக உள்ளவர்களின் நகம் எப்படி இருக்கும்?
  இலேசான சிவப்பு நிறத்தில் பளபளப்பாக இருக்கும்.
* நகங்களில் சொத்தை விழுந்து கறுத்துக் காணப்பட்டால் உடலுக்குப் போதிய ஊட்டச் சத்துக்கள் கிடைக்கவில்லை என்று அர்த்தம்.
* நகங்கள் மிகவும் சிவந்து காணப்பட்டால் உடலில் உள்ள இரத்தத்தின் அளவு அதிகம் என்பதைக் காட்டுகின்றது.
* அவர்களுக்கு இரத்தக் கொதிப்பு வர வாய்ப்புண்டு.
* கைவிரல் நகங்களில் வளர்பிறை வடிவம் காணப்படவில்லை என்றால் சீரான இரத்த ஓட்டம் இல்லை என்று பொருள்.
* விரல் நகங்கள் சற்றே நீலநிறமாக இருந்தால், அவர்கள் இதயத்தைப் பலப்படுத்தும் மருந்துகளைச் சாப்பிட்டு இதயத்தை வலிமையாக்க வேண்டும்.
* விரல் நகங்கள் சற்றே மஞ்சள் நிறத்தில் காணப்பட்டால் விஷம் அவர்கள் இரத்தத்தில் ஊறி இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இப்படிப்பட்டவர்கள் புகையிலையை அறவே விட்டு விட வேண்டும். சுருட்டு, பீடி, மூக்குப்பொடி, சிகரெட் ஆகியவற்றை உடனே கைவிட வேண்டும்.
* கைவிரல் நகங்கள், உப்பினாற்போல் இருந்தால், அவர்களுக்கு ஆஸ்துமா போன்ற சுவாச சம்பந்தமான வியாதிகள் வர வாய்ப்புண்டு.



* கைவிரல் நகங்களில் வெள்ளைப்புள்ளிகள் தென்பட்டால், உடல்நலம் குன்றி இருப்பதற்கு அடையாளம்.
* கரும்புச்சாறு, கரட், முருங்கைக்கீரை, மாம்பழம், பப்பாளி, விளாம்பழம், பேரீச்சம்பழம், பாதாம்பருப்பு, வெங்காயப் பச்சடி, பால், பூண்டு, தேன், அகத்திக் கீரை சிறுகீரை, நெல்லிக்காய், வாழைப் பழம், நிலக்கடலை, பொட்டுக்கடலை போன்றவற்றை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் நகங்கள் சிதையாது. தினமும் கொத்தமல்லி சட்னி சாப்பிட்டால் நக ஆரோக்கியம் பாதுகாக்கப்படும்.

## வெந்தயத்தில் விசேஷமுங்க....!

வயிற்றுப்புண்களை ஆற்றும் சக்தி வெந்தயத்திற்கு உண்டு. கடுமையான வயிற்று வலி இருந்தால், வாயில் ஒரு தேக்கரண்டி வெந்தயத்தைப் போட்டு ஒரு கப் தயிரைக் குடித்தால் சிறிது நேரத்தில் வலி குறைந்து விடும்.

புளி, உப்புடன் வெந்தயப் பொடியும் சேர்த்து அன்றாட சமையலில் உபயோகிப்பது நல்லது.

எலுமிச்சம்பழச்சாறுடன், 1/4 கிலோ வெந்தயத்தையும், உப்பையும் சேர்த்து உலர்த்தி வைத்துச் சமையலில் சேர்த்தால் பித்தம், வயிற்று உபாதைகளுக்கு மிகவும் நல்லது.

இட்லி, தோசை மாவுடன் வெந்தயம் சேர்த்தால் மிருதுவாகவும் இருக்கும், எளிதில் ஜீரணமும் ஆகும்.

கீரை வகைகளுடன், வெந்தயமும், மிளகாயும் சேர்த்து மசித்தால் அஜீரணம் நீங்கும்.

காலை உணவுக்கு அரிசிக் கஞ்சியில் இரண்டு தேக்கரண்டி வெந்தயம் சேர்த்து வேகவைத்துச் சாப்பிடும் பழக்கம் இன்றும் கிராமப்புறங்களில் உண்டு. வெயிலில் நின்று வேலை செய்பவர்களுக்கு இது ஏற்ற உணவு.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் தினம் வெந்தயத்தைச் சேர்த்துக் கொள்வது நல்லது. காலையில் வெறும் வயிற்றில் வெந்தயப் பொடி அரைத் தேக்கரண்டி சாப்பிடலாம். சூடான சோற்றில் வெந்தயப்பொடி போட்டு நெய் சேர்த்துச் சாப்பிட்டால் நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு சீனியின் அளவு கட்டுப்பாட்டில் இருக்கும்.



வெந்தயத்தை அரைத்து உடம்பில் தேய்த்துக் குளித்தால் மேனி பளபளவென்று மெருகேறும்; நீர் பிரியும். தலைக்குத் தேய்த்துக் குளித்தால், இயற்கை ஷம்பூ போன்று செயற்பட்டு பட்டுப் போன்ற கூந்தல், கருமையாகப் பளபளக்கும்.

## லேடீஸ் ஸ்பெஷல்

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? செங்கலடி வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.
செல்வி வீ. இராஜேஸ்வரி,
34, குமாரவேலியார் கிராமம், செங்கலடி

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


### பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



வாரம் ஒரு பட்டுச் சேலை BJ

பெயர்:........................
முகவரி:........................
........................
கையொப்பம்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 05-04-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## எப்படித் தொடங்குவது? எங்கே தொடங்குவது?

**கடந்தவாரம் நடைப்பயிற்சி பற்றி விளக்கியிருந்தோம். நடைப் பயிற்சி தொடர்பான மேலும் சில விபரங்கள் இந்த வாரம் தரப்படுகின்றன. எடை குறைய நடைப்பயிற்சியை உடனே ஆரம்பியுங்கள்!**

நாம் உட்கொள்ளும் ஒவ்வொருவகையான உணவிலும் உள்ள வெப்பசக்தி கலோரி எனப்படுகிறது. இது தேவைக்கதிகமாக உடம்பில் சேர்ந்துவிட்டால் உடலில் கொழுப்புச் சேர்ந்து (கொலஸ்ரோல்) பல நோய்களும் உருவாகக் காரணமாகிவிடுகிறது.

நாம் உண்ணும் உணவுக்கேற்ப கலோரிகள் எரிக்கப்படவேண்டும். உடலுழைப்பின் மூலம் (உடல் அவயவங்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சிகள்) கலோரி எரிக்கப்பட்டு சக்தியாக மாற்றப்படும். இவ்வாறு எரிக்கப்படாத கலோரி கொழுப்பாகச் சேர்ந்து விடுகிறது.

உடல் பருமனானவர்களுக்கு வேறு பயிற்சிகளில் ஈடுபடுவது கடினமாக இருக்கலாம். இத்தகையோருக்கு நடைதான் சிறந்த பயிற்சியாகும். உடல் பருத்தவர்கள் எடை கூடியவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் எவ்வளவு வேகமாக நடக்கிறார்களோ அவ்வளவுக்கேற்ற கலோரிகள் எரிக்கப்படுகின்றன.

### உங்கள் எடை 64 கிலோவாக இருந்தால்....

* மெதுவாக- ஒருமணி நேரத்துக்கு 3 மைல் நடந்தால்- ஒரு மணி நேரத்தில்-200 கலோரிகள் பயன்படுத்தப்பட்டுவிடும்!
* சாதாரண நடை-4 மைல் வேகத்தில் நடந்தால்- ஒரு மணி நேரத்தில் 300 கலோரிகள் பயன்படுத்தப்படும்.
* ஏற்றமான பாதையில் அல்லது எதிர்காற்றில் நடந்தால் 500 கலோரிகள் செலவாகும்.
* சாதாரண பாதையில்- 5 முதல் 6மைல் வேகத்தில் நடந்தாலும் 500 கலோரிகள் செலவாகிவிடும்.

இவ்வாறு நடந்தால் உங்கள் கொழுப்புக் குதத்திலிருந்து 60 சதவீதமான கொழுப்புக் கரைந்து விடும். அதாவது ஒரு மணிநேரம் 4 மைல் வேகத்தில் நடந்தால் 180 கலோரிகள் மறைந்துவிடும். வாரத்தில் 3 முறை இவ்வாறு நடந்தால் ஒரே வருடத்தில் 28,000 கொழுப்புக் கலோரிகள் பஸ்பமாகிவிடும். இது 8 இறாத்தல் கொழுப்புக்குச் சமமானதாகும்.

"ஒரு மணி நேரம் நடக்க வேண்டுமா?" என்று நம்மவர்கள் மூக்கின் மேல் விரலை வைக்க வேண்டியதில்லை. ஒரே வாரத்தில் இரண்டு அல்லது மூன்று மைல்களாகப் பிரித்து ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட அளவு நிமிடங்கள் நடப்பது என்று வகுத்துக் கொண்டால் போதுமானது. ஒரே நாளில் ஒரு மணித்தியாலம்- ஒரே தடவையில் நடந்து முடித்துவிட எண்ண வேண்டாம்!



### ஆறுவார அட்டவணை

நடக்கும் பயிற்சியை முதன் முதலில் தொடங்கும் உங்களுக்கான திட்டம் இது: இதன்படி நடப்பீர்களானால், உங்கள் உளவுறுதி அதிகரிப்பதுடன் சக்தியும் அதிகரிக்கும்.

**முதல் வாரம்:**

ஒன்றுவிட்டு மறுநாள்- வாரத்துக்கு மூன்று தடவை மட்டும் நடக்கலாம். 10முதல் 15 நிமிடம் வரை நடந்து அரை மைல் தூரத்தைக் கடக்கலாம். இது ஒரு மணிநேரத்தில் 2 முதல் 3 மைல்வரை கடந்ததாகும். நடக்கும்போது மூச்சுத்திணறல் இருக்கலாகாது. பக்கத்தில் வருபவருடன் உரையாடக் கூடியதாக இருக்கவேண்டும்.

**இரண்டாவது வாரம்:**

இந்த வாரத்தில் நான்கு நாட்கள் நடக்கலாம். இடையில் ஒருநாள் ஓய்வாகவிருக்கலாம். ஒவ்வொரு தடவையும் 20 நிமிடங்கள் வரை நடக்கலாம். உங்களுடைய நடையில் ஒவ்வொரு எட்டின் இடைத் தூரத்தையும் அதிகரித்துக் கொள்ளலாம்.

**மூன்றாவது வாரம்:**

இந்த வாரத்தில் 5 நாட்கள் நடக்கலாம். ஒன்றரை மைலிலிருந்து இரண்டு மைல் வரை- மணிக்கு 3 மைல் வேகம் என்ற கணக்கில் நடக்கலாம். எட்டின் அளவினையும் சிறிதளவு தூரம் கூட்டிக்கொள்ளலாம். 40 நிமிடங்களில் இரண்டு மைல் கடந்ததாகும்.

**நாலாவது வாரம்:**

இந்த வாரமும் 5 நாட்கள் நடவுங்கள். உங்கள் எட்டுக்களை அகலமாகவைத்து வேகத்தையும் சற்று அதிகரிக்கலாம். உங்கள் கைகளையும் நீளமாக வீசலாம். 30 முதல் 35நிமிடம் வரை நடவுங்கள்.

**ஐந்தாவது வாரம்:**

மணிக்கு 3 முதல் 4 மைல் வேகக் கணக்கில் 5 நாட்கள் நடக்கலாம். 45 முதல் 60 நிமிடம் என்ற தன்மையில் 3 மைல்களைக் கடக்கலாம்.

**ஆறாவது வாரம்:**

3 மைல்களை 45 நிமிடங்களில் கடப்பதாகத் திட்டமிடுங்கள். ஐந்து முதல் ஆறு நாட்கள் நடக்கலாம். கைகளுக்கு சற்று அழுத்தம் கொடுத்து வீசிக் கொள்ளலாம். கால் எட்டுக்களையும் விரிவாக்கலாம்.


தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும்
தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு— அருள் ஜுவலர்ஸ்
பரிசுக் கூப்பன் இல 04

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

## என்னை எழுத விடு

நீ
அந்த–
சாமத்தில்
சரசமாய்
சிரித்ததும்,
காற்று வந்து
சேதி சொன்னது
உனக்கு
வியர்த்துவிட்டதாக.
**
பக்கத்துவீட்டு
முருங்கை மரக்கிளை
முறிந்து
விழுந்தது.
**
காற்றடிக்கவில்லை
என்பதை
என்னால்
நம்ப முடியாது.
**
ஏய் வயசப்புள்ள,
என்–
கை விரல்களை
அனுப்பி
வைக்கவா?
**
நான்
கவிதை
எழுதாவிட்டாலும்
பறவாயில்லை:
எடுத்துக்கோ!
என்–
விரல்களை.
**
நிப்பாட்டு
புள்ள....
துப்பாக்கி
சத்தம் போடுது.
**
நீ
விரிச்ச
முந்தானைய
எடுத்து
இடுப்புல சொருகு!
**
இங்கே–
சமாதானம்
வந்ததுக்கப்புறம்
உன்னோடு
நான்–
வந்து சேர்கிறேன்....
**
அது வரைக்கும்
என்–
விரல்களை விடு
கவிதை எழுத...
**
ஏனென்றால்,
நம் குழந்தய
யாராச்சும்
சுட்டு விடக்கூடும்!
**

பொத்துவில்,
பௌர்ணமி நிலா.

## என் பிரிய தேவதையே

உன் ஈர உதடுகள்
என் கன்னத்தில் எழுதிய
கவிதையை விட,
உனைப் பிரிந்த கணங்கள்
எனக்குள் இறக்கிய உளியின்
வடுக்கள் அதிகம்!
*
அந்தப் பச்சை ரணங்கள்
காயும் போது
என் சடலம் மண்ணுக்குள் மறைந்திருக்கும்
*
எதிர் காலத்தை அடி வானத்தில்
கனாக் கண்ட இந்தக் கவிஞன்
இனி கடந்த காலத்தை மட்டுமே
சுவைத்திருப்பான்!
*
முதலிரவை அசைபோடும்
மூதாட்டியாய் இவன் மனம்
நரை தட்டி பருவம்
தப்பிப் போய் இருக்கும்.
*
என் காதலியே– போ!
நீ கவிழ்த்த இந்த மைக்கூடு
இனி மந்திரம் சொல்லாது–போ!
நீ வளர்த்த இந்தச் செடி
இனி மலர்ந்து சிரிக்காது–போ!
*
இந்தக் காதல் யாகத்தில்
ஆகுதியாய் நானே எரிய,
வரத்தை நீ எடுத்துப் போ!
*
என் பிரிய தேவதையே!
அடுத்த பிறவியில் நான்
உன் நிழலைக் கூட
நினைக்க மாட்டேன்!

ஏ.எஸ்.ஏ.றம்ஸி றஹீஸ், விடத்தல்தீவு.

## தேன் கிண்ணம்

## பாலைவனத்தில் ஒரு பனித்துளி

விடிவதற்கு நேரமிருக்கு
விழிமூடி நீ தூங்கு...!
•••
உயிர் குடிக்கும்
வெறி பிடித்த வேட்டோசை
கேட்டா நீ கண்விழித்தாய்..?
•••
வேட்டோசை இன்றும் புதிதல்ல–
நமக்கு:
போகப் போகப் புரிந்துகொள்வாய்
நீயும்!
•••
இப்போது அழ வேண்டாம் நீ:
கண்ணீரை சேர்த்து
காலம் வரும் அழுவதற்கு
•••
தாய்மை உண்டு என்னிடம்,
தாய்ப்பால்தான் இல்லை!
நீ உமிழ முலைகளுண்டு,
ஆனால் முலை சுரக்க
உணவில்லை எனக்கு!
•••
பிறந்த பூமியை துறந்து,
அகதியாய் ஆடையுமின்றி ஆசையுமின்றி
திறந்த வீதியில் தூங்கும் நாம்
கடவுளின் குழந்தைகள்...!
•••
விதை போட்ட உன் தந்தை
வெடி பட்டு வீழ்ந்திட்டார்:
விதி செய்த வேலையல்ல–
அது சதிகாரர் வேலையடா...!
•••
வீதிதான் நம் வீடு:
வெயிலும் மழையும் காற்றும் பனியும்
நாம் அணியும் அணிகலன்கள்.
•••
வருடத்திற்கொரு மாதம் 'நோன்பு'
சிலருக்கு:
நமக்கு வருடம் முழுவதுமே 'நோன்பு'..!
•••
வீட்டிற்கு வீடு சென்று
பசிக்காக 'வேண்டி நிற்கும்' நாம்
வீதியில் விழுந்த வினாக்குறிகள்...!
•••
நம் கண்கள்–
கண்ணீர் சுரக்கும் அட்சய பாத்திரம்தான்!
•••
இப்போது நீ உறங்கு!
உறங்காமல் இருப்பதற்கு
உனக்கும் காலம் வரும்.
•••
விடிவதற்கு நேரம் இருக்கு:
என் மடிமீது தலை வைத்து
நீ தூங்கு..!
•••

சிந்தனைப்பித்தன்.

## அந்தநாள் ஞாபகம்





➡ பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் இளமையில் மட்டுமல்ல இப்போதும் வசீகரம் தான். பாலஸ்தீன–இஸ்ரேலிய ஒப்பந்தம் அடிக்கடி முட்டுக்கட்டைகளை எதிர்நோக்கும்போதும் அரபாத் மட்டும் நம்பிக்கையுடன் இருக்கிறார். பாலஸ்தீன தீவிரவாதிகள் வசை பாடுகின்றனர். கத்தி முனையில் கயிற்றில் நடக்க வேண்டிய நிலை இன்று அரபாத் துக்கு! வெளியே சொல்லப்படும் அளவுக்கு பாலஸ்தீனப் பிரச்சனையைத் தீர்ப்பதில் இஸ்ரேல் நியாய பூர்வமாக நடந்து கொள்ளவில்லை. அது புரியாமல் பேச்சுவார்த்தை முலமான தீர்வுக்கு பாலஸ்தீன–இஸ்ரேலிய உடன்பாட்டை சில விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அங்கு பிரச்சனை இன்னமும் தீர்ந்தபாடில்லை.

⬇ லிபிய அதிபர் கடாபியுடன் யாசிர் அரபாத். 1992 ஏப்ரலில் விமான விபத்தில் சிக்கி உயிர் தப்பினார் அரபாத். அப்போது எடுக்கப்பட்ட படம் இது. ஆச்சரியமான மீட்சி. பாலஸ்தீன–இஸ்ரேலிய ஒப்பந்தத்தில் கடாபிக்கு பெரிய உடன்பாடில்லை.



## யார் இவர்?

⬇ சின்னம் சிறு மலர். இப்போது கவர்ச்சிக் குயின். தமிழ்ப்படம் ஒன்றிலும் நடித்துள்ளார். இந்தியில் சர்ச்சை கிளப்பும் நடிகை இவர். 'பட்' என்று கண்டுபிடிக்க முடியாவிட்டால் பக்கம் 18க்கு செல்க.



## இந்தப் பூ மறைக்கின்றது

இந்தப் பூவுக்குள் இன்னும்
பொத்தி பொத்தியே
மறைக்கப்படுகின்றது உன்
மீதான காதலெனும் வாசம்.
***
வாசத்தை உன் இதயத்தின்
மேல் அள்ளி அள்ளி
வீசத்தான் ஆசை: எனினும்
என்னுள் வாழும் வருத்தங்கள்
வந்ததைத் தடுக்கின்றன.
***
என்னுள் எரிகிறது அன்பே
உன் நினைவெனும் தீபம்
வெளிச்சத்தை மட்டும் நீ
பார்த்து விட முடியாமல்
விரக்திகள் திரையாகின்றன.
***
உன் கடித உறைகளைக் கூட
என் கைகள்
கவனமாகப் பத்திரப்படுத்திக்
கொள்ளும்.
அது என் உயிர் பேசியனுப்பும்
வார்த்தைகளை சுமந்து
வருவதால்....
***
உன் புகைப்படத்தில் தெரியும்
சிறு புன்னகைப்பூவின் வாசத்தில்
என் கண்கள் அடிக்கடி
வாசமடையும்.
***
ஒரு முறை காதலித்த போது,
இதயம் முட்களில் விழுந்து
முளங்கியதால்,
நீ பூக்களின் மேல் நடந்து
செல்ல அழைத்தும் இதயம்
நகர மறுக்கின்றது.
***
இந்தப் பூவுக்குள் இன்னும்
பொத்தி பொத்தியே
மறைக்கப்படுகின்றது–உன்
மீதான காதலெனும் வாசம்...

கொக்காகல அனபரசி,
கிரஹம்ஸ்லேன்ட், பதுளை.

## நிலவு

* வண்ணச்சோலையின்
பட்டுக் குஞ்சம்.
* பூமித் தாயின்
குங்குமப் பொட்டு.

★★★★★★

## நட்சத்திரங்கள்

★★★★★★

நட்சத்திரங்கள்
* விரிந்த குடையின்
சிதறிய பூக்கள்.
* பஞ்சு மேனியில்–
எரியும்–
கொப்புளங்கள்.

மருதமுனை விஜிலி.

## தேடித் தீர்ப்போம்.....

எவ்வளவு எழுதி
கிழித்தாலும்
ஏன் இந்த
உலகம் மாறவில்லை?
0–0
எப்படிப் பேசி
முடித்தாலும்
ஏன் இன்னும்
உலகம் திருந்தவில்லை?
0–0
என் பிழையா,
உன் பிழையா?
யார் இங்கு
சிந்திப்பது?
0–0
உன் பிழையை
என் பிழை ஆக்கவும்!
என் பிழையை
உன் பிழை ஆக்கவும்!
0–0
சிந்தித்துக் கிடந்தால்
சிந்தனை எல்லாம்
நிந்தனை ஆகுது–வாழ்வு
வீணாய் போகுது.
0–0
யார் தீர்ப்பது
என்றெல்லாம் பேசி
யாழ் மீட்டி
என்ன பயன்?
0–0
ஆழமும் புரியவில்லை;
தீர்க்கும்
வழியும் தெரியவில்லை!
0–0
அறிவுரைகளை
துப்பாக்கிக் கைகளால்
சொன்னால் தான்
கேட்கிறார்கள்!
0–0

சுபா வரன், கண்டி.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், காரியத்தடை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், சஞ்சலம். | பி.ப. 4 மணி |
| வியாழன்- காரியத்தடை, பலவித கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| சனி- பெரியோர் அனுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, இனசன மேன்மை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், உறவினர் நன்மை. | பி.ப. 1 மணி |
| புதன்- மனக் கலக்கம், காரியத்தடை. | பகல் 11 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| சனி- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், செலவு அதிகம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- காரியசித்தி, பலவித பேறு. | பி.ப. 1 மணி |
| சனி- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | பி.ப. 4 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், தொழில் மந்தம். | பி.ப. 4 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரியசித்தி, கௌரவம். | பி.ப. 3 மணி |
| புதன்- மனக் கலக்கம், உறவினர் பகை. | பகல் 11 மணி |
| வியாழன்- குடும்ப சுகம், பெரியோர் நட்பு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- பலவித பேறு, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- குடும்ப கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 3 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, உறவினர் நன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| வியாழன்- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 மணி |
| சனி- தொழில் நஷ்டம், கடன் படல். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

## இந்த வாரம் உங்கள் பலன்

(30.03.1997 தொடக்கம் 05.04.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், வெள்ளி, சனி, கேது. |
| மேடம் | - புதன். |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |
| மகரம் | - வியாழன். |

★ சந்திரன்- விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. 3 மணி |
| திங்கள்- மனக் கவலை, தொழில் மந்தம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் தொல்லை, பெரியோர் பகை. | பி.ப. 1 மணி |
| புதன்- துயர்நீங்கும், மன மகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், தேகசுக நன்மை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| சனி- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- செல்வாக்கு மேன்மை, ஆடம்பர வாழ்வு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், முயற்சி தடை. | பி.ப. 2 மணி |
| புதன் - வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| வெள்ளி- இனசன விரோதம், மனக்கிலேசம். | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் கஷ்டம், பிரயாண மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- கடன் தொல்லை, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, உறவினர் உதவி. | பி.ப. 3 மணி |
| புதன்- பயனுள்ள செயல், மனக் கிலேசம். | பி.ப. 4 மணி |
| வியாழன்- தூர இடப்பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணச் செலவு. | மு.ப. 10 மணி |
| சனி- குடும்ப சுகம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- முன்னேற்றம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, காரியசித்தி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, உறவினர் உதவி. | பி.ப. 4 மணி |
| புதன்- மறைமுக எதிர்ப்பு, மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- கடன் தொல்லை, காரியத் தடை. | பகல் 11 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, குடும்ப சுகம். | மு.ப. 10 மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- மறைமுக எதிர்ப்பு, மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, தொழில் உயர்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் குறைநீங்கும். | பி.ப. 3 மணி |
| புதன்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், காரியத் தடை. | பி.ப. 1 மணி |
| சனி- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- அந்நியர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, இனசன நன்மை. | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, தொழில் சிறப்பு. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- பணச் செலவு, குடும்ப நன்மை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- மறைமுக எதிர்ப்பு, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- உயர்ந்த எண்ணம், மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், ஆடம்பரச் செலவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- கடன்படல், கஷ்டமான வாழ்க்கை. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| சனி- பெரியோர் பகை, வீண் மனஸ்தாபம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்





## திறமை காண்பீர்!

தூக்கணாங் குருவியின் கூடு
தொங்கும் அழகினைப் பாரு!
பக்கம் தோறும் ஏடு
படித்து அறிவைச் சேரு!

வன்மை கொண்ட அரக்கு
வந்து செய்தது யாரு?
திண்மை கொண்டு உருக்கு
மேனியாய் நித்தம் பழக்கு!

சிலந்தி வலையைக் கட்டும்
சிறப்பை என்ன சொல்ல!
பலவாய் எண்ணம் மட்டும்
மனதைத் தட்டும் மெல்ல!

தேனின் கூடும் மரத்தில்
ஏங்க வைக்கும் எம்மை!
மனிதன்கொண்ட மனதில்
மாறுவதெப்போ பொய்மை?

கே. பாரதி மோகன்.

அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!
பெரும்புகழ் நுமக்கேயிசைக்கின்றேன்;
பிரமதேவன் கலையிங்கு நீரே!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

முன்னொரு காலத்தில் ரோம் நகரில் சிறந்த ஓவியர் ஒருவர் இருந்தார். கள்ளங் கபடமற்ற தன்மையை விபரிக்க ஓர் ஓவியம் வரைய வேண்டும் என்று அவர் விரும்பினார்.

அதற்காக கள்ளங்கபடமற்ற முகத்தை உடைய சிறுவன் ஒருவன் கிடைக்க மாட்டானா என்று பலநாட்கள் தேடியலைந்தார். கடைசியாக ஒரு சிறுவன் கிடைத்தான். அவனுடைய கள்ளங்கபடமற்ற முகத்தைக் கண்டு ஓவியரே ஆச்சரியப்பட்டார்.

அவர் அந்தச் சிறுவனை மாதிரியாகக் கொண்டு ஓவியத்தை வரைந்து முடித்தார். அந்த ஓவியம் ஆயிரக் கணக்கில் விலை போனது. ஓவியர் அதனால் பெரும் பணக்காரர் ஆனார்.

பலவருடங்கள் சென்றன.

அந்த ஓவியர் கெட்ட குணத்தைப் பிரதிபலிக்கக்கூடிய ஓவியம் ஒன்றை வரைய விரும்பினார். இதற்கு கெட்ட குணத்தை உடையவர்களை மாதிரியாக வைத்துத்தான் ஓவியம் வரைய வேண்டும் என நினைத்தார்.

கெட்ட குணம் உள்ளவர்கள் எனில் சிறைச்சாலையில் உள்ள கைதிகளைப் பார்த்தால்தான் அது முடியும் என்று எண்ணினார். உடனே ரோம் நகரின் சிறைச்சாலைக்குள் செல்வதற்கு உத்தரவு பெற்றுக்கொண்டு, அங்குள்ள கைதிகளைப் பார்த்தார்.

அங்கே ஒரு கைதியின் முகம் தாம் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு மிகவும் பொருத்தமாக அவருக்குத் தோன்றியது. ஓவியர் அந்தக் கைதியைப் பார்த்து,

"நான் உன்னை, மாதிரியாக வைத்துக் கொண்டு ஓவியம் ஒன்றை வரைய விரும்புகிறேன். அதற்கு நீ கேட்கும் பணத்தைக் கொடுக்கிறேன். என்ன உனக்கு விருப்பமா?" என்று கேட்டார்.

"எல்லாரும் அழகானவர்களை மாதிரியாக வைத்தே படம் வரைவார்கள். அயோக்கியனான என்னை ஏன் நீங்கள் வரைய விரும்புகிறீர்கள்?" என்று கேட்டான் அந்தக் கைதி.

பல வருடங்களுக்கு முன் அவர் வரைந்த படத்தின் பிரதி ஒன்றைக் காட்டினார்.

படத்தைப் பார்த்தும் கைதி, விக்கி விக்கி அழ ஆரம்பித்தான்.

"ஏனப்பா அழுகிறாய்?" என்று கேட்டார் ஓவியர்.

"இந்தப்படத்தை நீங்கள் பல வருடங்களுக்கு முன்னர் என்னைப் பார்த்துத்தான் வரைந்தீர்கள்!" என்று அழுது கொண்டே சொன்னான்.

"இது நீயா? இந்த நிலமைக்கு எப்படியப்பா வந்தாய்?" என்று கேட்டார் ஓவியர்.

## கெட்ட சகவாசம்



அதற்கு அந்த ஓவியர்,

"நான் பல வருடங்களுக்கு முன்னர் 'கள்ளங்கபடமற்ற முகம்' என்று ஒரு சிறுவனை மாதிரியாக வைத்து படம் வரைந்தேன். இப்போது அதற்கு எதிரிடையாக படம் ஒன்று வரைய விரும்புகிறேன். அதற்குத்தான் உன்னைத் தேர்ந்தெடுத்தேன்," என்று கூறி

"எல்லாம் என் கெட்ட சகவாசத்தால் தான் வந்தது!" என்றான் கைதி.

**(நல்ல பாலில் ஒரு சொட்டு மோர் ஊற்றினால் போதும் பால் அத்தனையும் திரிந்துவிடும். அதுபோல கெட்டவர்களுடன் நல்லவர்கள் சேர்ந்தால் அவர்களும் கெட்டவர்களாகி விடுவார்கள்.)**

## வாரம் ஒரு நாடு

### ட்ரினிடாட் மற்றும் ரொபாகோ



தலைநகர்- போர்ட் ஒப் ஸ்பெயின்
பரப்பு- 5128 சதுர கிலோமீட்டர்
மக்கள் தொகை- 13 இலட்சம்
மொழி- ஆங்கிலம்
எழுத்தறிவு- 96%
சமயம்- கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம்.
நாணயம்- ட்ரி மற்றும் ரொபா டொலர்
தனி நபர் வருமானம்- 3940 டொலர்.

**அமைவிடம்:**

ட்ரினிடாட், மேற்கிந்தியத் தீவுக் கூட்டத்தில் உள்ள இரண்டாவது பெரிய தீவு. இது தென் அமெரிக்க வடக்குக் கரைக்கு மிக அருகில் அமைந்துள்ளது. ட்ரினிடாட்டில் இருந்து 20 மைல் தொலைவில் ரொபாகோ தீவு அமைந்துள்ளது.

**வரலாறு:**

கொலம்பஸ் 1498ல் ட்ரினிடாட்டைக் கண்டுபிடித்தார். நிர்வாகப்பணுக்காக ரொபாகோதீவு இதனுடன் 1889ல் இணைக்கப்பட்டது. முன்பு பிரிட்டனின் ஆளுகைக்குட்பட்டிருந்த ட்ரினிடாட் மற்றும் ரொபாகோ 1962ல் சுதந்திரமடைந்தது. 1976ல் குடியரசாக்கப்பட்டது. 1990 ஜூலையில் இஸ்லாம் தீவிரவாதிகளால் குழப்பம் விளைவிக்கப்பட்டது. எனினும் இது ஆறு மாதங்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டது.

**பொருளாதாரம்:**

எண்ணெய் சுத்திரிகரிப்பு, கைவினைப் பொருட்கள் ஆகிய முக்கிய தொழில்கள். கரும்பு, எலுமிச்சை, திராட்சை, கொக்கோ போன்றவை முக்கிய விளைபொருட்கள். சுற்றுலாத்துறை மூலம் அதிக வருமானம் கிட்டுகிறது.

## முதலில் தேநீர்



உலகில் முதன் முதலில் தேநீர் அருந்தப்பட்டது 12வது நூற்றாண்டில்தான். சீன நாட்டுத் துறவிகள் தேநீரை நோய்களின் நிவாரணியாகவே கருதி அருந்தினர். தேநீர் குடிப்பதற்காகவே ஒரு புனிதமான அறையை வைத்திருந்தார்களாம். அந்த அறைக்குள் அவர்கள் நடந்து செல்லாது தவழ்ந்து சென்றுதான் தேநீர் அருந்தி வந்தனர். அந்தப் புனித அறையைத் தவிர வேறு இடங்களில் தேநீர் அருந்துவதில்லை.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 05.04.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 186
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 184

பரிசுக்குரியவர்:
நர்மதா வேல்முருகு,
வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலை, மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| மதிவதனி பரமசிவம், தமிழ்மகா வித்தியாலயம், டிக்கோயா. | த. தயானந்தராஜா, கு/ பறகஹதெனிய தேசிய பாடசாலை. |
| முஹம்மது வவ்பீக், பு/ எருக்கலம்பிட்டி, மு.ம.வி, பாலாவி. | எம். முஹமட் நிலூஜான், கரு/ ஜீலான் மத்தியகல்லூரி, ஹேனமுல்லை, பாணந்துறை. |
| சிந்துஷன் சந்திரசேகர் அரியாலை, யாழ்ப்பாணம். | பா. புனித சாந்தனி, புளியாவத்தை த.ம.வித்தியாலயம், டிக்கோயா. |
| என்.எம்.முஷ்தாக் அகமட், மட்/ அறபா வித்தியாலயம், ஏறாவூர்-06. | ம.கே.என். ரிஷாதா, தமிழ் மகளிர் ம.வி. பதுளை. |
| யோகினி திருக்கணேசன், வ/ சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | ந. இராஜேஸ்வரி கண்ணா. பது/ சிவானந்தா தமிழ் வித்தியாலயம், பதுளை. |

## வில்ஹெம் கே. ரொயென்ஜென்

இன்றைய மருத்துவ உலகில் சர்வ சாதாரணமாக விளங்குவது 'எக்ஸ்-றே' எனப்படும் சாதனமாகும். உலகிலுள்ள சின்னஞ்சிறு நகரங்களிலுள்ள மருத்துவ மனைகளிலும் இந்த எக்ஸ்-றே சாதனத்தைக் காணலாம். உடலில் ஏதாவது ஓரிடத்தில் காயமென்றால் அதற்கு உடனடியாக மருத்துவர்கள் மருந்து கட்டிச் சுகப்படுத்தி விடுவார்கள். காய்ச்சல், வயிற்றுளைச்சல் போன்ற சாதாரண நோய்களையும் சிரமமின்றிக் கண்டு பிடித்து விடலாம்.



உடலின் உள்ளுறுப்புகளில் ஏதாவது கோளாறு இருக்குமானால் அதனை எவ்வாறு கண்டு பிடிப்பது? தலையில் பலமான அடிபட்டு மூளையில்கூடத் தாக்கம் ஏற்பட்டிருக்கலாம்; கண்ணின் உள்ளே ஏதாவது பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம்; கைகால் எலும்புகளோ அல்லது முதுகு எலும்போ உடைந்திருக்கலாம். ஏன்- இருதயத்தில் கூட ஓட்டை விழுந்திருக்கலாம்-இத்தகைய பாதிப்புகளை மிகச் சுலபமாக எடுத்துக் காட்ட வல்லது இந்த எக்ஸ்-கதிர்களே. எக்ஸ்-கதிர்கள் கண்டு பிடிக்கப்பட்டமையினால் மருத்துவத் துறையில் ஒரு பெரும் புரட்சியே ஏற்பட்டுவிட்டது எனலாம்.

வில்ஹெம் கே.ரொயென்ஜென் என்ற ஜெர்மன் நாட்டு விஞ்ஞானியே முதன் முதலில் இந்த எக்ஸ்-றேயைக் கண்டு பிடித்தார். இவர் ஜெர்மனியில் 1845ல் ஒரு விவசாயியின் மகனாகப் பிறந்தார். தாயார் ஒல்லாந்துக்காரர். இவர் தனது ஆரம்பகாலக் கல்வியை ஒல்லாந்திலும் சுவிற்ஸர்லாந்திலும் பெற்றார். சுவிஸிலுள்ள சூரிச் பல்கலைக்கழகத்தில் பௌதிகவியலில் கலாநிதிப்பட்டம் பெற்றார்.

ரொயென்ஜென் சிறு வயதிலிருந்தே பலதரப்பட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். 1895ம் ஆண்டில் இவருக்கு பௌதிகவியலுக்கான நோபெல் பரிசு கிடைத்தது.

ஆரம்பத்தில் கதோட் கதிரியக்கத்தைப் பற்றி ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கும் போதே, தற்செயலாக ஒரு புதிய கதிர் வீச்சு உருவாவதைக் கண்டார். மின்சக்தி மற்றும் காந்தக்கட்டி போன்றவற்றினூடாக மிகச்சுலபமாக இப்புதிய கதிர்வீச்சு ஊடுருவுவதை அவதானித்தார். இத்தகைய கதிர் வீச்சு, அது வரை கண்டறிந்த எத்தகைய கதிர்க் குடும்பத்தையும் சேராதமையினால் இதனை ரொயென்ஜென் 'எக்ஸ்-றே' என்று பெயரிட்டார்.

இவர் 1923ம் ஆண்டு ஜெர்மனியில் முனிச்நகரில் காலமானார்.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஓடிப் படர்வேன் கொடியல்ல; ஒளி மிக உண்டு நிலவும் அல்ல; வீடுகளை அலங்கரிப்பேன் பூ அல்ல.
   நான் யார்?
2. என் வீட்டுத் தோட்டத்தில் ஐந்து வாழை மரங்கள். அவற்றை ஆட்டினாலும் பிடுங்கமுடியாது.
   அவை என்ன?
3. ஒளிகொடுக்கும்-விளக்கு அல்ல; சூடு கொடுக்கும்- நெருப்பும் அல்ல, பளபளக்கும்- தங்கமும் அல்ல,
   அது என்ன?
4. ஒற்றைக் காலில் சுற்றிடுவான் ஒற்றதபின் படுத்திடுவான்.
   அவன் யார்?
5. கறுப்புப்பாறையில் வெள்ளைப் பிறை-
   அது என்ன?
6. வீட்டில் இருக்கும் அண்டாவுக்கு அடைப்பில்லை.
   அது என்ன?
7. இரண்டு கிணற்றுக்கு ஒரு பாலம்.
   அது என்ன?
8. படர்ந்த காட்டேரிக்கு பக்கமெல்லாம் சடை.
   அது என்ன?
9. கால் இல்லாதவன் உடல் வலிக்காமல் பயணம் செய்வான்.
   அவன் யார்?
10. இருப்பவர் இருவர். பார்ப்பது ஓரிடம்.
   அவர்கள் யார்?

### விடைகள்

1. மின்சாரம் 2. கைவிரல்கள்
3. சூரியன் 4. பம்பரம்
5. யானைத் தந்தம் 6. கிணறு
7. மூக்கு 8. ஆலமரம்
9. பசு 10. கண்கள்.

தொகுப்பு: ஆர். கீதா ரோஸ்லின்ட

## பெரிய நினைவுச் சின்னம்

உலகிலேயே மிகப் பெரும் நினைவுச் சின்னம் என்னும் பெயர் பெற்றுள்ளது அமெரிக்காவில் உள்ள ரூஷ்மோர் மலைச் சிகரம். இங்கே மறைந்த அமெரிக்க ஜனாதிபதிகளின் உருவங்கள் சிலைகளாக செதுக்கப்பட்டுள்ளன.

நிலத்திலிருந்து 2000 மீட்டர் உயரமான இவற்றை ஹட்சன் போக்லம் என்ற சிற்பி 1927ல் தனது 340 பேர் கொண்ட ஒரு குழுவினருடன் செதுக்க ஆரம்பித்தார். 500 ஆயிரம் தொன் கற்கள் இதன்மூலம் வெட்டி எடுக்கப்பட்டன. இந்தச் சிலைகளை அமைக்க 14 வருடங்கள் பிடித்தன.

முதலாவது படத்தில் இருப்பது, ரூஷ்மோர் மலை செதுக்கப்படுவதற்கு முன்னர் உள்ள தோற்றம். இரண்டாவது படம் சிலைகள் செதுக்கப்பட்டபின் உள்ள தோற்றம்.



www.padippakam.com

**கொளுத்தும் கோடை வெயிலுக்கு இதமான – இளமையான ஜில் ஜில் தொடர் இது! சுஜாதாவின் தொடர்களில் பரபரப்பான தொடர் இது!**

# காயத்ரி

அங்கம் 02

## நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

**சென்றவாரம்**

**பழைய புத்தகக் கடையில் தற்செயலாய் ஒரு நோட்டுப் புத்தகத்தைப் பார்க்கிறார் அந்த எழுத்தாளர். கையெழுத்தில் தன் சொந்தக் கதையை அதில் எழுதியிருக்கிறாள் ஒரு பெண். கதையை படித்துவிட்டு தன்னைக் காண அவசியம் வரவும் என எழுதியிருக்கிறாள், அவள் பெயர் காயத்ரி. ரத்னா என்பவனை திருமணம் செய்கிறாள், ரத்னாவின் சில குணங்கள் புதிராக உள்ளன. ரத்னாவுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை தொடர்ந்து விபரிக்கிறாள். இனி....**

அந்தப் புன்னகையை என்னால் ரசிக்க முடியவில்லை. வயிற்றில் ஓர் 'என்னவோ' உணர்ச்சி ஆரம்பித்தது.

நாங்கள் கிளம்பி வருகையில் அந்தப் பையன் இன்னும் தேடிக்கொண்டிருந்தான். கையெல்லாம் ரத்தக் கீறல்கள்.

-7-

நட்ட நடு ராத்திரி. படுக்கையை விட்டு எழுந்து டெலிஃபோன் பேசுகிறார். டிரங்கால் போட்டு

"நன்றாக இருக்கிறாயா சரஸு?"

"மருந்து சாப்பிட்டாயா?"



"இன்னும் இரண்டு நாளில் வந்து விடுவேன்."

"பரவாயில்லை."

"பரவாயில்லை. முதலில்தான் கொஞ்சம் சிரமம்."

இந்தப் 'பரவாயில்லை' பதில்கள் எந்தக் கேள்விகளுக்கு? என்னைப் பற்றியா? சரஸு அவர் அக்கா. கல்யாணத்தில் பார்த்தது ஞாபகத்திற்கு வருகிறது. காதில் கழுத்தில் நகைகள்: நெற்றியில் பொட்டு கிடையாது. நாற்பது வயதிருக்கலாம். நல்ல உயரம். விதவை.

கணவர் ஆர்மியில் மேஜராம். பாகிஸ்தான் சண்டையில் இறந்து போய் விட்டாராம். நாற்பது வயதுக்கு நல்ல அழகாகத்தான் தோன்றினாள்.

-8-

நாங்கள் மெட்ராஸ் திரும்பிவிட்டோம். சரஸ்வதி ஸ்டேஷனுக்கு வந்திருந்தாள். சரஸு என்றுதான் கூப்பிடுகிறார். அதுவும் ஏறக்குறைய சரஸு.

"அதற்குள் இளைத்து விட்டாய்." என்றாள் ரத்னாவைப் பார்த்து. என்னைப் பார்த்து, "வாம்மா குழந்தை" என்று தொட்டுத் தடவிக் கொடுத்து ரொம்பவும் அனுசரணையாகத்தான் இருந்தாள்.

கார் நன்றாகவே ஓட்டுகிறாள். நெயில் பாலிஷ் நீல நிறத்தில். கச்சிதமாகத் தலையை முடிந்திருந்தாள். கத்தரிப்பூ கலரில் ரெட்டைப் பேட் போட்டுப் பட்டுப் புடவை. கார் ஓட்டிக் கொண்டே பேசினாள்.

"ரத்னா ரொம்பத் தொந்தரவு செய்தானோ!"

"இல்லை அக்கா" என்றேன்.

"அக்கா என்று கூப்பிடாதே. சரஸு என்று கூப்பிடு....."

"இருந்தாலும் நீங்கள் என்னைவிடப் பெரியவர் இல்லையா?"

"சரஸு என்றே கூப்பிடு. என்ன ரத்னா? பெண்டாட்டி வந்ததும் என்னை மறந்து விடுவாய்."

"சேச்சே! உன் ஆஸ்துமா எப்படி இருக்கிறது?"

"பரவாயில்லை குழந்தை."

"உன் இன்ஜெக்ஷன் எல்லாம் எடுத்துக் கொண்டாயா? டாக்டர் வந்தாரா? பணம் வந்ததா? முத்து திரும்பி வந்து விட்டானா...?"

நான் சுவாரசியம் இல்லாமல் மெல்ல இடது வலது பக்கம் பார்க்கிறேன். சென்னையில் கொஞ்சம் வெறுமை அதிகமாக இருக்கிறது.

திடீர் என்று அம்மாவையும் விஜியையும் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது.

இப்படி என்னைக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற் போல் இருக்கிறதே அம்மா! அவர்கள் எல்லோரும் கோயமுத்தூர் போயிருப்பார்கள். அப்பு மெட்றாஸ் வரும்போது நிறைய வீட்டுக்கு உண்டான சாமான்கள் அனுப்பி வைக்கிறார்கள். ஏகப்பட்ட பழங்கள், அப்பளம், ரசப்பொடி. "அந்தக் கிச்சன் சாமான்கள் எல்லாம் எதற்கு? நம் வீட்டில் நிறைய இருக்கிறது. அதெல்லாம் அனுப்ப வேண்டாம் என்று எழுதிவிடு."

-9-

மத்தியானம் முழுதும் தூங்கினேன். ஞாபகம் வந்துவிட்டது.

ஆனால் கையைக் காலை அசைக்க முடியவில்லை.

யாரோ மாரில் ஏறிக்கொண்டிருப்பது போல. ரத்னா என்று கூப்பிடுகிறேன். சப்தம் வரவில்லை. அம்மாவைக் கூப்பிடுகிறேன். விஜியைக் கூப்பிடுகிறேன். அப்பாவை, ஏன், அப்பாவைக் கூட.

எப்படியோ உலுக்கிக் கொண்டு எழுந்தேன். எதிரே சரஸு நின்று கொண்டிருந்தாள். என் புடவை முழங்காலுக்கு மேல் விலகியிருக்கிறது. சரி பண்ணிக் கொண்டு அவளைப் பார்த்தேன். சிரித்தாள்.

"ஏன் டயர்டாக இருக்கிறாயா?" என் அருகில் உட்கார்ந்து என் தலையைத் தடவிக் கொடுத்து, "உன் பீரியட் எப்போது?" என்றாள். மாத்திரை சாப்பிடுவதை சொன்னேன். "உடனே அதை நிறுத்து; யூட்டிரஸ் அஃபெக்டாகிவிடும்."

கோடிக்கணக்கான பேர் சாப்பிடுகிறார்கள் என்று சொல்ல விரும்பினேன். Sarasu did a very Strange thing. (சரஸு புதுமையாக ஒன்றைச் செய்தாள்)

என்னை மெதுவாகத் தலையைத் தடவிக் கொண்டே இருந்தவள் அன்புடன், ஆதாரத்துடன், முத்தம் கொடுத்தாள்.

அவள் போட்டிருந்த பர்ஃப்பியூம் மணத்தையும் மீறி வியர்வை நாற்றம் என்னைத் தாக்கியது.

"நீ எனக்குக் குழந்தை மாதிரி" என்றாள். இழுத்துச் சென்றாள். அவள் கணவர் போட்டோ பெரிசாக மாட்டியிருந்தது. "தினம் தினம் மாலை போடுகிறேன். தேசத்துக்காகச் செத்துப் போனார். பிரசிடென்ட்டிடமிருந்து கையெழுத்துப் போட்டுக் கடிதம் வந்தது" என்றாள். அப்புறம்.

-10-

ராத்திரி ரத்னாவைத் தனியாகக் கேட்டேன். "சரஸு நம்முடன் இருக்கப் போகிறாரா?"

"பின்னே?" என்றார்.

"எவ்வளவு நாள் நம்முடன் இருக்கப் போகிறார்?"

"ஏன்? எப்போதுமேதான்."

மறுபடி புன்னகை.

❤ ❣ ➻

## இரண்டு

காயத்ரியின் நோட்டுப் புத்தகம் எனக்குக் கிடைத்த மூர்மார்கெட் சந்தர்ப்பம் உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என நினைக்கிறேன். இல்லாதவர்கள் சென்ற இதழுக்கு ஓடவும். காய்த்திரியின் வாக்கியங்களை அப்படியே தருவதற்கு மற்றொரு காரணம்: நான் காயத்திரியைச் சந்திக்கச் செல்லுமுன் வேறு ஒருவராவது இந்த வரிகளைப் படிக்க வேண்டும் என விரும்புகிறேன். அது ஏன் என்பது முழுவதும் அவளைப் படித்ததும் தான் புலப்படும்.

வா காயத்ரி.

**1.**

சரஸு எனக்குப் பட்டுப்புடவை பரிசாக கொடுத்தாள். என்ன Dicasion என்று கேட்டேன். "சும்மாதான் எனக்கு இந்த மாதிரி ஃப்ளாஷியாக எல்லாம் உடுத்திக் கொள்ள முடியாது. நீ சின்னப்பெண் உனக்கு எது கட்டினாலும் நன்றாக இருக்கும். நீ உடுத்திக்கொள். உனக்கே உனக்கு." என்றாள்.

கருநீல வர்ணப் புடவை. பெரிய ஜரிகை. நான் வாங்கிக் கொண்டேன். "இன்றைக்கே உடுத்திக் கொள்ள வேண்டும்." என்றாள். நான் சாமி மேல் பாரத்தைப் போட்டு நாள் நன்றாக இல்லை என்று தள்ளிப் போட்டு விட்டேன். நான் அதை அணிந்து கொள்ள மாட்டேன். It will Smell of her. (அது அவள் மணத்தைத் தரும்)

**2.**

அந்த வீட்டை வர்ணித்தாக வேண்டும். பெரிய கருங்கல் சுவர் போட்டு அதற்குமேல் உடைந்த கண்ணாடித் துண்டுகள் பதித்து காம்பவுண்டு சுவர். வாசலில் பச்சைப் பெயிண்ட் அடித்த மரக்கும்பாச்சிக்குள் கூர்க்கா, 'ஸலாம் மேம்ஸாஹப்' என்று மூஞ்சி பூரா சிரிப்பான். சீனக் கண்கள். அவனுக்கு அறுபது வயது என்றாலும் இருபது வயது என்றாலும் நம்பலாம். அப்புறம் அவுட் ஹவுஸ். அதில் சாமிநாதய்யர் இருக்கிறார். பாவாடை, தாவணி போட்டுக்கொண்டு அவர் பெண் இருக்கிறது. 'அய்யர்' சமையல் வேலை செய்கிறார். பெண் சுற்றுக்காரியம். பெண் ஏழைதான்! ஆனால் ரவிக்கை எல்லாம் பயங்கர ஸ்டைலாகத்தான் வைத்திருக்கிறது. முதுகில் அதல பாதாளத்துக்கு வெட்டு சரிகிறது. நல்ல வளர்த்தியான மார்பகங்கள். ரத்னாவைக் கண்டால் மார்பில் லாரி பூணூல்தான். நல்ல கறுப்பு. என்னை மாமி என்று கூப்பிடுகிறது. (கறுப்பை எல்லாம் யார் கவனிக்கிறார்கள்.....) ஆனால் இதுவரை ரத்னா அதை வேறு மாதிரிப்பார்த்து நான் பார்த்ததில்லை. சரஸு தன் நகைகளை எல்லாம் கழற்றி பிளாஸ்டிக் டப்பாவுக்குள் வைத்துவிட்டு மார்பு வரைக்கும் டர்கிஷ் டவலைக் கட்டிக்கொண்டு பலகையில் உட்கார்ந்திருக்க, பெண்பாவாடையைத் தூக்கிக் கட்டிக் கொண்டு எண்ணெய் தேய்ப்பது வாரமிரு முறைக் காட்சி. எனக்கும் தேய்த்து விடுகிறேன் என்றது. வேண்டாம் என்று சொல்லி விட்டேன்.

எனக்குப் பிறர் தொட்டால் கூசுகிறது. வீட்டில் அப்படி வளர்த்துவிட்டார்கள். விஜி என்னைத் தொட்டதில்லை. அம்மா என்னைத் தொட்டதில்லை. தம்பி, அண்ணன் காரர்கள் எல்லாம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள். Girls are always dirty (பெண் பிள்ளைகள் எப்போதும் அசுத்தம் என்பார்கள்.) சரஸு மாதிரி குளிக்கும் போது ஜலகன்னிகை மாதிரி அரைகுறை உடையில் வெயிலில் பின் பக்கம் உலாத்துகிற பிஸினஸ் எங்கள் வீட்டில் கிடையவே கிடையாது. எல்லாக்கதவையும் சாத்திக் கொண்டுதான் காதுத் திருகாணியைக் கூடக் கழற்றுவோம்.

சரஸுவை Amazon (அமேஸன்)வகையில் தான் சேர்க்க வேண்டும். 5' 8'' அல்லது 5' 9'' இருப்பாள். ஒவ்வொரு கையும் குருவாயூர் கோயில் தூணை ஞாபகப் படுத்தும். நிறமும் ஏறக்குறைய ரத்னாவின் நிறத்தில் இருக்கிறாள். கொஞ்சம் அளவுக்கு அதிகமான வளர்த்தி இடுப்பல் இருந்தும் கட்டிப்பிடித்து அடக்கி டீக்காகவே டிரஸ் செய்து கொள்கிறாள். Merry Widow (சந்தோஷமான விதவை) என்று தான் சொல்ல வேண்டும். பாலச்சந்தர், எஸ்.பி. முத்துராமன் படத்திற்குப் போகிறாள்.

வீட்டில் சரஸுவின் அறை தனியாக இருக்கிறது. மாடியில் கோடியில். அறைக்குள் அவள் கொத்ரெஜ் அலமாரியை ஒரு தடவை திறந்து காட்டினாள். ஒரு லாக்கர் நிறைய அவள் மாமியார் நகைகள். சொந்த நகைகள் என்று வைத்திருக்கிறாள். கோவில் நகைகள் போலப் பவழமும் முத்தும் சிவப்பும் தங்கமும்.... வெள்ளமாகப் புடவைகள். என்ன என்னவோ ஃபாரின் சாமான்கள். அவள் கணவரின் போட்டோ மீசை வைத்து ராணுவ உடையில், சரஸுவின் கனத்தைத் தாங்கியிருப்பாரோ என்று சந்தேகமாக இருந்தது.

அறைகளுக்குக் குறைகள் இல்ல. எங்கள் வீட்டில் இருக்கிற ஒன்றரைப் பேருக்கு எத்தனை ரூம்! ரத்னாவுக்கு ஒரு லைப்ரரி. ஒரு ஏஸி ரூம். ஒரு ஆபீஸ் ரூம். ரத்னா என்ன வேலை செய்கிறார் என்று சரியாகத் தெரியாது. நிறைய சொத்து. சொந்த பிஸினஸ். Tool Steel என்றால் என்ன அர்த்தம்? அப்பா அதையெல்லாம் விசாரித்து தான் கொடுத்திருக்கிறார். பணத்துக்கு குறைச்சலில்லை. குறைச்சல் சுதந்திரத்துக்குத்தான்.

பாண்டிபாஜார் போகவேண்டுமா? காரில் தான் போகவேண்டும். கூட டிரைவர் வருவான். அந்த அய்யர் பெண்ணும் வருவாள். அந்த டிரைவரும் அவளும் பார்த்துக் கொள்கிற தினுசில் நிச்சயம் அவளை ஷெட்டில் கொண்டு சென்று திருட்டுத்தனமும் செய்திருக்கிறான். அந்தப் பெண் என் நகைகளையும் அலங்காரத்தையும் ஊடுருவிப் பார்க்கிற தினுசும் தவறாக இருக்கிறது.

ஒரு லெட்டர் எழுத வேண்டுமா? "நீங்க எழுதிக் குடுங்கம்மா. நான் போஸ்ட் பண்ணிவிடுகிறேன்." நடக்க வேண்டுமா? கூடவே வாலைப் பிடித்துக்கொண்டு யாராவது வந்தாக வேண்டும். சமையல் செய்ய விருப்பமாக இருக்கிறதா? "அய்யய்யே! அதெல்லாம் எதற்கு? பன்னிரண்டு பேருக்கு சமையல் ஆக வேண்டும். நீங்க அயிட்டம் சொல்லுங்கோ: நான் பண்ணிக் கொடுக்கிறேன்."

-3-

சரஸு சரஸு சரஸு சரஸு அரை மணிக்கு ஒரு தடவை சரஸு எப்படியாவது எதிலாவது குறுக்கிட்டு விடுகிறாள். அவள்தான் மளிகை சாமான். அவள்தான் மாட்டுக்குப் புண்ணாக்கு. பிக்சருக்கு ரிசர்வேஷன்.

எனக்கு சரஸு மேல் பொறாமை இல்லை. இந்தச் சின்ன அதிகாரங்கள் எல்லாம் எனக்கு வேண்டாம். என்னைத் தனியாக விடப்படாதோ?

"எக்ஸாட்டிக்கா ஏன் யூஸ் பண்ணுகிறாய்? பாண்ட்ஸ் போட்டுக் கொள்ளேன்."

"உன் ப்ரெஸ்ட் சைஸுக்கு நீ முப்பத்து நாலுதான் வாங்கணும்."

நான் என்ன பாடி போட்டுக் கொண்டால் என்ன? எந்தப் பவுடரை எங்கே தடவிக் கொண்டால் என்ன? சரஸு Leave me alone. (என்னைத் தனியாக விடுங்களேன்.)

வந்த ஒரு மாதத்தில் நாத்தனாரைப் பற்றிக் குற்றம் சொல்ல விரும்பவில்லை. எனவே ரத்னாவிடம் நான் தினசரி சரஸுவிடம் படும் ரோதனையைச் சொல்லவில்லை. ஆனால் ஒரு நாள் சொல்லிவிட வேண்டும். அன்பால் அல்லது அன்பு போல் இருக்கிற ஏதோ ஒன்றால் சொல்கிறாள்.

கணவர் என்னிடம் மிக அருமையாகப் பழகுகிறார். ரத்னா "Is a gentleman". (அவர் ஒரு கனவான்.) ரொம்ப Polished (சுத்தமாக) ஆக இருக்கிறார். அவர் சினேகிதர்கள் எல்லோரும் நன்றாக நடந்து கொள்கிறார்கள். அவர் கிளப்பில் போய் ஒரு தடவை டென்னிஸ் ஆடினேன். கொஞ்சம் நீந்தினேன. "You got a body dear lady" (அழகான உடலமைப்பைப் பெற்றுள்ளாய் பெண்ணே!) ரத்னா! அவர் நண்பர்கள் என் மார்பின் மையத்தில் பார்க்கும் போதெல்லாம் அவர் கண்களில் பொறாமையே இல்லை: So Sure of himself. (அவரைப்பற்றி பூரண நம்பிக்கை உண்டு) எனக்குத்தான் அவ்வப்போது பொறாமை ஏற்படுகிறது. மிஸஸ் முகர்ஜி (கால் மி சஞ்சலா!) என்னைப் பார்த்து, "நீ ரத்னாவுக்குப் பொருத்தமில்லை" என்று நேராகச் சொன்னபோது நான் நாகரிகக் கோட்பாடுகளுக்கு இணங்கப் புன்முறுவல் செய்தாலும் உள் மனதில் அவளைக் கிழித்து துர்க்கா தேவி மாதிரி சம்காரம் பண்ணிக் குடலை மாலை போட்டுக் கொண்டேன். Dracula. (டிரேக்கூலா)

அழகான, ஆசையான, அன்பான கணவன் இருப்பதால் மற்ற சில்லரை அசௌகர்யங்களை காயத்ரி பொருட்படுத்துவதில்லை.

காயத்ரி ராஜரத்னம்.

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். சந்தியாகு.
வயது: 23
முகவரி: 9, டாம் வீதி, கொழும்பு -12.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். பாமிஸ்.
வயது: 24
முகவரி: உபதபால் அலுவலகம், நேரிய குளம், வவுனியா.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எஸ். குருபரன்
வயது: 25
முகவரி: JESINGHAUSER STR-07, 47389 WOPPERTAL, GERMANY.
பொழுது போக்கு: பத்திரிகை.



பெயர்: எஸ். கவிதா.
வயது: 19
முகவரி: சம்மர்செட் எஸ்டேட், நானுஓயா.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். இஸ்திகார்.
வயது: 19
முகவரி: 114/3, ராஸிக் மரிக்கார் மாவத்தை, பேருவளை.
பொழுது போக்கு: உதைபந்து, வானொலி.



பெயர்: எம். றிஸ்வான்.
வயது: 22
முகவரி: P.O.BOX - 7681, RIYADH - 11472, K.S.A.
பொழுதுபோக்கு: கிரிக்கெட்.

பெயர்: எம். நசார்தீன்.
வயது: 23
முகவரி: 739, சம்பா ஒழுங்கை, ஆண்டான்குளம், திருமலை.
பொழுதுபோக்கு: ரீ.வி., பத்திரிகை.

பெயர்: பி. அஸ்வர்.
வயது: 19
முகவரி: 125, பஸார் வீதி, சிலாபம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஆர். காண்டீபன்
வயது: 35
முகவரி: P.O. BOX-713, ST. ALBANS MDC 3021, VICTORIYA, AUSTRALIA.
பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல், பத்திரிகை.

பெயர்: ரி. தினேஷ் பிரபாத்.
வயது: 17
முகவரி: 138/3, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு -13.
பொழுது போக்கு: பேனா நட்பு.

பெயர்: ஆர். தியாகராஜா.
வயது: 33
முகவரி: படவத்த எஸ்டேட், பன்னலை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். பைசால்.
வயது: 18
முகவரி: 32, ஒஸ்மான் வீதி, சாய்ந்தமருது, கல்முனை.
பொழுது போக்கு: ரீ.வி., பேனா நட்பு.



படிப்பகம்

www.padippakam.com

**தமிழகத்தின்**
**புதுமை எழுத்தாளர் பிரபஞ்சன்**
**படைத்த சிறந்த கதைகளில்**
**ஒரு முத்து இது!**
**பெண் என்பவள்**
**வெறும் ஜடமல்ல**
**உணர்ச்சிகள் உள்ள மனுஷி**
**என்பதை உணர்வுபூர்வமாக—**
**அற்புதமான நடையில்**
**தரும் படைப்பு இது!**

**இதுவரை**

**சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்துவைத்தார். சுமதி ஒரு அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப்பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. ஒரு நாள் இரவு சுமதியை அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்து சேர்கிறாள். கணேஷனும் தேடி வருகிறான். கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப் போகிறாள்.** **இனி.....**

புதுமைத் தொடர்

அத்தியாயம் 04

# கனவு மெய்ப்பட வேண்டும்

**பிரபஞ்சன்**



அந்த மாணவனிடம் சுமதி சொன்னாள்:

"கவிதை ரொம்ப அர்த்தம் உள்ளது. அழகாயும் இருக்கிறது. ஆமாம், இது யார் எழுதியது?"

அந்த மாணவன் தன் பேராசிரியரைச் சுட்டிக்காட்டினான்.

பெருமையோடு சிரித்துக்கொண்டு அமர்ந்திருந்தான் கணேசன். அவன் சொன்னான்:

"ரஸ்னாவாரா என்கிற ஆங்கிலக் கவி எழுதிய கவிதை இது. நல்ல கருத்துள்ள கவிதை இது. இல்லையா?"

"நிச்சயமாய். இந்தத் தேசத்தில் பெரும்பான்மையான பெண்களுக்கு வீடு, கிணற்றுச் சொர்க்கமாகத்தான் இருக்கிறது; பரவாயில்லை. உங்கள் மாணவர்களை நன்றாகத்தான் தயாரிப்படுத்தியிருக்கிறீர்கள்."

கணேசன் சிரித்துக் கொண்டான். அவன் சிரிக்கையில் அழகாய்த்தான் இருப்பதாக அவளுக்குப்பட்டது.

"இந்த இளம் பருவத்திலேயே, பெண்களின் துயர்களை மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பது நல்லது. பெண்களின் வெறும் அழகுகளை, உடம்பின் அளவுகளைச் சொல்வதாகத்தானே நம் மீடியாக்கள் இருக்கின்றன. இளைஞர்கள் அதனால், பெண்களைக் கூடலுக்கான கருவிகளாகவே பார்க்கப் பழக்கப்படுகிறார்கள். நாம் நம் அளவிலாவது அதை மாற்றி அமைக்க வேண்டும். உங்கள் பணி எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது," என்று அவனிடம் சொன்ன சுமதி, தன் சிறப்புரையில், "பேராசிரியர் திரு. கணேசனின் பணியைப் பாராட்ட வேண்டியது என் கடமை. இரண்டாயிரம் வருஷத்து அடிமை விலங்கை உடைக்கப் போராடுகின்ற எந்த ஆணுக்கும் பெண் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறாள்," என்றும் சொன்னாள்.

"பரவாயில்லை. கல்வித்துறையில் பெரிய அதிகாரியிடமிருந்து மதிப்பைச் சம்பாதித்து விட்டீர்கள். உத்தியோக ரீதியில் அந்தச் சிநேகம் மிக்க லாபமாக இருக்கும்."

கணேசன் அவரைப் பார்த்துச் சொன்னான்.

"அது வேறு ஆளைப் பாருங்க சார்! பொட்டச்சிகிட்டே உதவி பெறுகிற ஆண்பிள்ளை நான் இல்லை."

அந்த வாரத்திலேயே ஒரு நாள் மாலை, சுமதி அலுவலகத்தை விட்டுப் புறப்படும்போது கணேசன் அவளைத் தேடிவந்தான். அவளுக்கு அது ஆச்சர்யமாய் இருந்தது.

"என்ன விஷயம் கணேசன்?" என்றாள் சுமதி.

"இந்தப் பக்கம் ஒருவரைப் பார்க்க வேண்டியிருந்தது. நீங்கள் இந்த அலுவலகத்தில்தான் இருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். சும்மா பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்," என்றான் கணேசன். உண்மையில் அவன் வேறு யாரையும் பார்த்துப் பேச வந்தவன் இல்லை. அவளைப் பார்க்கவே வந்தான். சுமதி இருவருக்கும் காபி தருவித்தாள். சாப்பிட்டுவிட்டு அவன் சென்றான்.

அடுத்த மூன்றாம் நாளே அவன் மீண்டும் அவளைப் பார்க்க வந்தான்.

"ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். தணிகாசலம் வாத்தியார் மகளா நீங்கள்?"

சுமதி திடுக்கிட்டாள்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

அவன் வெற்றியுடன் சிரித்தான்.

சுமதியின் பூர்வீகம் குறித்தும், அவளைப் பற்றியும் கடந்த மூன்று நாட்களாக அவன் விசாரித்துக் கொண்டிருந்தான். கிடைத்த தகவல்கள் அவனுக்குச் சாதகமாக இருந்தன.

"சுமதி! நான் உங்கள் அப்பாவின் மாணவர்களில் ஒருவன். அடடா! உங்கள் அப்பா எத்தனை மாணவர்களுக்கு உதவியிருக்கிறார் என்கிறீர்கள். எனக்கும் பள்ளியில் உதவித் தொகை வாங்கிக் கொடுத்துப் படிக்க வைத்தவர் அவர்தான். நான் இந்த நிலைமைக்கு முன்னுக்கு வர அவர்தான் காரணமாக இருந்தார்."

இதைச் சொல்கையில் அவன் நாக்கு தழதழத்தது.

சுமதிக்கு அவன்மேல் கொஞ்சம் ஒட்டுறவு இதன் மூலம் ஏற்பட்டது உண்மை. அவன் அதன்பின், வரும் போதெல்லாம் சின்னச் சின்ன அன்பளிப்புகள் அவளுக்குக் கொண்டு வருவதை வழக்கமாக்கிக் கொண்டான்.

ஒரு நாளைக்கு அழகிய பூ ஜாடி; ஒரு நாளைக்கு ஊரிலேயே பெரிய கடையில் வாங்கிய இனிப்புக்கள்; ஒரு நாளைக்கு பாரிஸ் நாட்டிலிருந்து வந்த செண்ட் பாட்டில் என்று அன்பளிப்புகளோடு வரும்போதெல்லாம், சுமதி பூரித்துப் போய்விடுவாள்.

சுமதி யோசித்துப் பார்த்தாள்.

'இவைகள் அப்படியென்ன, எனக்கு கிடைக்க முடியாத அபூர்வப்பொருள்கள்? மணியை ஒலிப்பித்து, என் சேவகனிடம் சொன்னால், அடுத்த பத்தாவது நிமிஷத்தில் இவை என் மேஜைமேல் வந்து விடாதா? இவை அன்பளிப்புகள், கொடுக்கிற மனசுக்குள், நிரம்பி, ததும்பி, கரைபுரண்டு, பொங்கி, பிரவாகம் எடுத்து, உடைந்து பீறிட்டு, கிழித்துக் கொண்டு வெளிப்படும் சிசுவின் தலையைப் போல, அன்பல்லவா பிரேமையல்லவா, நேசமல்லவா, ப்ரியமல்லவா, காதலல்லவா, காமமல்லவா வெளிப்படுகிறது? நான் ஊதிப்பெருத்து உடைந்து பஞ்சாய் காற்றில் பறக்கும்படி அடித்து விடுகின்றனவே, இந்த எளிய, ஆனால் எளியதல்லாத காதல் அன்பளிப்புகள்?

ஒரு இதயம் அன்பளிக்கிறது என்றால் என்ன பொருள்? என்பால் அது அக்கறை கொள்கிறது என்றல்லவா பொருள்? நான் இன்னொரு மனிதரால் சிந்திக்கப்படுகிறேன் என்றல்லவா அர்த்தம்? எனக்காக ஒரு அறைக்கதவு திறக்கப்பட்டு, அங்கே நான் குடி வைக்கப்படுகிறேன் என்றல்லவா பொருள்?'

ஒரு நாள் மாலை.

நிலா தயங்கி, வெளுத்து உதயமாகும் ஒரு வேளையில், அவர்கள் கடற்கரை மணலில் கடலையைக் கொறித்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். அப்போது கணேசன் சுமதியிடம் சொன்னான். முகம் பாராமல் கைகளால் மணலை அளைந்தபடி அவன் சொன்னான்.

"சுமதி!"

"உம்?"

அவன் தயங்கினான்.

"சும்மா சொல்லுங்கள்!"

"தவறாக எடுத்துக்கொள்ள மாட்டீர்களே....?"

"பிகுதானே வேண்டாம். சொல்லுங்கள்!"

அவன் சொன்னான்.

"ஐ லவ் யூ சுமதி."

அவள் திகைத்துப் போனாள்.

❀ ❀ ❀

சூரிய ரேகைகள் பச்சைத் தென்னை ஓலைகளில் தங்கமுலாம் பூசுகிற ஒரு காலைப் பொழுதில் வண்டி, சுமதி சென்று சேர வேண்டிய ஊரைச் சேர்ந்தது. உலகத்து ரயில் நிலையங்கள் அனைத்தும் ஒன்று போலவே இருக்கும் போலும்! சுமதி நிலையத்தை விட்டு வெளியே வந்தாள். ஊர், செம்மண் ரஸ்தா, தென்னை, புளிய மரங்கள், வீடுகள் எனத் தோற்றம் கொண்டிருந்தது. எப்போதோ பல மாதங்களுக்கு முன் சுமதி கல்பனாவின் ஊருக்கு வந்து அவளுடன் இரண்டு நாட்கள் தங்கியிருந்தாள்.

கல்பனா, சுமதியின் இளம் பருவத்துத் தோழி. தேக்கங்கட்டையில் கடைந்து மினுமினுப்பு ஏறிய பல்லாங்குழிக் கட்டையில் அவளுடன் சேர்ந்து பல்லாங்குழி ஆடியவள். காக்காய்க் கடி கடித்துக் கொடுத்த மாங்காயைப் பங்கிட்டுக் கொண்டவள். சுமதி சிரித்தால் தானும் சிரித்து, அவள் அழுதால் தானும் அழுது உறவு கொண்டவள்.

ஊராரைப் போலவே கஷ்ட ஜீவனம் செய்கிற சிவபெருமான் இருக்கும் சுற்று மதில் வீழ்ந்த கோயிலையும் தெப்பக் குளத்தையும் கடந்து மார்க்கட்டைக் கடந்து, வலப்பக்கம் திரும்பினால், புதிதாக உருவான குடியிருப்பு வரும். கல்பனா அங்குதான் குடியிருந்தாள்.

சுமதி அழைப்பு மணியை ஒலித்தபோது, கதவைத் திறந்தவள், பத்மா.

திறந்தவளுக்குக் குழப்பம். பளீரென்று பளி விலக்கியது மாதிரி பத்மா சொன்னாள்.

"சுமதி அம்மா? வாங்கம்மா வாங்க. அக்கா இப்பத்தான் குளிக்கப் போனாங்க. நீங்க மாடிக்குப் போய் உட்காருங்க. காபி போட்டுக் கொண்டு வர்றேன்....."

"சௌக்யமா பத்மா?"

"உம். இருக்கேம்மா. அக்காகிட்டே இருக்கேனே வேறு எப்படி இருப்பேன்?"

சுமதி மாடிக்கு வந்து டீபாயைச் சுற்றிப் போட்டிருந்த நாற்காலியொன்றில் அமர்ந்தாள். சௌகர்யமான, சோபாவைப் போன்ற நாற்காலி அது. டீபாயின் மேல் கிடந்த பேப்பரை எடுத்து நோட்டம் விட்டாள். ஓர் இரவு முழுக்கக் கண்விழிப்பும், களைப்புமாகச் சேர, நிம்மதியாக ஒரு அடைக்கலம் கிடைத்தது என்கிற பாதுகாப்பு உணர்வும் சேர, அப்படியே கண்ணயர்ந்தாள் சுமதி.

சுத்தமாகத் தெருவிளக்குகளே இல்லாத ஒரு சந்தில், சுமதி ஓடிக் கொண்டிருக்கிறாள். குண்டும் குழியும் கொண்ட அப்பாதையில் சரளைக்கல் தடுக்கிக் கீழே விழுகிறாள். அவளை இரண்டு பேர் துரத்திக் கொண்டு வருகிறார்கள். அவள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறாள். அக்கயவர்களிடம் அவள் சிக்கிவிடக் கூடாது, ஓடுகிறாள். ஒரு கட்டத்தில் ஓட முடியாது, மயங்கித் தடுமாறிக் கீழே சரிகிறாள். கழுகின் நகங்களை நிகர்த்த கூரிய நகங்களைக் கொண்ட அசுரக்கை அவளை நெருங்கிற்று...

"சுமதி, சுமதி" என்று யாரோ வெகு தூரத்திலிருந்து அழைப்பது கேட்டது அவளுக்கு. சிரமப்பட்டுக் கண்ணைத் திறந்தாள். மங்கலாகத் தெரிந்த கல்பனாவின் உருவத்தை அடையாளம் கண்டு கொண்டாள். 'கல்பனா' என்றவாறு எழுந்து அவளைக் கட்டிக் கொண்டாள் சுமதி. அதுவரை அழக்கூடாது என்று தேக்கி வைத்திருந்த சோகம் அனைத்தும், உடைத்துக் கொண்டு வெளியே பாய்ந்தது போல அழுதாள் சுமதி. கல்பனா, ஒரு குழந்தையை அணைப்பது மாதிரி அவளைத் தேற்றினாள்.

"ஏய், சுமி, அமைதி அடை. என்ன நடந்துவிட்டது என்று அழுகிறாய்? உனக்கு நான் இருக்கிறேனடி பார். பெண் அழக்கூடாது. நம் பலவீனமே அதுதான். அமைதி அடை!"

ஒருவாறு அமைதி அடைந்தாள் சுமதி. கல்பனா கீழிறங்கிச் சென்று காபி எடுத்து வந்தாள்.

"முதலில் இதைக் குடி."

சுமதி காபியைப் பருகி முடித்தாள்.

"இப்போது சொல், என்ன நடந்தது?"

சுமதி நடந்தது அனைத்தையும் சொன்னாள். துணியின்றி வீட்டுக்கு முன், புழக்கடையில் ஒரு பெண் நிற்க நேர்ந்த அந்தக் கொடுமையைக் கேட்டுக் கொதித்துப் போய் பேச நாவெழாது இருந்தாள் கல்பனா. பிறகு சொன்னாள்:

"பெண், அவள் எவ்வளவு படித்திருந்தாலும், என்ன உத்தியோகம் பார்த்தாலும், எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும், அவள் கீழ்த்தரமாகவே தான் நினைக்கப் படுகிறாள். சரி. விட்டுத்தொலை அந்தச் சனியனை! கயவர்களோடு வாழ்க்கை நடத்த முடியாது. உன்னைப் பார்த்தவுடனேயே எனக்குச் சொரசொரவென்று வந்தது. வயதானவர் கட்டும் புடவை, ஜாக்கெட் இந்தக் கோலத்துடன் வந்ததைப் பார்த்ததுமே நினைத்தேன். போய்க் குளிடி, தலை முழுகு. உன்னைப் பிடித்த பிசாசுகள் எல்லாம் தொலைஞ்சதுன்னு குளி. ஒரு வாரம் பத்து நாள் ஓய்வெடு. துணி மணிகள் வாங்கிக் கொள்வோம். பேங்கில் கொஞ்சம் பணம் இருக்கு. எடுத்துக் கொள்வோம். அப்புறமாக ஒரு நல்ல வழக்கறிஞராகப் பார்த்துக் கலந்து பேசுவோம், எல்லாம் நல்லபடியாக முடியும். நான் இருக்கிறேன். நானிருக்கும்போது உனக்கு என்ன நேர்ந்துவிடும்? நான் விட்டு விடுவேனா, உன்னை? ஒரு லீவ் லெட்டர் எழுதிக்கொடு; தபாலில் சேர்த்து விடுகிறேன். உனக்கென்னடி ராஜாத்தி ஒரு பெரிய அதிகாரி நீ! மாசம் பிறந்தால் சுளையாகச் சம்பளம் வாங்கப் போகிறாய். எழு.. போய்க் குளி. எல்லா பாரத்தையும் என் தோளில் சுமத்து. நான் தாங்கிக் கிறேன்..."

சுமதி தேம்பினாள்.

குளித்தாள். குளியல் உடம்புச் சூட்டை மட்டுமா இறக்கும்? மனப்பாரத்தையும் கூட. கல்பனா கொடுத்த புடவையைச் சுற்றிக் கொண்டு குளியல் அறையை விட்டு வெளியே வந்தாள். நீண்டு வளர்ந்து தொங்கிக் கொண்டிருந்த கூந்தலில் இருந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது.

சுமதி கட்டியிருந்த நீல வண்ணமும், நீலத்தினூடே மஞ்சள் பூப்போட்ட சேலைக்குத் தக்க சட்டை ஒன்றை கல்பனா தேடி எடுத்துக் கொடுத்தாள். ரிப்பன்களைச் சேர்த்து ஒட்டுப் போட்டாற்போல, நீல வண்ணமும் மஞ்சள் வண்ணமும் பின்னிப் புணைந்த பட்டை பட்டையான அழகிய பிளவுஸ் அது. பெண்களுக்கு என்று வந்தால் செருப்புத் தைக்கிறவர் மிக மென்மையான இதயம் பெற்றவராகி, மெல்லிய வார்களினால் ஆகிய செருப்புகளைச் செய்கிறார். துணி நெய்பவர்களும், உலகத்து அழகிய வண்ணங்களையெல்லாம் பெண்களுக்கென்றே ஆக்கிக் கொடுக்கிறார்கள்.

சுமதி, சுவர்ப்பக்கம் திரும்பிக் கொண்டு, சேலையின் ஒரு பக்கத்தை வாயில் கடித்து உடம்பை மறைத்தவாறு பிளவ்சை அணியும்போது, எதேச்சையாகத் திரும்பிய கல்பனா, சுமதியின் முதுகைப் பார்க்க நேர்ந்தது. அதிர்ச்சியடைந்து போனாள் அவள்.

**(தொடர்ந்து வரும்)**

# கரி நாக்கு

**ஜெயமணி**

ஸ்கூல் முடிந்ததுக்கடையாளமாக பெல் அடித்தது. அதுவரை இருந்த உற்சாகமெல்லாம் வடிந்து போனவளாக எழுந்தாள் சுசித்திரா. வீட்டுக்குப்போகப் பிடிக்கவில்லை. வேப்பமரத்தடியில் வந்தமர்ந்தாள். அண்ணாந்து பார்த்தாள். அடர்ந்த கிளையூடே அணிலொன்று நுழைந்து நெளிந்து தாவியது. குழாயடியில் தேங்கி நின்ற தண்ணீரில் முங்கி எழுந்து சிலிர்த்த காகங்களில் சில கொப்புத்தேடி அமர்ந்தன.

சற்றுத் தள்ளி கம்பிநெற்றினால் அடைக்கப்பட்ட விசாலமான கூண்டு. தேங்காய் மட்டைகளை சுத்தமாக்கி மீண்டும் பழைய வடிவத்தில் சேர்த்துக் கட்டி அழகான பலூன்களெனத் தொங்கிய பல கூடுகள். துளைவழியாக சின்னக் குருவிகள் புகுந்து புறப்பட்டு கம்பி வளையத்தினூடாகப் பாய்ந்து ஜோடியாக உட்கார்ந்து கீச்சு, மூச்சு சத்தத்தில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி உச்சி மோந்தன.

அவள் ஏக்கங்களில் அமுங்கினாள். என்னமாய் இவை வாழுகின்றன? நாளைய எதிர்பார்ப்பிற்காகப் போராடத் தேவையில்லை. அடக்குமுறைக்கெதிரான விடுதலைக் கோசம் இல்லை. உபதேசம் தேவைப்படாத ஒரு சுகமான ஜீவனம்.

நினைத்தபோது பிடித்தமானபடி பறந்து, உண்டு, களித்து... சே... மனிதர்களாகப் பிறப்பது வீண். அதைவிட நம் அம்மாவுக்கு மகளாகப் பிறந்தது மகா ஈனம்.

என்ன கண்டிப்பு, கறார்.

எதுக்கெடுத்தாலும் சந்தேகப் பார்வை பதியிறாப்போல ஒரு தொண தொணப்பு. மனசே வெறுத்துப்போனது. பன்னிரண்டு வயசிலை வயசுக்கு வந்தது அவள் குற்றமா என்ன? பெரியவளானதும் போதும் படும் அவஸ்தையும்போதும். ஜென்மத்துக்கும் பெண்ணாகப் பிறக்கக்கூடாது.

வயசில்லாத வயசில் ஆளாகியதில் எனக்கு ஒரு மண்ணும் புரியாது என்கிற பயம் அம்மாவுக்கு அடிக்கடி. "இந்தா வாழ்க்கையைத் திருப்பிப்போட்டுப் பார்க்கிறப்போ இரத்தம் சொட்டறமாதிரி இருக்கக்கூடாது. நாம நல்லபடி நடந்து வந்திருக்கோம்னு பெருமைப்பட்டுக்கணும்," என்பாள்.

ஒரு வேளை அம்மா நிறைய ரணப் பட்டுப்போன அநுபவமோ...?

"புத்தி சொல்றது எதுக்கு? அவனவன் அலையுறான். சப்பைத்தனமான பேச்சும், பார்வையும். கொஞ்சம் அழகாக இருக்கக் கூடாது. பக்கத்திலை இருக்கும்போதே வெறிக்கிறான்கள். அறியாத வயசு ஆழும் தெரிஞ்சுக்க முடியாது என்கிறதாலதான்.... உள்ளே போ!"




கூண்டு மாதிரி கட்டிய கொழும்பு நகர வீடுகளில் கூலிக்கு இருக்கிற அவஸ்த்தையைப்போல என்ன இருக்கிறது!

இடவசதி, காற்றோட்டம் எதுவுமற்ற ஜெயில். கொஞ்சம் வெளிக்காற்றைச் சுவாசித்தால்.. ஆசையுடன் தலையை நீட்டினால் அம்மா பக்கத்தோடு நிற்பாள். பார்வை கூர்மையாக இருக்கும்.

'பொறுக்கித் தடியன்கள்மீது காட்ட வேண்டிய கடுப்பை எல்லாம் அம்மா என்மேல் உமிழ்வாள்- சே, அற்பம். எல்லோர் மீதும், எல்லாவற்றின்மீதும் ஒரே வெறுப்பு. எங்காவது ஓடி ஒளிந்துவிடலாமா என்றுகூட எண்ணத்தூண்டும். சிறைத்தனமான நேரங்கள் சில வேளைகளில் அழுகைக்குள் அமுக்கிவிடும்.

"சுசித்திரா தனியா உட்காந்து என்ன யோசனை?" வந்து நண்பிகள் கேட்டபோது அவளுள் அழுகை முகிழ் உடைத்தது.

"இதென்ன இது? எதுக்கு கண்கலங்குறே?"

"அம்மா தினமும் சப்பித்துப்பிறா. ஏச்சுக்களைச் சகிக்க முடியலை. நிண்டா குற்றம், இருந்தா குற்றம். எவனாவது நொள்ளைத்தனமா பேசினா நாமளா பொறுப்பு? இப்பிடித் தொங்கப் போட்டுத்திரியுற நாய்களையெல்லாம் நிக்க வைச்சு சுடணும். ஆமா, சொல்லுங்கடி உங்க அம்மாக்களும் இப்பிடித்தானா?"

"இதுவா, சுசித்திரா? எல்லோருக்கும் ஒரு கட்டத்திலை ஏற்படுகின்ற உதைப்புத்தான். கஸ்ர காலம் நீ சீக்கிரமே பெரியவளானது தான்."

"இழவெடுத்த சனியன் எதுக்கு வந்ததோ. என் சந்தோசங்கள் அத்தனையையும் அழிச்சுப்போட்டு. எவனாவது தெருவோடு பேசிப் போறான் பொறுக்கி மகள் என்றில்லாமல் அம்மா பேசறா. என்னை அம்மா புரிஞ்சு கொள்ளாமல் பேசுவதில் மனசே ஒடிஞ்சு போகிறது. ஒண்டில் நான் இல்லாமல் போகணும் இல்லை அம்மா போகணும்."

வெறுத்துப்போன நிலையில் வாயில் வந்தபடி உணர்ச்சியைக் கொட்டியவள் அதுவே நிஜமாகிப்போய்விடுமென்று நினைத்திருக்கவில்லை. இரண்டொரு தினங்களில் அம்மா போயே போய்விட்டாள். சாதாரண காய்ச்சல் வந்து அப்பிடியே கொண்டு போய்விட்டது.

சுசித்திரா அரண்டுபோனாள். எல்லாக் காரியங்களும் முடிந்து அவள் ஸ்கூலுக்கு வழமைபோல வந்தும் விட்டாள்.

ஸ்கூல் பெல் அடித்தது. அதே வேப்ப மரத்தடியில் வந்தமர்ந்தாள். வீட்டுக்குப் போகப் பிடிக்கவில்லை.

அண்ணாந்தாள். அதோ அணில் பிள்ளை, காக்கா கூண்டுக்குள் குருவிகள். அத்தனையும் தெரிகின்றன. "ஏன் சுசித்திரா! உன் விருப்பப்படி விடுதலை கிடைச்சுட்டுதே! அப்புறம் எதுக்கு இங்கே தனியாக உட்காந்துண்டிருக்கே?"

கேட்ட தோழிகளைக் குற்ற உணர்வுடன் நோக்கினாள். "என் புத்திய எப்பிடிச் சொல்றது? என் நாக்கு கரி நாக்கு. என் அம்மாவைக் கொன்னுட்டுது. வீட்டுக்குப் போனா ஏன்னு கேட்கற அம்மாவின் குரலொலி இல்லை. வெறுமை, தனிமை என்னை இறுக்குது. அம்மா இல்லை என்கிற நினைப்பே பாரமா அழுத்தி அழுகைக்குள் கரைக்கிறது. வீட்டைச்சுற்றிச் சுற்றி ஓடவைக்கிறது. என்னால இந்தத் தனிமையை, தாளமுடியவில்லை. அம்மாவின் அந்தத் திட்டல்கள், ஏச்சுக்கள் என்னையறியாமலே எனக்குள் ஒரு துணையா இருந்ததை இப்ப உணர்கிறேன். அவையெல்லாம் எனக்கு வேணும்...."

பிதுங்கி அழும் சுசித்திராவைத் தேற்றும் வழி புரியாமல் கண்கலங்கி நின்றனர் தோழிகள்.







படிப்பகம்

www.padippakam.com

# என்றென்றும் ஐ லவ் யூ

**"எனக்கு சிகரட் பிடிக்கிறது பிடிக்காது. சிகரட் பிடிக்கிறவங்களைப் பிடிக்கும்....."**

வாழ்க்கைக்குப் பணமும், அந்த எக்கச்சக்கமான பணத்துக்கு வியாபாரமும், (அது நிழலானதா? முறைகேடானதா? என்று எனக்குக் கவலையிருக்கவில்லை) ஜாலிக்காக நண்பர்களும், சதைப்பசிக்காக வாடகைப் பெண்களும், குளிருக்காக பியரும், அப்பப்போ டென்ஷனைக் குறைக்க சிகரட்டும், எக்ஸெட்ரா எக்ஸெட்ரா... இப்படி இதுவரை காலமும் ஆத்ம திருப்தியோடு வாழ்க்கையை ருசிக்க ருசிக்க அனுபவித்து வாழ்ந்துகொண்டிருந்தவன் நான்.

நான் நிகழ்கால இளைஞன்!

இருபத்தியாறு வயது.. பெயர் ஷிகான்!!

சுருக்கமாகச் சொல்லப் போனால் நான் சுத்தமான இலங்கையன்.

என்றாலும்... எனக்கு இந்தியா மீது காதல் இருக்கிறது.

அதற்குக் காரணம்...

இந்திய தேசத்து தேவதையொருத்திமீது எனக்கேற்பட்ட காதலாகவுமிருக்கலாம்.

இல்லை... வியாபாரம் நிமித்தம் நான் அடிக்கடி இந்திய தேசத்தைச் சுற்றி வருவதாகவுமிருக்கலாம்.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக் காதல், எந்தவிதப் பரிணாம எல்லைக்குள்ளும் அடங்காத பட்சத்தில்... கண்டம் விட்டுக் கண்டம் என்றோ–நாடு விட்டு நாடு என்றோ எல்லைதாண்டி வியாபிப்பதில் வியப்பேதுமில்லை.

வெறுமனே பணமும், பெண்களும், பியரும், சிகரட்டும்தான் முழுமையான ஆத்ம திருப்தி வாழ்க்கை என்று நினைத்துக்கொண்டிருந்த என் எண்ணத்தில் இற்றைக்குப் பத்து நாட்களுக்கு முன் கீறல் விழுந்தது. ஆத்மா அறைபட்டுப்போய்... இவ்வளவு காலமும் இருந்த 'திருப்தி' காணாமல்போய்... நிகழ்கால-இறந்தகால வாழ்க்கை அதிருப்தியானது.

எல்லாவற்றுக்கும் காரணம் ஸ்னேகா.

ஸ்னேகா.. உச்சரிக்கும்போதே உதடு இனிக்கிறது என்பதையும் விடவும், ஸ்னேகா என்ற வார்த்தையையே இனிப்பதாகச் சொல்லலாம். (உங்கள் உதடுகளைக் கொஞ்சம் சுவைத்துப் பாருங்கள். இனிக்கும்)

அவளைக் கண்ட முதல்நாளே நான் எனக்குள் காணாமல் போனேன்.

இன்று பத்தாவது நாள்! நேற்று நடந்தது மாதிரியிருக்கிறது. இனிக்கிறது.

பத்து நாட்களுக்கு முன்பு...

இந்திய தேசத்தின்–

மும்பாயின் (பம்பாய்) 'நொரிமன் பொயின்ட்' பகுதி!

மாலை நான்கு மணியிருக்கும்... மனிதர்கள் இயந்திரத்தனமாய் ஆகியிருக்க–

கடைத்தெரு ஓரமாயிருந்த பெட்டிக் கடையில் 'ட்ரிபள் பைவ்' சிகரட் பெட்டியொன்றை வாங்கிக்கொண்டு திரும்பிய விநாடிகளில்... மோதுமாற்போல் வேகமாய்ப் போன ஆட்டோவில் இருந்து "புளிச்" எனத் துப்பப்பட்ட சிவப்பு வெற்றிலைச்சாறு எனது வெள்ளை ரீ சேர்ட்டில் மருதாணிக் கோலம் போட... நிலைமையையுணர்ந்து எரிச்சலில் கத்த- ஆட்டோவில் பயணப்பட்ட குறிப்பிட்ட நபரைத் திட்ட வாயெடுத்தபோது... சரேலென ஆட்டோ பிறேக் போட்டு நின்று... எரிச்சலில்–

நான் பார்த்துக் கொண்டேயிருக்க...

தென்றலாய் இறங்கி வந்தவள் அவள்! நான் சந்திக்கும் முதல் அழகி!!

அப்ஸரசாய் இருபது வயதுக்குள் தெரிந்த அவளது மேலுதட்டுக்கு மேல் சின்னதாயொரு ஜெயப்ரதா மச்சம்! ஆப்பிள் முகத்தில் கருவண்டுகளாய்த் தெரிந்த விழிகளில் ஒருவகைக் காந்தம்... ஒரே வினாடியில் அந்தக் காந்தத்தோடு தாக்குப்பிடிக்காமல் மின்சாரமாய் இழுபட்டுப் போனது மனசு– என் ஹிருதயம்.

பக்கத்தே வந்தவள் 'ஸாரி' சொன்னாள்.

"இட்ஸ் ஆல்ரைட்" என்று எனக்கு சொல்லத்தோன்றவில்லை.

அவள் எனக்காக நிறையவும் பரிதாபப்பட்டு... 'ஹிந்தியில்' வருந்தினாள்.

முழு நொரிமன் பொயிண்டுமே நம்மை வேடிக்கை பார்க்க...

ஆட்டோவில் இருந்து இன்னொரு ஆளாய் வெளிப்பட்ட அந்த 'சௌகார் ஜானகிப்" பாட்டியை சுட்டிக்காட்டி அழைத்தவள்... என்னருகே பாட்டியிடம் சொன்னாள்,

"என்ன பாட்டி நீ... உன் வாய் வெற்றிலையை இவர்மேல துப்பிட்டியே..." அவளது 'தமிழ்' என்னை அதிசயிக்க வைத்தது. மும்பாயில் (பம்பாய்) இப்படியொரு தமிழா?

"பரவாயில்லை தெரியாமத்தானே செய்துட்டாங்க....." என்றேன்.

அவள் விழி அகல விரித்துக் கேட்டாள். "தமிழ் தெரியுமா?"

"தமிழனாச்சே..." என்றேன் 'பாட்ஷா' ரஜனி ஸ்டைலில்.

அதன்பிறகு முழுதாய் மூன்று நிமிடங்கள் ஊர், பெயர், பூர்வீகம் அனைத்தையும் தமிழிலேயே பரிமாறிக்கொண்டு... அவர்கள் வந்த ஆட்டோவிலேயே விடைபெற்றுப் போக...

என்னால் முடியவில்லை. காரணம்...

என் மனசு என்னிடமிருந்து விடை பெற்றிருந்தது.

* * *

அன்றையை இரவு முழுவதும் 'ஹோட்டல் அறையில் விழித்துக்கொண்டு பலமுறை அடித்து அடித்துக் கவிதையெழுதினேன். புதுக்கவிதை.

'ஸ்னேகா...
உன் பாட்டி வாய்
–வெற்றிலைச்சாறு
என் மார்புச் சட்டையை
நனைத்ததற்காக
–நான் கவலைப்படவில்லை
சட்டையைத் துவைத்துக்
காயப்போட்டுமாயிற்று...
மனசை மட்டும்
துவைக்க முடியவில்லை
காரணம்... நீ
கழுவப்பட்டுப் போய்விடுவாய்...
தவிர–
வெற்றிலைச் சாறென்றாலும்
வேறு எச்சமென்றாலும்
அதுவுன்
உதட்டில் வழிந்ததென்றால்
நான் ஆயுளுக்கும்
குளிக்காமலேயே இருந்திருப்பேன்...!
ஸ்னேகா.. ஒருமுறை–
ஸ்னேகமாய் என்மீது
துப்பிவிட்டுப் போவாயா?'

அடுத்த முறை அவளைப் பார்ப்போமா? மாட்டோமா என்பது நூறுவீதம் சந்தேகமாயிருந்த போதும், கவிதையை எழுதிப் பத்திரப்படுத்திக்கொண்டேன்.

"எப்படியாவது அவளைச் சந்திக்க வேண்டும்!"

♥ ✱ ♥

சரியாக ஒரு வாரம் கழித்து மும்பாயின்



மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்

ரோயல் ரெஸ்டாரன்டில் மீண்டும் ஸ்னேகாவைச் சந்தித்தேன். மயில் தோகை விரித்தது போல அவள் முகத்தில் சந்தோசம் பரவியதை உணர்ந்தேன். தவிர-வாழ்க்கையில் இந்தக் கணம்போல் ஒருபோதும் நான் சந்தோஷப்பட்டதில்லை என்றே சொல்ல வேண்டும்.

ரெஸ்டாரெண்டுக்குள் இருவரும் ஒன்றாக 'பாதாம்கீர்' சாப்பிட்டோம்.

பொதுவாக-பொதுவானவையாக நிறையக் கதைத்தோம்.

நான் சிகரட் பற்ற முனைந்து-அவள் இருப்பதனால் தயங்க.. தடுமாற..

ஸ்னேகாவே சொன்னாள்,

"எனக்கு சிகரட் பிடிக்கிறது பிடிக்காது. ஆனால் சிகரட் பிடிக்கிறவங்களைப் பிடிக்கும்!"

நான் சிகரட்டைத் தீக்கொளுத்தினேன்.

நிமிடங்களின் கரைதலில் விடைபெறும் போது... பர்சுக்குள் பத்திரப்படுத்தியிருந்த கவிதையை அவளிடம் கொடுத்து, வீட்டில் போய் வாசித்துப் பார்க்கச் சொல்லி...

விடைபெற்றோம்.

அவள் விட்டுப்போன வாசனை மட்டும் என்னைத் தொடர்ந்து வந்தது.

அதேயிரவு!

நான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு ஸ்னேகா தொலைபேசினாள்.

"ஷிகான்... கவிதை நல்லாயிருந்துச்சு!"

"ப்ரமாதம்னு சொல்லுவீங்களேன்னு நெனச்சன்....!"

சிரித்தாள். "ஹாவ் யூ ஃபோலின் இன் லவ்?" (காதலில் வீழ்ந்துவிட்டீர்களா)என்றாள்.

"யெஸ்! ஐ லவ் யூ ஸ்னேகா..."

"அதை நாளைக்குச் சொல்றீங்களா ஷிகான்?"

"ஏன்?" என்றேன் புரியாமல்.

"என்னைப் புரிஞ்சுக்க வேண்டாமா?"

"ஓ.கே" என்றேன்.

ஃபோனை வைத்தாள் ஸ்னேகா.

-நான் ஏனோ அந்தரத்தில் மிதந்தேன்.

★★★

மறுநாள்!

நானும் ஸ்னேகாவும் மும்பாயின் செயற்கைப் பூந்தோட்டமொன்றுக்குள் சந்தித்துக் கொண்டபோது... அவள் பேசிக்கொண்டே போனாள்.

"எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு ஷிகான்!"

"அப்போ நாம காதலிக்கலாமே...?"

ஸ்னேகா... மென்மையாய்–விரக்தியாய்ச் சிரித்தாள்.

"எனக்கு ஆட்சேபணையில்லை... நாம காதலிக்கலாம். ஒருவருக்கு ஒருத்தர் முத்தம் கொடுத்துக்கலாம். கட்டியணைச்சிக்கலாம்... துக்கமோ சந்தோஷமோ பங்கு போட்டுக்கலாம்... கல்யாணம் பண்ணிக் கலாம்... ஆனா..."

"என்ன?"

"என்னை நீ புரிஞ்சுக்கணும்!"

"சொல்லு!"

"எங்க குடும்பத்துல... அதாவது எனக்கு அம்மா, அப்பா, அண்ணன் யாருமேயில்ல. நானும் பாட்டியும் மட்டும்தான் இருக்கோம்."

"நான் ஃபேமிலி பற்றி ஏதாவது கேட்டேனா?"

"சொல்ல வேண்டிய கடமை எனக்கிருக்கு ஷிகான்!"

"சொல்லு..."

"எங்க அம்மா எயிட்ஸ் நோய் வந்து செத்துப்போயிட்டாங்க. கூடவே அம்மா மூலமாகவோ எப்படியோ அப்பா, அண்ணன் எல்லோரும் தொடராக எயிட்ஸ் வந்து செத்துப்போயிட்டாங்க.. இப்போ எஞ்சியிருக்கிறது நானும் பாட்டியும் மட்டுமே. அவங்க வழியிலோ எப்படியோ இன்னைக்கு இல்லேன்னாலும் நாளைக்கோ இல்ல ரெண்டு வருஷம் கழிச்சோ கூட எனக்கும் எயிட்ஸ் வராது என்கிறது என்ன நிச்சயம் ஷிகான்? என் குடும்பத்து விதி உன்னையும் கொல்லனுமா?" அவளது தொண்டை கரகரக்க...

நான் பொடிப்பொடியாய் உதிர்ந்தேன்.

மனசு வலித்தது. யதார்த்தமாய்...

ஸ்னேகாவை நம்பமுடியாமல் பார்த்தேன்.

என்னுடம்பு பூராவும் உதறலெடுத்தது.

'இப்படியும் நடக்குமா?'

"ஷிகான்... காதல் என்கிறது சிலுவையில் சிந்திய ரத்தத்துளி மாதிரி புனிதமானது. உண்மையைச் சொல்லப்போனால் நாடு விட்டு நாடு வந்திருக்கிற உங்களது முகவரி-சுயரூபம் தெரியாமலேயே... நமது முதல் சந்திப்பிலேயே நான் எனக்குள்ள உங்களைக் காதலிக்க ஆரம்பிச்சுட்டேன். தான் காதலிப்பவரோ இல்லை தன்னைக் காதலிப்பவரோ வாழவேண்டும் என்று நினைக்கிறதுதான் உண்மையான காதல் ஷிகான். நீ வாழவேண்டும் என்று நான் ஆசைப்படுறன்... பிக்கோஸ் ஐ லவ் யூ...."

அப்படியே ஸ்னேகா அழ ஆரம்பித்தாள்.

நான் அவளைத் தேற்றுவதற்கு நிறையவும் தடுமாறினேன்.

தேறியவுடன் கேட்டாள், "நீ இப்போதும் என்னைக் காதலிக்கிறாயா ஷிகான்?"

ஸ்னேகா என்னையே பார்க்க...

நான் அவளையே பார்த்தேன். அப்படியே தீர்மானமாய் சொன்னேன்.

"இப்பமட்டுமல்ல எப்பவும்... ஐ லவ் யூ!"

"பயமில்லையா?" கேட்டாள்.

"எதற்கு?"

"எனக்கு எயிட்ஸ் வந்தால்..." அவள் வார்த்தையை முடிக்கும்முன், அவளது வாயைப் பொத்தி அவளை அருகே இழுத்து இறுக்காமாக அணைத்துக்கொண்டேன். சொன்னேன்,

"உடம்புக்குத்தான் எயிட்ஸ்... மனசுக்கில்ல... சாகணும்னு இருந்தால் ரெண்டு பேரும் ஒன்னா சாகுவோம். இல்ல சேர்ந்து வாழ்வோம்... அதுவரைக்கும் காதலிக்கலாம். கட்டியணைச்சுக்கலாம்... ஒருத்தருக்கு ஒருத்தர் முத்தம் கொடுத்துக்கலாம்... துக்கமோ சந்தோஷமோ பங்குபோட்டுக்கலாம். நீ சொன்னது ஸ்னேகா."

அவள் கலகலவெனச் சிரித்தாள். அவளையே மறந்து...

நான் மனதுக்குள் வேண்டிக்கொண்டேன். "கடவுளே... என் ஸ்னேகாவை என்னிடமிருந்து பிரித்துவிடாதே... ப்ளீஸ்!" அதேநேரம் உங்களிடம் வேண்டிக் கொள்கிறேன்.

நீங்களும் எமக்காகப் ப்ர்ராத்தியுங்களேன். (இன்னொரு) **"ப்ளீஸ்!"**

---

# ஆறாவது கல்



கல்வியூர்ச் சந்திரன் – கோட்டைக்கல்லாறு

**"சரோஜாவுக்கு தூக்கமே வரவில்லை. அந்த நால்வரில் ஒருவன்தான் காதலன்..."**

தனக்கு வந்த அந்தக் காதல் கடித்தைக் கையிலெடுத்த சரோஜா "இப்படியும் ஒரு காதலா? என்மீது எவ்வளவு இரக்கப்பட்டிருக்கிறான். எவரும் என்னை இதுவரை காதலிக்கவேயில்லையே? இவன் மட்டும்...' விமானமும் பறக்காத தூரத்தில் சிறகடித்துப் பறப்பது போன்ற உணர்வில் இப்போது அவள்.

பெண்பார்த்துப் பின் சேதி அனுப்புவதாகச் சொன்னவர்கள், பெண்ணுக்குச் செவ்வாய் தோசமெண்டு சொன்னவர்கள்- அவள் டயரியில் அத்தகையோரின் பேர்கள் ஏராளமுண்டு.

மீண்டும் கடிதத்தின் சிலவரிகளைப் படிக்கத் தொடங்கினாள் அவள்.

"ரீச்சர், ஒருத்தனுக்கு ஒருத்தி என்பதெல்லாம் உண்மைதான். ஏனென்றால் நான் உங்களுக்காக இருப்பதனால். என்னை நான் தங்களிடம் இப்போது அடையாளங் காட்ட விரும்பவில்லை. எதிர்வரும் இருபத்தியெட்டாந் திகதி மாலை ஓடைக்கரைச் சந்தியில் சிவப்பு நிறத்து ரீ சேட் அணிந்து நான் நிற்பேன். தாங்கள் கோயிலுக்கு வருவதுபோல் வந்தால் என்னைக் காணலாம். அதன்பின் என்னைத் தங்களுக்குப் பிடித்திருந்தால் தங்கள் பதிலை உங்கள் பாடசாலை பின்பக்க மதிலின் மேலே அடுக்கப்பட்டிருக்கும் உடைந்த செங்கற்களிலே கல்முனைப்பக்கமாக இருந்து ஆறாவது கல்லின் கீழ் ஒரு காகிதத்தில் எழுதிவையுங்கள். பின்பக்கம் சனநடமாட்டம் இல்லை. தங்களுக்குச் சிரமம் இருக்கமாட்டாது."

கடிதத்தின் குறித்த வாசகங்களை திரும்பத் திரும்ப வாசித்து மனதுக்குள் சிரித்துக்கொண்டாள் சரோஜா ரீச்சர்.

கைநிறையச் சம்பளம்பெறும் சரோஜாவுக்கு குடும்பத்தில் ஆண் உதவி இல்லை. வயதான தாய் மட்டுந்தான், அவளும் அவர்களது ஊரிலே.

தான் அழகற்றவள் என்ற மனப்பாதிப்பு அவளுக்கு நிறையவுண்டு. முகப்பருவொன்றை நகத்தால் உடைத்ததால் கட்டு ஏற்பட்டு சிறிய சத்திரசிகிச்சையும் வேறு செய்திருந்தாள். கறுப்புநிறம் என்பதற்காகப் பல திருமண ஒப்பந்தமும் உடைந்தன.

வலிந்து வந்து ஒருவன் தன்னை விரும்புவதாக எழுத்துமூல விண்ணப்பம் செய்யும் போது அதை ஏற்காமல் விடுவதா?... நிச்சயமாக அவன் நல்லவன். பட்டதாரியான தனக்குக் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு- அவன் தொழிலற்றவன் என்றாலும்- தன்னால் குடும்பம் நடாத்த முடியும் என்பதை அவள் உறுதிப்படுத்திவிட்டாள்.

இருபத்தியெட்டாம் திகதி தன் காதலனைச் சந்திக்கும் நாளை அவள் எதிர்பார்த்திருந்தாள்.

கோயிலுக்குச் செல்லும் சாட்டாக தான் குடியிருக்கும் வீட்டுச் சிறுமியையும் அழைத்துக்கொண்டு ஓடைக்கரைச் சந்தியால் சரோஜா வந்துகொண்டிருந்தாள்.

அதோ கிரிக்கெட் துடுப்பு, பந்து ஆகியவற்றுடன் நான்கு இளைஞர்கள் நால்வரும் சிவப்பு நிறத்தில் ரீ சேட் அணிந்திருந்தார்கள். தங்கள் அணிக்குரிய ஆடைதான் சிவப்புநிற ரீ சேட்.

முன்னும், பின்னும், பக்கமும் தேடிப் பார்த்தாள் சரோஜா.. அந்த நான்கு இளைஞர்களைத் தவிர அயலில் எவரும் சிவப்பு ஆடை எதுவும் அணிந்திருக்கவில்லை.

அவர்களைத் தாண்டி சரோஜா செல்லும் போது அவர்களில் ஒருவன் "ரீச்சர் எங்க போறீங்க...?" என்று கேட்டான்.

"கோயிலுக்குப் போகலாமெண்டு.." என்று பணிவாகச் சொல்லிவிட்டு அவள் போய்க் கொண்டிருந்தாள்.

அன்றிரவு முழுதும் சரோஜாவுக்குத் தூக்கமே வரவில்லை. தனது காதலன் அந்த நால்வரில் ஒருவன்தான், அதிலும் தன்னோடு கதைத்தவன்தான் அந்தக் கடிதத்தை எழுதியவன் என்று ஐயத்தோடு உறுதிப்படுத்திக் கொண்டாள். பிறமாவட்டத்திலிருந்து அந்த ஊருக்குப் படிப்பிக்க வந்தவள் அல்லவா அவள்? அந்த இளைஞர்கள் யார்? அவர்களின் பெயர்கள் என்ன? என்பதெல்லாம் அவளுக்குத் தெரியாது. ஆனால் நால்வரும் நல்ல அழகான இளைஞர்கள்தான். தன்மீது விருப்பங்கொண்டு எழுதிய இளைஞன் அவர்களில் ஒருவன்தான், என்ற முடிவுக்கு வந்தவளாய் இரவோடு இரவாக,

"அன்புள்ள என்னவரே! நின்தன் அழகு கண்டேன். கிரிக்கெட் வீரர் ஒருவரால் நான் காதலிக்கப்படுவதற்குக் கொடுத்துவைத்தவள், தனிமையில் நம் எதிர்காலம் பற்றிப் பேச அவகாசமுண்டா?... பதிலை ஆறாவது கல்லின் கீழ் வையுங்கள்!" என்று எழுதிவிட்டாள்.

பாடசாலை கூடிவிட்டது. மலகூடம் செல்லும் வழியில் தன் மடலை மீண்டும் அந்த ஆறாவது கல்லின் கீழ் வைத்துவிட்டாள்.

அனேகமாக வீட்டுவேலைகள் எதுவும் இல்லாததால், மிக்க நேரத்தோடு பாடசாலைக்குத் தினசரிவரும் சரோஜா, மறுநாள் ஆறரை மணிக்கெல்லாம் புறப்பட்டுவிட்டாள். "ரீச்சர் ஏன் இண்டைக்கு இவ்வளவு நேரத்தோட... என்றாள். வீட்டுக்காரச் சிறுமி.

"ஒவ்வொரு முதலாந்திகதியும் நமக்கு ஒரு விசேட நாள்போல, முதலாந்திகதியே நாம முறையா வாழ்ந்தா அந்த மாதம் முழுதும் முதல்தேதிதான்," என்றுவிட்டு பாடசாலைக்குப் புறப்பட்டாள் சரோஜா.

பாடசாலைக்கு எவருமே இன்னும் வரவில்லை. மலகூடப்பக்கம்போன சரோஜா ஆறாவது கல்லைப் பக்குவமாக எடுத்தாள். அதன் கீழிருந்த கடிதத்தைக் கைகளில் பொத்தியவாறே அருகில் இருந்த மலகூடத்துக்குள் சென்று கதவினைப் பூட்டிக்கொண்டு மெதுவாக விரித்தாள்.

"சென்ற தடவை அதிபர்
இந்த முறை ஆசிரியை
அடுத்த முறை மாணவி....
இப்படிக்கு
அன்புக் காதலன்,
என்றும் எப்ரல் ஃபூல்"

பேயறைந்தவள் போல் மலகூடத்திலிருந்து வெளிவந்தவளை அந்த ஆறாவது கல் துரத்தித் துரத்தி எப்ரல் ஃபூல், எப்ரல் ஃபூல் என்று நக்கலடித்துத் துரத்துவது போன்று தென்பட்டது.

---

# 'கண்கள் தீட்டும் காதல் என்பது......'

"இன்னமும் நீ காத்திருப்பதால் பயனில்லை... வா! இந்த மினி பஸ்ஸிலேயே போவம்!" ரமீஸின் அந்த வார்த்தைகள் ஏற்கனவே இ.போ.ச. பஸ்ஸை எதிர்பார்த்து பொறுமை இழந்து கொண்டிருந்த சிபானுக்கு மேலும் எரிச்சலை உண்டாக்கியதில் வியப்பில்லை.

"நீ போறண்டா போ! நான் வரல்ல!" உறுதியாகப் பதிலளித்த சிபான், பஸ் வரும் திசையை கண்களால் அளந்து கொண்டிருந்தான்.

"மடயா! பஸ்ஸும் பொண்ணும் பின்னால வந்துக்கிட்டே இருக்கு...ம்!"

"உன்ர தத்துவம் உனக்குத்தாண்டா பொருந்தும்! எனக்கு ஒத்துவராது! தயவு செய்து என்னக் குழப்பாத! நான் அடுத்த பஸ்ஸில வாரன்!"

"இண்டைக்கு சீ.ரீ.பீ(B) ஸ்ரைக்! பஸ் வராது!" பக்கத்திலிருந்த மினி பஸ் ரைவரின் குரல் சிபானைத் தூக்கிவாரிப் போடவைத்தது; இப்போது ரமீஸின் வார்த்தைகளுக்கு இணங்கியவனாக ஒரு வித அசட்டு நம்பிக்கையுடன் மினிபஸ்ஸில் ஏறிக்கொண்டான்.

பஸ் நாலாம் கட்டையை அடையும் வரையும் அவனது இதயம் ஆறுதலின்றித் தவித்தது. ஆம்! வார இறுதி நாட்களில் அவன் கம்பியூட்டர் கிளாஸுக்கு போகும்போது அக்ஸிடன்ராக பஸ்ஸில் சந்தித்தவள்தான் இன்றுவரை அவனது இதயத்துள் இனம் தெரியாத விம்பமாக வளர்ந்து கொண்டிருக்கின்றாள். முதல் சந்திப்பில் முறைத்தாள்; இரண்டாவது வாரம் மௌனித்தாள்; மூன்றாவது வாரம் புன்னகையில் ஆரம்பித்தாள். இன்றுவரை பேசவேயில்லை. இது ஆறாவது வாரம்.

ஆறு வாரங்களாக மனதுக்குள் ஆரவாரம் செய்யும் அவளுடன் இன்று எப்படியாவது பேசிவிடவேண்டுமென்று கங்கணம் கட்டியவனாக இரவின் மடியில் தூக்கத்தைத் தொலைத்திருந்து வரைந்த கவிதைகளை டயரிக்குள் வைத்துக் கொண்டான். ஆனால் அவனது நம்பிக்கை சீ.ரீ.பி.பஸ் வராததால் தவணை முறையில் தகர்ந்து கொண்டிருந்தது.

"எயர் ஃபோஸ் செக் பொயின்ற்"ரைத் தாண்டி விரைந்த பஸ் நாலாம் கட்டை சந்தியில் தரித்தது. "சிபான்..! அங்க பாருடா! அவ வர்ராடா!" ரமீஸ்தான் காட்டினான். 'அப்பாடா! என்ர முயற்சி வீண் போகல்ல!' மனதுக்குள் சொல்லிக் கொண்டான் சிபான்! இதயம் இருமடங்காய்த் துடித்தது! தன்னையறியாமலே வாய் கவிதைகளை முணு முணுத்தது.

'அழகு'
இயற்கையின் பொதுவுடமை
என்பதெல்லாம் மடமை!
அது எப்போதும்
உனக்கே தனியுடமை!

"ரிக்கற் எடுக்காதவங்கல்லாரும் ரிக்கற் எடுங்க!" கூவிக் கொண்டு வந்த கண்டக்டரின் கண்கள் அந்த மௌன மலரில் மையமிட்டது. அவள் குழப்பமடைந்த முகத்துடன் மேலும் கீழும் விழித்தாள். சக பயணிகளின் பார்வைகள் அவள் பக்கம் திரும்பியதால் மேலும் வெட்கப்பட்டாள். அவளது நிலமையை உணர சிபானுக்கு அதிக நேரம் எடுக்கவில்லை. வழமையாக சீ.ரீ.பி.பஸ்ஸில் 'சீசன் ரிக்கற்'றில் பயணம் செய்யும் அவள் மினி பஸ்ஸில் ஏறியதால் ஏற்பட்ட தடுமாற்றம் அது.

'இதுவல்லவா சந்தர்ப்பம்!' கணப்பொழுதில் தமிழ் சினிமாவில் வரும் 'ஹீரோ'வாக




மாறினான் சிபான். "அவளுக்கு ரிக்கற் குடுங்க! நான் பணம் தாறன்!"

"அழகான புள்ளைகளக் கண்டா சிலபேருக்கு பாசம் எங்கிருந்துதான் வருகுதோ தெரியல்ல!" பக்கத்திலிருந்த வயோதிபர் முணுமுணுத்தார். "யோவ் பெரிசு! அப்ப நீ குடுக்கிறியா!?" கிழவர் வாயடைத்துப் போனார்.

"மிஸ்! இதெல்லாம் சகஜம்தான்! நீங்க எங்க போகணும்! ரிக்கற் எடுங்க காசைப் பத்தி யோசிக்காதிங்க!"

பதில்: மௌனம்! நாணம் கலந்த மௌனம்!

சந்தர்ப்பத்தை சாதகமாக்க விரும்பினான் சிபான். சில்லறை எடுக்கும் சாக்கில் டயரிக்குள்ளிருந்த கடிதத்தையும் கைக்குள் எடுத்துக் கொண்டான். அதை வரவேற்பது போல் அவளும் கையை நீட்டினாள்.

அந்த நிமிஷங்களில் மனம் இறக்கை கட்டி அந்தரத்தில் வட்டமிட்டது. இருவர் கரங்களும் நெருங்கின. அவன் கொடுத்ததைப் பெற்றுக் கொண்டவள் சிறு காகிதத்துண்டை அவன் கைக்குள் திணித்தாள். அவனுக்கோ அதிர்ச்சி கலந்த ஆனந்தம்!

பரவசப்பட்டு பிரித்துப்படித்தான். அதிலே...

"நான் ஓர் ஊமை... என்னைத் தொடராதீர்கள்!" என அழகாக எழுதப்பட்டிருந்தது. சிபான் அடுத்த 'பஸ் ஹோல்ற்' எப்போது வருமென்று எட்டிப் பார்த்துக்கொண்டான். சிரித்தான் ரமீஸ்!



படிப்பகம்

www.padippakam.com

# கண்கள் கேட்ட வரம்

## இலக்கிய நயம்

தருவது ரசிகன்

காதலில்
கண்கள்தான் கௌரவத்துக்குரியவை!
இதழ்கள் பேசமுடியாத
செய்திகளையெல்லாம்
கண்கள் வழியாகத்தான்
காதலர்கள் கடத்தி முடிக்கிறார்கள்!

காதலர்களின்
தூதர்கள் கண்கள்தான்!
காதலர்களின்
வாய்களும் கண்கள்தான்!

பலர் நிறைந்த சபையிலும்
யாருமறியாமல்
காதலர்கள் பேசிக்கொள்கிறார்கள்.
பார்வைகள் மூலமாகவே
பாஷைகள் பரிமாறப்படுகின்றன!

கண்களால் அழைக்கலாம்
கண்களால் முறைக்கலாம்
கண்களால் நகைக்கலாம்
கண்களால் பரிகசிக்கலாம்!

கண்களின்
உபயோகம் தெரிந்தவர்கள்
காதலர்கள் மட்டும்தான்!

புவனாவும்-அவனும்
கண்களால்தான் கதை பேசிக் கொண்டனர்!
புவனாவும்-அவனும்
கண்களால்தான்
காதலுக்கு விதை போட்டுக் கொண்டனர்!

போட்ட விதை முளைக்க
நீர் விட்டதும் கண்கள்தான்!
முளைத்த செடி செழிக்க
உரம் போட்டதும் கண்கள்தான்!
செழித்த செடி பூக்க
வியந்து பார்த்தவையும் கண்கள்தான்!

"கண்கள்தான்
நம் எஜமானர்கள்!
கண்கள்தான்
நம் காதல் கடவுள்கள்!"
என்றான் அவன்!

"கண்கள்தான்
பொல்லாத திருடர்கள்!
கண்கள்தான்
நம் காதலின் எதிரிகள்!"
என்றாள் அவள்!

அவனுக்கோ
அடாத்தியான ஆச்சரியம்!
"எப்படி-அது எப்படி
கண்கள் எதிரிகளாக முடியும்?"

"இடைக்கிடையே
இமைக் கதவுகளை சாத்துவதால்
உங்களை
இடைவிடாமல் பார்க்க முடியவில்லையே
அதனால்தான் எதிரிகள் என்றேன்!"

"எனக்கில்லையே அந்த
இடையூறு ஒருநாளும்!"



"ஏனில்லை
கண் இமைப்பதேயில்லையா?"

"புறக்கண்கள் மூடும்போது
அகக் கண்களை திறந்து கொள்வேன்.
நேரில் மட்டும்தானா
நெஞ்சுக்குள்ளும் நீதானே!"

அவன் பதில் இதம் தரும்.
நெஞ்சு மலர கண் விரியும்.
கண்கள் வழியே காதல் வழியும்.

"கண்களின் வழியே
காதல் செய்தோம்! வாடி
கண்களின் ஒளியில்
நம்மை நாம் தேடுவோம்!
நீ என்னைத் தேட
நான் உன்னைத் தேட
நமக்குள் நாமாகி
நம்மை நாம் தேடுவோம்!"

அவன் கண்களில் எரியும் தாகத் தீ
அவன் கண்களில்
தெரியும் மோகத் தீ!

பார்த்தாள்-பார்த்தான்
பற்றியதே!
கண்கள் வழியே
தாவிய தீ
தேகம் எங்கும் பரவியதே!

இதழ்கள் நான்கு ஒன்றாகும்
இடையே காற்றும் செல்லாமல்
இருவர் ஒன்றாய் உருமாற
தடையே இல்லாத் தீ எரியும்!

"தீயே தீயே அணையாதே
தென்றல் காற்றே நுழையாதே
பொழுதே பொழுதே போகாதே
மெழுகாய் உருகத் தடுக்காதே"
தீக்குள் எரிபவள் தீயை நேசிப்பாள்.

கண்கள் உயர்த்தி
அவள் கண்கள் வழியாக
குறிப்பறிந்தான்!

கண்கள் கொஞ்சின.
கண்கள் கெஞ்சின!
கண்கள் பேசின!

"பிரியாதே பிரியாதே
எரியும் தீயில்
சந்தன விறகின்
சாம்பலாய் ஆவோம்!
உயிரே! உயிரே
பிரியாதே!"

கண்கள்
கட்டளையிட்டன!

கண்களே நன்றி
கண்களுக்கு நன்றி!

இதழ்கள் ஏந்த மறுக்கும்
சரச மொழிகளை யெல்லாம்
கண்கள்தானே கடத்தி வருகின்றன!

உதடுகள் ஒளித்து வைக்கும்
உள்ளத்து எண்ணங்களையெல்லாம்
கண்கள்தானே காட்டித் தருகின்றன!

கண்களே நன்றி
கண்களுக்கு நன்றி!

கண்களே சன்னல்
கண்களே கதவு!

சன்னலைத் திறக்கத் தெரிந்தவர்கள்
மனதைப் படிக்கிறார்கள்!
கதவைத் திறக்க முடிந்தவர்கள்
உள்ளே புகுந்து கொள்கிறார்கள்!

மறுநாள் விடிந்ததும்
அவள் சொன்னாள்;
"என்றாலும் நீங்கள்
பேராசைக்காரர்!



விடிவதைக்கூட விரும்பாமல்
இப்படியா அடம்பிடிப்பார்களாம்!"

அவன் நகைத்தான்!
"என்ன நகைப்பு?
மனதில் என்ன நினைப்பு?"

அவன் சொன்னான்
"கண்களை நினைத்தேன்
கண்கள் கேட்ட
வரத்தினை நினைத்தேன்!"

'என்ன வரம்? அது
என்ன வரம்?'

அவள் கேட்கவில்லை.
அவளுக்குத் தெரியும்.

கண்களால் ஆசை சொல்லி
கண்ணாளா பிரியாதே
விடியும் வரை விலகாதே என்று
கண்களால் அவள்
கேட்ட வரம்!

"பொன்னினால் பெண்மை உடைத்தென்ப
-கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு"
அதிகாரம்: 128-குறள்: 1280

## ஸ்போர்ட்ஸ்

# சித்து 201

இந்திய-மேற்கிந்தியத் தீவு அணிகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியும் ட்ரோவில் முடிவடைந்துள்ளது.

ட்ரினிடாட்டில் உள்ள போர்ட் ஒவ் ஸ்பெயின் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவு அணி முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 296



ஓட்டங்களை எடுத்தது. மேற்கிந்தியத் தீவு வீரர் ரோலன்ட் ஹோல்டர் 91 ஓட்டங்களைப் பெற்றார். சந்தர் போல்-42, ஹூப்பர்-40. அனில் கும்ப்ளே 104 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களைச் சாய்த்தார். சுனில் ஜோஷி 79 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இரண்டாம் நாள் உணவு இடைவேளைக்குச் சற்று முன்னதாக முதல் இன்னிங்சை ஆரம்பித்தது இந்திய அணி. முடிவில் 436 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்திய அணி சார்பாக நவ்ஜோத் சிங் சித்து சிறப்பாக விளையாடி 201 ஓட்டங்களைக் குவித்தார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் சித்து அடித்த அதிகபட்ச ஓட்டம் இதுதான். இந்த இரட்டைச் சதத்தில் 19 பவுண்டரிகளும் 1 சிக்ஸரும் அடங்கும். கப்டன் டெண்டுல்கர் 88 ஓட்டங்களைப் பெற்றார். ராகுல் திராவிட்-57.

மேற்கிந்திய அணி தரப்பில் கோர்ட்லி அம்புரோஸ் 87 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அறிமுக வீரர் மேர்வின் டில்லான் தனது முதல் டெஸ்ட்டிலேயே 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

இந்தியா, மேற்கிந்திய அணியை விட முதல் இன்னிங்ஸில் 140 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றிருந்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் மேற்கிந்தியத்தீவு அணி 6 விக்கெட் இழப்பிற்கு 299 ஓட்டங்களை எடுத்திருந்தபோது, மழை ஆட்டத்தைத் தடை செய்தது. இதனால் போட்டி முன்னதாகவே முடிக்கப்பட்டு வெற்றிதோல்வியின்றி முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.

இவ்விரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி பார்படோஸில் மார்ச் மாதம் 27ம் திகதி தொடங்குகிறது.

## இந்திய அணியின் சாதனைகள்

ட்ரினிடாட்டில் இந்திய அணியினர் செய்த சாதனைகள் வருமாறு:

* இந்திய அணி முதன் முறையாக மேற்கிந்தியத் தீவுக்கு 1953ம் ஆண்டு சுற்றுப்பயணம் செய்தபோது ட்ரினிடாட்டில் உள்ள போர்ட் ஒவ் ஸ்பெயினில்தான் முதல் டெஸ்ட் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.
* போர்ட் ஒவ் ஸ்பெயினில் இந்திய-மேற்கிந்தியத் தீவு அணிகளுக்கிடையே 11 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் 3 போட்டிகளில் மேற்கிந்தியத் தீவு அணியும், 2 போட்டிகளில் இந்திய அணியும் வெற்றி பெற்றன. ஏனைய 6 போட்டிகளும் ட்ரோவில் முடிவடைந்தன.
* மேற்கிந்தியத்தீவு மைதானங்களில் போர்ட் ஒவ் ஸ்பெயின் மைதானத்தில்தான் இந்திய வீரர்கள் அதிக சதங்களை அடித்துள்ளனர். இந்த மைதானத்தில் இந்திய வீரர்கள் மொத்தமாக 13 சதங்களை அடித்துள்ளனர்.
* இந்த மைதானத்தில்தான் இந்திய முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கர் (220), நவ்ஜோத் சிங் சித்து (201) ஆகியோர் தமது முதல் இரட்டைச் சதங்களை அடித்தனர்.

## இவர் தான் அவர்



பூஜா பட்

# சிந்தியா பதில்கள்

* இம் முறையும் மின்வெட்டு நடக்குமா?

யோ. சுகந்தன், கொழும்பு-06.

உள்ளூராட்சித்தேர்தல் இன்னும் சில மாதங்கள் தள்ளி வந்து தொலைத்திருக்கக் கூடாதா? மின்னை வெட்டினால், திருவாளர் பொது ஜனம் 'வோட் கட்' செய்துவிடுவார் என்ற பயமாவது இருந்திருக்கும். இனியென்ன? வானம் பொய்த்தால், மின்சாரம் பெப்பே!

✉ ✍

* தேர்தலின் பின்னராவது போர் ஓயுமா?

கி.ஜெயசேகரன், பதுளை.

ஏற்கனவே நம்ம சிவசிதம்பரம் நம்ம காதிலை பூ வைச்சுட்டாரே! இது சமாதானத்துக்கு கிடைத்த வெற்றி என்று சொல்லிப்புட்டாருங்களே. அவருக்கு போட்டியாக, நானும் பூவைக்கணுமா? வேண்டாமே! அதென்னவோ தெரியலைங்க. அந்தம்மாவே தேர்தல் பிரசாரத்தில் புலிகளை வெல்லுவோம் என்று விடிய விடிய பிரசாரம் செய்தாருங்க. நம்ம ஐயா என்னடான்னா இது சமாதானத்துக்குக் கிடைத்த வெற்றி என்கிறாரு! நம்ம காதிலை பூ கந்தசாமிக்கு சரியான போட்டியாக ஐயா சிவசிதம்பரமும் கோதாவில் இறங்கலாமுங்க.

✉ ✍

* டியர் சிந்தியா! உள்ளூராட்சித் தேர்தலில் முறைகேடுகள் நடந்தது உண்மையா?

வி.என்.பாலா, கொழும்பு-11.

முறைகேடுகள் என்பது எந்தத் தேர்தலிலும் இல்லாத ஒன்றல்ல. அதை மட்டும் நினைவில் வைத்திருக்கவும்.

✉ ✍

* இந்திய அணியில் மறுபடி சித்து சேர்க்கப்பட்டுள்ளாரே? நீடிப்பாரா?

செல்வி.க.அருந்ததி, மாவனல்லை.

பார்! நீடிப்பார்! மேற்கிந்திய தீவுக்கெதிராக இரட்டைச் சதம் போட்டு சோபித்து விட்டாரே! சித்து இருக்கிறாரே சித்து, அவர் ஒரு சிங்கம் மாதிரி. சிலிர்த்துவிட்டால் புகுந்து புகுந்து அசத்தல்தான்!

✉ ✍

* எதற்கெடுத்தாலும் சகுனம் பார்ப்பவர்கள் பற்றி.....?

க.ரவி, மட்டக்களப்பு.

தன்னம்பிக்கையைத் தொலைத்தவர்கள்.

✉ ✍

* இந்தியாவில் தேவகவுடாவின் ஆட்சி பற்றி உமது அபிப்பிராயம்?

இ.கிருபாகரன், ஜெர்மனி.

இந்தியாவின் தலைவிதி!

✉ ✍

* சமீபத்தில் உங்களை ஆச்சரியப்படவைத்த சமாச்சாரம் என்ன சிந்தியா?

என்.ஜெயந்தன், கண்டி.

அதை எப்படிச் சொல்வேன்! சமீபத்தில் தமிழ்நாட்டில் நடந்த சம்பவம்- தமிழக சஞ்சிகையில் செய்தி பார்த்ததும் காலும் ஓடவில்லை, கையும் ஓடவில்லை. (கை ஓடுமா?)

மகேஸ்வரி, சிநேகவள்ளி என்று இரண்டு உயிர்த்தோழிகள். நீண்டகாலமாக பழகினார்கள். திடீரென்று ஒருநாள் காணாமல் போனார்கள். இரண்டு வீட்டாரும் தேடினார்கள். மகேஸ்வரி எப்படியோ மாட்டினாள்.

"எங்கேயடி சிநேகவள்ளி?" என்று உறவினர்கள் விசாரித்தார்கள். அதற்கு மகேஸ்வரி சொன்னாளாம்: "அவளை நான் கடத்திக்கிட்டுப்போய் கல்யாணம் செய்துகிட்டேன்."

வெல வெலத்துப்போனார்கள் ஊரவர்கள். இப்போது இருவரையும் பிடித்துவந்து பிரித்து வைத்திருக்கிறார்களாம். உலக நாகரிகம் வளர்பிறையா? தேய்பிறையா? என்று எனக்குப் புரியவில்லை. உங்களுக்கு..?


✉ ✍

* பொறுப்பில்லாமல் வாகனம் செலுத்துபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

கே.அப்துல்லா, பேருவளை.

தெருமேலே எமன்கள்!

'உசிலம்பட்டி பெண் குட்டி....' பாடல் மூலம் பிரபலமாகி நம் நெஞ்சம் நிறைந்த பாடகர் சாகுல் ஹமீது. அவரை நம்மிடமிருந்து பறித்ததும் ஒரு சாரதியின் பொறுப்பின்மைதான் என்று நினைக்கையில் நெஞ்சு வலிக்கிறது.



சாகுல்

கிளீனரை லொறி ஓடச் சொல்லிவிட்டு பக்கத்துச் சீட்டில் ஒரு பெண்ணுடன் சல்லாபித்துக் கொண்டிருந்தாராம் சாரதி. சாகுல் ஹமீத் சென்ற கார்மீது மோதிய லொறி அந்தப் பாட்டுப் பறவையை பறித்துப் போய் விட்டது.

✉ ✍

* மலையக மக்கள் எப்போதுதான் விமோசனம் பெறுவது?

ஆர்.செல்வகணபதி, பதுளை.

பொறுங்கள்! இப்போதுதான் தாமாகவே சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

✉ ✍

* தற்போதைய யுத்தத்தைத்தான் நிறுத்த முடியவில்லை. அப்பாவி மக்கள் பலியாவதையாவது தடுத்து நிறுத்த முடியாதா?

ஜெ.சிங்கராயர், நீர்கொழும்பு.

காட்டில் தனியாக அலைந்து திரிந்து கொண்டிருந்த ஒரு சிறுத்தைக் குட்டியை அந்த வழியாக வந்த யானைக்கூட்டம் மிதித்துக் கொன்றுவிட்டது.

தகப்பன் சிறுத்தை வந்து பார்த்தது. "கொன்றது யார்?" என்று கேட்டது.

"யானைகள் கொன்றுவிட்டன" என்றன ஏனைய சிறுத்தைகள்.

"யானைகளா?" என்று கேட்ட தகப்பன் சிறுத்தையின் குரலில் திகைப்பு.

"ஆம், யானைகள்தான்!" என்றன மறுபடியும் சிறுத்தைகள்.

தகப்பன் சிறுத்தை ஒரு நிமிடம் யோசனை செய்தது. பின்னர் சொன்னது இப்படி:

"யானைகள் கொன்றிருக்க முடியாது. அவை ஏன் கொல்கின்றன? உண்மையில் என் குட்டிகளைக் கொன்றது யார் தெரியுமா? ஆடுகள்! ஆமாம் ஆடுகள் செய்த கொலை பாதகம்தான் இது!" என்று சொல்லியபடியே ஆடுகளை கொல்லத் தொடங்கியது. பாவம் ஆடுகள், ஒரு குற்றமும் செய்யாமல் பலியாகிக்கொண்டிருந்தன.

வலியார் மீது பாய முடியாதபோது எளியாரைப் பழிவாங்கிய கதை இது.

✉ ✍

* டியர் சிந்தியா! கில்லாடிக்கு கில்லாடி என்கிறார்களே, எப்படி?

செல்வி. மா.ராகினி, மாத்தளை.

ஒரு கிழவன் சுமக்க முடியாத பாரத்துடன் சென்றுகொண்டிருந்தான். பயங்கர வெய்யில். பாரத்தைக் கீழே இறக்கிவைத்துவிட்டு அமர்ந்துகொண்டான்.

"எமனே! எமனே! இந்தக் கஷ்டத்தில் இருந்து என்னை விடுவித்துவிடு!" என்று கத்திக்கொண்டிருந்தான்.

எமனுக்கு ஒரே ஆச்சரியம். 'என்னிடமிருந்து எப்படித் தப்பிக்கலாம் என்றுதான் எல்லோரும் யோசனை பண்ணுவார்கள். இவன் தானாகவே அழைக்கிறானே,' என்று நினைத்தபடியே கிழவன் முன்பாக தோன்றினார் எமன்.

"அப்பனே! நான்தான் எமன். நீ கேட்டுக்கொண்டபடியே, உன்னை கஷ்டத்தில் இருந்து விடுவிக்க வந்துவிட்டேன். உன் உயிரைத் தா அப்பனே!" என்றார் எமன்.

அதற்கு கிழவன் என்ன சொன்னான் தெரியுமா?

"அட போ அப்பா! என் உயிரைத் தருவதற்காக உன்னை அழைக்கவில்லை. இந்தச் சுமையை தூக்கிவந்து என் இருப்பிடத்தில் சேர்த்து விடுவதற்காகவே உன்னை அழைத்தேன்!"

✉ ✍

* நியூசிலாந்திடம் டெஸ்ட்டில் இலங்கை அணி படுதோல்வி கண்டது ஏன்?

பி.ஜெயராமன், கொழும்பு-09.

போதிய அனுபவமின்மை. டெஸ்ட் போலவும் விளையாடாமல், ஒருநாள் போட்டி போலவும் ஆடாமல் குதப்பிவிட்டார்கள். என்றாலும் ஒருநாள் போட்டியில் அதே பழைய ஜெயசூரியா! அடடா... நாலு சிக்ஸர்... நாலு பவுண்டரிகள் சுளையாக 79! அடித்தாடினால் தான் ஆனந்தமே!

✉ ✍

* சரத்-நக்மா காதல் உண்மைதானா?

எஸ்.குகன், கொழும்பு-13

பின்னே பொய்யா?! 'குமுதம்' சஞ்சிகை சரத்திடம் நேரடியாகக் கேட்டுவிட்டது. நச், நச் என்று குத்தாமல், சுற்றிவளைத்து ஏதோ சொதப்பி பதில் சொல்லாமல் நழுவியிருக்கிறார் சரத். ஆக, ஒன்றும் ஒன்றும் ரெண்டு. நக்மா சரத்தின் கண்ணு.

✉ ✍





படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 76

இராமபிரானும் இளைய பெருமாளாகிய இலக்குவனும் சுக்கிரீவனும் ஏனைய வானர தானைத் தலைவர்களும் அனுமன் கூறிய வார்த்தைகளினால் மன மகிழ்ந்திருக்கும் வேளையில் அவ்விடம் வந்த ததிமுகன் பதற்றமடைந்தவனாகக் காணப் பட்டான். அவனுடைய தோற்றத்தைக் கண்ட வானர வேந்தன் சுக்கிரீவனே ஓரளவு கலக்கமடைந்தான். சுக்கிரீவனின் மாமன் ததிமுகன். வயதில் முதியவனாகி விட்டமையினால் கிட்கிந்தைக்குச் சொந்தமான ஒரு பெரும் சோலைக்கு ததிமுகனை சுக்கிரீவன் பாதுகாவலனாக நியமித்திருந்தான். சோலையின் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்று இது காலவரை எக்காலத்திலும் எத்தகைய

## தென் திசை நோக்கி திரண்டது படை

முறைப்பாடுமில்லாமல் பணியாற்றி வந்த தனது மாமன் இன்று அவசர அவசரமாகத் தன்முன் வந்து பதறுவதைக் கண்ட சுக்கிரீவன் ததிமுகனிடம் விசாரித்தான்.

ததிமுகன் பதறியடித்துக்கொண்டு ஓடி வந்தமைக்கான காரணத்தைக் கேட்டதும் ஆஞ்சநேயருக்குப் பொறுக்கவில்லை. தன்னையே மறந்து வாய்விட்டுச் சிரிக்கலானார். தனது மன்னர் முன்னாலும், தனது தெய்வத்துக்குச் சமமான இராமபிரான் முன்னிலையிலும் இவ்வாறு வாய்விட்டுச் சிரித்துவிட்டோமே என்று ஒருகணம் தயங்கினார். பின்னர் வாயைப் பொத்திக்கொண்டு மன்னிப்புக் கோரினார்.

ததிமுகன் கூறியது இதுதான்: சோலைக்குள் ஏராளமான வானரங்கள் புகுந்து அங்கிருந்த செடிகொடிகள் எல்லாவற்றையும் பிய்த்தெறிந்து, பழுத்துப் பதமாக இருந்த பழங்களையெல்லாம் பறித்து உண்டும் எறிந்தும் சோலையையே- சூறாவளி புகுந்த இடமாக்கிவிட்டன. குடம் குடமாகச் சேகரித்துப் பதப்படுத்தி வைத்திருந்த தேனைக்குடித்து, அதனால் மேலும் வெறி ஏறி எல்லாவற்றையும் சீரழித்துவிட்டன. தடுக்க முயன்ற காவலர்களையும் அந்த வானரங்கள் அடித்து உதைத்து இம்சைப் படுத்திவிட்டன. இவ்வாறு ததிமுகன் சொன்னார்.

அந்தச் சோலைக்குள் புகுந்தவர்கள்- அனுமன் மற்றும் அங்கதன் ஆகியோருடன் சீதாப்பிராட்டியாரைத் தேடி தென்திசை சென்ற வானரவீரர்கள்தான். அனுமன் இலங்கை நகருக்கு வான்வழி சென்று திரும்பி வரும்வரை அவ்வீரர்கள் அனைவரும் விரதம் அனுஷ்டிப்பவர்களைப்போல் உண்ணாமல்,உறங்காமல் மகேந்திரமலையில் இருந்தனர். அனுமன் அவர்களிடம் வந்து, தான் சீதாப்பிராட்டியாரைக் கண்டுவந்துவிட்டதாகக் கூறியதும் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தனர். அனுமனை முன்செல்லவிட்டு, சற்றுத் தாமதித்து கிட்கிந்தை வந்த அந்த வீரர்கள் சோலைக்குள் புகுந்து பழங்களையெல்லாம் பறித்து உண்டனர். ஏராளமான தேனையும் குடித்தனர். தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேறு வழி அவர்களுக்குத் தோன்றவில்லை. இடையில் அகப்பட்ட சோலை வனத்தைத் துவம்சம் செய்தனர்.

ததிமுகன் அருகே சென்ற அனுமன், அவனுடைய காதில் மட்டும் கேட்கக்கூடிய வாறு நடந்தவற்றுக்குத் தானே மன்னிப்புக் கேட்டதுடன் அத்தகைய செயலில் ஈடுபட்டவர்கள், வேண்டுமென்றே, எவரையும் புண்படுத்தும் நிலையில் எதையும் செய்யவில்லை என்பதை எடுத்துரைத்தார். பின்னர் ஏனையோருக்கும் உண்மையை எடுத்துரைத்தார். சுக்கிரீவன் ததிமுகனைச் சமாதானப்படுத்தி அனுப்பிவைத்தான்.

### பங்குனி உத்திரம்

அடுத்தநாள் பங்குனி உத்திர நட்சத்திரம் கூடுவதான முகூர்த்தத்திலேயே படை நடத்துவது என்று தீர்மானித்தனர். சற்றுநேரத்தில் அங்கதனும் ஜாம்பவனும் ஏனைய வானர வீரர்களும் வந்த சேர்ந்துகொண்டனர். உரிய முகூர்த்தம் வரும்வரை அனைத்து வீரர்களையும் ஓய்வாக இருக்கும்படி சுக்கிரீவன் கட்டளையிட்டான். அதன்பின்னர், இலங்கை நகரின் அமைப்பு, அங்குள்ள பாதுகாப்பு முதலிய சகல அம்சங்களையும் இராம-இலட்சுமணர், சுக்கிரீவன் மற்றும் தளபதிகள் ஆகியோருக்கும் ஆஞ்சநேயர் விரிவாக எடுத்து விளக்கினார்.

### இலங்காபுரியின் சிறப்புக்கள்

இலங்கை வாழ் அசுர மக்கள் எக்குறையுமில்லாமல் சகல செல்வங்களையும் பெற்று வாழ்கின்றனர். பகைவர்கள் எவரும் சுலபமாக நுழைந்துவிடாதபடி அந்நாடு முதலில் சமுத்திரத்தாலும், பிரதான நகரம் அகழிகளாலும் சூழப்பட்டுள்ளது. இயற்கை மலைகள் கோட்டைகளைத் தொட்டு நிற்கின்றன. கோட்டைகளில் காவல்கள் பலமாக்கப்பட்டுள்ளன. அகழிகளின் மேல் நான்கு திக்குகளுக்கும் தூக்குப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பகைவர்கள் நெருங்கி வரும்போது இப்பாலங்கள் மேலே தூக்கப்பட்டு, அவையே கோட்டைகளின் வாயிற்கதவுகளாகி விடுகின்றன. கோட்டை மதில்களின் மேல் கல்லெறி கவண்களும் வேறு இயந்திரப் பொறிகளும் காணப்படுகின்றன. அசுரவீரர்களும் நன்கு பயிற்சிபெற்று எத்தகைய யுத்தத்தில் இறங்கவும் எந்நேரமும் ஆயத்தமாகவே இருக்கின்றனர்.

இத்தகைய விபரங்களை அனுமன் விரிவாக எடுத்துரைத்தார்.

○●○

யுத்த காண்டத்தின் தொடக்கத்தை கம்பர் பெருமான் கடவுள் வாழ்த்துப்பாவுடன் ஆரம்பிக்கிறார்:

ஒன்றே என்னின் ஒன்றேயாம்
பல என்று உரைக்கின் பலவேயாம்
அன்றே என்னின் அன்றேயாம்
ஆமே என்னின் ஆமேயாம்
இன்றே என்னின் இன்றேயாம்
உளது என்று உரைக்கின் உளதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கு இங்கு என்னோ பிழைப்பு அம்மா!

இந்தச் செய்யுளுக்கு இதுதான் பொருள் என்று கூற வேண்டியிருக்காது. அவ்வளவு அற்புதமான வார்த்தைகளைத் தொகுத்து சிறு பிள்ளைகளும் சுலபமாக விளங்கிக் கொள்ளக் கூடியவாறு கவிச்சக்கரவர்த்தி பாமாலையாகத் தந்திருக்கிறார்.

✪★✧


பங்குனி உத்திரத்தின் மதிய வேளையில் வானரசேனை கிட்கிந்தையிலிருந்து அணி வகுத்துப் புறப்பட்டது. ஏற்கனவே அந்தப் பகுதியில் நல்ல பரிச்சயமுடைய வானர வீரர்களான நீலன், குமுதன் ஆகியோர் முன்னால் வழி காட்டிக் கொண்டு சென்றனர். படை அணிகளின் இடையே இராம-இலட்சுமணன், சுக்கிரீவன் ஆகியோர் சென்றனர். இடையிடையே இராமரையும் இலக்குவனையும் உறுதிவாய்ந்த வானர வீரர்கள் தங்கள் தோள்களில் சுமந்து கொண்டு சென்றனர்.

வானர வீரர்கள் உணவாகக் கொள்ளும் காய், கனி, கிழங்கு வகைகள் வழியில் போதுமான அளவு கிடைத்தன. நல்ல நீர் நிலைகளை ஒட்டி விடுதிகளை அமைத்து இரவுப் பொழுதுகளைக் கழித்தனர். காலையில் கதிரவன் தோன்றும் முன்னரே துயிலெழுந்து நடந்தார்கள்.

வானரர்கள் என்றால் அவர்களைக் கட்டுப்படுத்துவது மிகக் கடினம். ஆனால் இராமபிரானுடைய கருத்தை அறிந்த சுக்கிரீவன் தனது படைகளுக்கு மிகக் கண்டிப்பான கட்டளைகள் பிறப்பித்திருந்தான். படைகள் மிக உற்சாகமாக ஆடிப்பாடி நடந்தனர். செல்லும் பாதையிலுள்ள எந்தக் கிராமத்திலும் மனிதர்களுக்கோ பிராணிகளுக்கோ எத்தீங்கும் செய்யக்கூடாது என்று கட்டளையிடப்பட்டிருந்தமையினால் நிதானம் தவறாமல் அவர்கள் சென்றனர்.

ஆஞ்சநேயர், அங்கதன், மற்றும் ஜாம்பவன் ஆகியோர் தலைமையில் பிரதான அணிகள் சென்றன. காடு, மலை, வனாந்தரம் எல்லாவற்றையும் கடந்து-புறப்பட்டு பன்னிரண்டாவது நாள் பகலில் தென்கடற்கரையை வந்தடைந்தனர்.

கடற்கரையில் பரந்த மணற்பரப்பில் படை அணியினர் அமர்ந்திருக்க மகேந்திர மலை உச்சிக்கு இராமபிரான், இலக்குவன் மற்றும் சுக்கிரீவன் ஆகியோரை ஆஞ்சநேயர் அழைத்துச் சென்றார். தென் திசையில் கண்ணுக்கெட்டிய தூரம் நீலக்கடல் பரந்து விரிந்து கிடப்பதை அனுமன் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். இலங்கை சரியாக எந்தக் கோணத்தில் இருக்கிறது என்பதனையும் காட்டினார்.




### இராமபிரான் புலம்பல்

இராமபிரான் கடலரசனுக்கு வணக்கம் செலுத்திப் பிரார்த்தித்தார். பிரார்த்தனை முடிந்ததும் சீதாப்பிராட்டியாரின் நினைவலைகள் அவர் அகத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. 'ஜானகி இருக்குமிடத்தை மிக நெருக்கமாக வந்தடைந்துவிட்டோம். இதனை அறிந்தால் ஜானகி எவ்வளவு மகிழ்ச்சியடைவாள்,' என்று எண்ணினார். தம்பி இலக்குமணனிடமும் இதனைக் கூறினார். மனதில் ஒரு புறம் ஆறுதல் ஏற்பட்டாலும் பிராட்டியாரின் எண்ணம் வந்ததும், 'உடனடியாகவே ஜானகியைக் காணமாட்டோமா?' என்ற ஏக்கமும் அவரைத் தொட்டது. இலக்குமணனை அணைத்த வண்ணம், "தம்பி! அன்போடும் ஆசையோடும் பாதுகாத்து வைத்திருக்கும் ஒரு பொருளை இழந்துவிட்டால், கொஞ்சக் காலம் அதனை நினைந்து வருந்துவார்கள். காலம் செல்லச் செல்ல அப்பொருளின் மீதான எண்ணம் மெல்ல மெல்ல மறைந்து விடும். ஆனால் சீதையின் மீதான எண்ணம் காலம் கடந்து செல்லும் போது மிகமிக வேகமாக அன்றோ என்னைக் கவ்வி, கடும் வேதனையில் ஆழ்த்துகிறது. ஜனகமாமன்னரின் மகளாகப் பிறந்து, தசரதச் சக்கரவர்த்தியின் மருமகளாக வாழ்க்கைப் பட்டு, அவள் என்ன சுகத்தைக் கண்டாள்? என்னைக் கைப்பிடித்த அவள் கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதையில் தான் நடந்தாள். அரச போகமும் அரண்மனை வாசமும் பெற வேண்டிய அவள் ஆரண்யத்தில் அலைந்தாள். இறுதியில் கொடிய அரக்கர்களின் கையில் சிக்கி அல்லல்பட நேரிட்டதை எண்ணும்போது என் உடலெல்லாம் தீபற்றி எரிவது போல் இருக்கிறதே!" என்று புலம்பலானார்.

இதனைக் கேட்ட இலக்குவன், தன் அண்ணனின் பாதங்களைத் தடவிய வண்ணம், "அண்ணா! மற்றவர்கள் துயரடையும் போது அதனைப் போக்க ஆறுதல் கூறுவோம். அந்நிலையிலுள்ள நாமே இவ்வாறு கலங்கலாமா? நம்மிடம் சோர்வு கண்டால் நம்முடன் வந்துள்ள படைவீரர்கள் யாவரும் மனம் பேதலித்து விடுவார்கள். ஆகவே கவலையை விட்டு இக்கடலைக் கடப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிவோம்," என்று கூறித் தேற்றினான்.

(தொடர்ந்து வரும்)

**இராஜகுமாரன்**

---

### இராமாயணப் போட்டி: 74

**சரியானவிடை:- பாலைவனத்தில் ஒரு சோலைவனம்**

1. திருமதி ராணி பர்னாந்து, 128/8, காசல் ஹில் வீதி, கண்டி.
2. செல்வி ஆர். நாகரட்ணம், 30, 2ஆம், வட்டாரம், களுதாவளை, மாத்தளை.
3. டி.பி. இரத்தினவேல், 65, பள்ளேவளை, கம்பளை.
4. செல்வி ஜீவிதா சிவஞானம், 43/1, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.
5. அருமைத்துரை பரமேஸ்வரன், இல.20,புனித அந்தோனியார் மாவத்தை, கொழும்பு-13.

**போட்டி இல. 76** கேள்வி:- கிட்கிந்தைக்குரிய சோலை வனத்தின் காவலன் யார்?

ஏப்ரல் 05 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி-இல.76, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

---

# புதிய அகராதி



**தயாரிப்பு: காதிலை பூ கந்தசாமி**

## அரசியல் அகராதி

**ஜனநாயகம்** : ஆட்சியில் இருப்பவர்கள் பிடிப்பதற்கேற்ப பிள்ளையாராகவோ குரங்காகவோ மாறக்கூடியது.

**பத்திரிகைச் சுதந்திரம்** : பதவியில் இருப்பவர்களுக்கு கசப்பானது. பதவிக்கு வர நினைப்போருக்கு இனிப்பானது.

**வன்முறை** : கத்திக் கத்தி குரல் கம்மிப்போனவர்கள் கத்தி, வாள், குண்டாந்தடி, மற்றும் துப்பாக்கிகளால் பேசிக்கொள்வது. கண்டித்தபடியே கண்டிப்பவர்களும் பயன்படுத்துவது.

**தேர்தல்** : ஏமாற்றுவதில் வல்ல சிலரை, ஏமாறுவதில் வல்ல பலர் சேர்ந்து தெரிவு செய்யும் முறை!



**வாக்குரிமை** : காதிலே பொய் புகட்டப்படும். கைவிரலிலே மை பூசப்படும்.

**தேர்தல் பிரசாரம்** : கையிலே மைக் வாயிலே பொய்.

**மேடைப்பேச்சாளர்** : பொய்யை மெய் என்று கூவி விற்கும் நாவணிகர்.

**கட்சி** : தலைவருக்காக தலைவரால், அல்லது தலைவரின் வாரிசுகள், மற்றும் உறவினர்கள், நண்பர்களால் ஏக உரிமையுடன் நடத்தப் படும் நிறுவனம்.

**தலைவர்** : கட்சியின் மொத்த உரிமையாளர்,

**தொண்டர்கள்** : இட்ட பணியை மட்டும் செய்யும் பணியாளர்கள்.

**உட்கட்சி ஜனநாயகம்** : தலைவர்களுக்கு பிடித்தமான விஷயங்களை மட்டும் பேசுவதற்கு தொண்டர்களுக்கு உள்ள உரிமை.

**கருத்தறிதல்** : அடுத்தவரை ஆழம்பார்த்தல்.

**ஜனநாயக முடிவு** : முன்கூட்டியே தலைவர் மனதில் செய்யப்பட்ட தீர்மானம்.

**புகழாரம்** : ஜால்ராக்களின் பிறபாட்டு.

**அபிப்பிராயம் கூறல்** : தலைவர்களுக்கு ஜால்ராக்கள் வைக்கும் சூப்பர் ஐஸ்.

**பட்டம் வழங்கள்** : காரியம் கைகூட அரசியல்வாதிகளுக்கு அதிபுத்திசாலிகள் கொடுக்கும் அல்வா. இலஞ்சத்தில் ஒருவகை என்றும் இதனைக் கூறலாம்.

**விமர்சனம்** : தம்மால் முடியாத காரியங்களை பிறர் செய்யும்போது பொறுக்க முடியாத வயிற்றெரிச்சல்! பொறாமையின் இன்னொரு பெயர்.

**இலஞ்சம்** : அரசியல்வாதிகள், அதிகாரிகள் போன்றோருக்கு உற்சாக வஸ்தாகப் பயன்படுவது. 'அன்பளிப்பு' என்றும், 'கட்சி நிதி' என்றும் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

**வஞ்சம்** : போட்டி அரசியல்வாதிகளின் புன்னகையில் இருப்பது.

**விசாரணைக் கமிஷன்** : பிரச்சனையை ஆறப்போடுவது. பிடிக்காதவர்களை தூற்றப் போடுவது.

**தீர்வுப் பொதி** : கண்ணுக்கும் தெரியாத கைக்கும் எட்டாத ஒரு மாய வஸ்து.

## காதல் அகராதி

**காதல்** : திரைப்படக்கதை, சிறுகதை, நாவல் ஆகியவற்றுக்கான கதை வங்கி. அட்சய பாத்திரம்.

**காதலி** : காதலனால் நிழல்போலத் தொடரப்படுபவள்.

**காதலன்** : கொஞ்சம் பொய்-கொஞ்சம் அசட்டுத்தனம் கலந்த மனித சீவன்.

**பெற்றோர்** : காதலர்களால் வில்லர்கள் என்ற அந்தஸ்த்துப் பெறுபவர்கள்.

**லைசன்ஸ்** : பெற்றோர் அனுமதியுடன் காதலிப்பது.

**சைலன்ஸ்** : பெற்றோருக்குத் தெரியாமல் காதலிப்பது.

**உடான்ஸ்** : காதலனோ காதலியோ அவ்வப்போது அவிழ்த்துவிடும் பொய்கள்.

**சுழற்றுதல்** : காதலித்தல்.

**சைட் அடித்தல்** : காதலித்தல்

**பிகர்** : அழகான பெண்களுக்கு மாணவர்களால் சூட்டப்பட்ட செல்லமான பொதுப்பெயர்.

**ரோட்டோர ரோமியோக்கள்**: வேலை இல்லாத் திண்டாட்டத்தால் ரோட்டோரங்களில் காய்ந்தபடி, கண்ணுக்கு குளிர்ச்சி தேடும் ஆடவர்கள்.

**ஜொள்ளு** : ஒரு பாலார் மறுபாலாரைக் கண்டதும் ஏற்படும் இராசயன மாற்றத்தால் உதட்டில் ஏற்படும் ஈரப்பதன்.

**லொள்ளு** : அசட்டுத்தனமாக உளறுதல். இதுவும் இருபாலாருக்கும் உரிய செயல்களில் ஒன்று.

**கலர்பார்ப்பது** : ரோமியோக்களின் தொழில்.

**அப்ளிக்கேஷன்** : 'ஐ லவ் யூ' சொல்ல முன் அனுமதி.

**நோ வேக்கன்ஷி** : காதலிக்க விண்ணப்பிக்கப்படும் ஒருவரின் இதயத்தில் முன்கூட்டியே இன்னொருவர் குந்தியிருக்கிறார் என்று அர்த்தம்.

**ஒரம் கட்டுதல்** : காதலன் காதலியை தனியாக அழைத்துச் செல்வது. சமயத்தில் காதலியும் காதலனை ஓரம் கட்டலாம்.

**ரின் கட்டுதல்** : தர்ம அடி வாங்கத் தயாராக இருத்தல்.

**செருப்பு** : பெண்களின் தற்காப்பு ஆயுதங்களில் ஒன்று. ஜொள்ளர்களின் விரோதி.



**அல்வா கொடுப்பது** : காதலனோ காதலியோ கிளைமாக்ஸ் கட்டத்தில் மற்றவரை ஏமாற்றி விடுதல்.

**அர்ச்சனை** : பெற்றோரின் புத்தி மதிகள்.

**பூசை** : காதலியின் அண்ணன் அல்லது தம்பியிடம் காதலன் வாங்கிக் கட்டுவது.

**தேவதாஸ்** : காதல் தோல்வியால் தாடிப்பயிர் வளர்த்து தண்ணியடிக்கும் காதலன்.

**நாயக வில்லன்** : காதலில் தோல்வி கண்ட பின்னர், காதலியைப் பழிவாங்க அலையோ அலையென்று அலையும் காதலன்.

**வில்லி நாயகி** : மேலே சொன்னதை திருப்பிப் போட்டுக் கொள்க.

**பூங்கா கடற்கரை** : காதலர்களின் புனித ஸ்தலங்கள்.

**தியேட்டர்** : காதலர்களுக்கு அமர்ந்து காதலிக்க நாற்காலி கொடுத்து கௌரவிக்கும் இடம்.

**நண்பர்கள், நண்பிகள்** : தூதுவர்கள்

**பவர் கட்** : காதலி சிரிக்காமல் இருப்பது.

**வோட்டர் கட்** : அழுதுகொண்டிருக்கும் காதலி சட்டென்று அழுகையை நிறுத்தல்.

**றூட் கிளியர்** : காதலு க்கு தடையில்லாத நிலை அவ்வாறு அழைக்கப்படும்.

**பச்சைக் கொடி** : காதலுக்கு பெற்றோரின் அனுமதி.

இதுபோல நாட்டுக்கு ரொம்ப அவசியமான மேலதிக விபரங்களுக்கு
காதிலை பூ கலைக்கல்லூரி
ஏமாந்தபுரம்.




படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)
www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
5 8 0 2 3 0
பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# முத்தில்லாச் சிப்பி




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
3 2 3 6 5 7
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


'சிப்பி இருக்குது முத்தும் இருக்குது திறந்து பார்க்க நேரமில்லடி. ராஜாத்தி' அது சினிமாப் பாடல். இந்தச் சிப்பியை திறக்காமலே இருப்பதுதான் நல்லது. முத்திருக்கும் என்று திறப்பவர்கள் ஏமாந்து போவார்கள். இறந்துபோகவும் வாய்ப்பு உண்டு.

சிப்பி ரகத்தைச் சேர்ந்த இந்த உயிரினத்தின் பெயர்: 'முலாஸ்க்'. முள்ளந்தண்டில்லாத உயிரினம். இதன் வாய் (உறுஞ்சும் பகுதி) தும்பிக்கைபோல காணப்படும். இதனைக் கொடுக்கு என்றும் கூறுவர்.

அந்தக் கொடுக்குதான் இதன் ஆயுதம். எதிரி நெருங்கினால் கொடுக்கினால் ஒரே குத்து. பயங்கர வலி ஏற்படும். குத்துப் பட்டவர்களில் ஐந்தில் ஒருவர் கட்டாயம் செத்துவிடுவர்.

இதன் உடம்பெல்லாம் நஞ்சுதான் இருக்கிறது. அதனால்தான் இதன் கொடுக்குப்பட்டால் மரணம் வருகிறது. பார்த்தால் படு சாதுபோல தெரிகிறதல்லவா. கண்ணால் காண்பதும் பொய்!

# தேவதை



அரங்கில் தோன்றி பல்லாயிரம் பார்வையாளர்கள் முன்பாக உடல் எழில் காட்டி முடி சூட்டிக் கொண்ட தேவதை. இப்போது இந்த் தேவதை வெள்ளித்திரை பக்கம் தன் கடைக்கண் திருப்பியிருக்கிறது. ஐஸ்வர்யாராயைத்தான் சொல்கிறோம். தமிழில் இருவர் படம் நெத்தியடியான தோல்வி. ஆனாலும் ஐஸ்வர்யாராய் ஏமாற்றவில்லை. வில்லாக வளையும் உடல். உதட்டில் ஈரம் சொட்டும் போதை. கச்சிதமான உடல் வளைவுகளை நயமாக ஆபாசமில்லாமல் வெளிப்படுத்தும் பாங்கு என்று கலக்கியிருந்தார். எல்லாம் மொடலிங் மூலமும், அழகுப் போட்டி பயிற்சி மூலமும் கற்றுக் கொண்டவை.

அருகே பாருங்கள். 'ஜீன்ஸ்' படத்திற்காக ஐஸ்வர்யாராயை இப்போதுதான் வானில் இருந்து பூமிக்கு விசிட் அடித்த புத்தம்புது தேவதை போல வேடமேற்றியுள்ளனர். இந்தியிலும் நடித்து வருகிறார். வெள்ளித்திரையில் முடிசூடா ராணியாவதுதான் தற்போதைய கனவு.




# பெரியது இது

நிலத்திற்கு இயற்கையான அழகான மேலாடை பச்சைப் பயிர்கள். செயற்கையான மேலாடை நில விரிப்புக்கள். வீடுகளுக்குள் தரையை அழகுபடுத்தவும் தரைவிரிப்புக்கள் போடப்படுவதுண்டு. அழகழகான, விதம் விதமான தரைவிரிப்புக்கள் பாவனையில் உள்ளன.

ஆனால் படத்தில் இருப்பதுதான் உலகிலேயே மிகப் பெரிய்யய்யய தரைவிரிப்பு. வர்ணக் கலரில் அழகாக செய்யப்பட்டது. விமானம் கூட தரை விரிப்பின் முன்பாக எத்தனை சிறிதாகத் தெரிகிறது பார்த்தீர்களா!

இதன் நீளம் 77.42 மீட்டர். (254 அடி). அகலம் 45.11 மீட்டர். (148 அடி) இதன் மொத்தப் பரப்பளவு 3492.4 சதுர மீட்டர். அதாவது 37 ஆயிரத்தி 592 சதுர அடி. இதன் விலை 20 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண்சுகள். நம்மூர் பெறுமதிப்படி 18 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்கள். இதன் எடை 1.5 தொன். இது ஒரு உலக சாதனை தரைவிரிப்பு.




23 வது பிறந்தநாள் வாழ்த்து 08-03-1997

செல்வன் கே.கே. திவாகரன் [சூர்யன்]

[Black Belt]

யாழ்ப்பாணம்- 60, அரசடி வீதியைச் சேர்ந்த குமாரவேலு- தேவி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வன் திவாகரன் தனது 23வது பிறந்தநாளை 08-03-1997 அன்று தனது லண்டனில் உள்ள இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, வாஜுலகத்தில் கலந்திருக்கும் பாசமிகு அண்ணா(பாபு), அன்பு அக்கா, அத்தான்(கனடா), பாசமிகு மருமகன் பிரவீன்(கனடா) மற்றும் இலங்கை, இந்திய, லண்டன் தோழர்கள், உற்றார் உறவினர்கள் அனைவரும் நல்லூர் கந்தனின் அருளும் நல்லாசியும் பெற்று, பண்பின் பிறப்பிடமாய் செல்வச் செழிப்புடன் சகல கலைகளும் பெற்று சுகநீவியாகப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

குமாரவேலு-திருகோணமலை.




# வயது நூறாச்சு

நீண்டதும் ஒளிர்வூட்டப்பட்டதுமான பாலம். இதன் பெயர்-ஃபோர்த் பிரிட்ஜ். 4ம் திகதி மார்ச் மாதம் 1890ம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. அதாவது 107 வருடங்களின் முன்பு.

இதன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட ஸ்கொட்லாந்து அரச ஆயிரம் சோடியம் மின்குமிழ்களைத் தயாரித்துப் பாலத்தை அலங்கரித்தது. இதன் பிரகாசம் வழமையான மின்குமிழ்களைவிட அதிகம். 1 1/3 மைல்கள் நீளத்திற்கு நீண்டிருந்தது. சுமார் 10 வருடங்களுக்கு இந்த சோடியம் பல்புகள் பிரகாசமாக எரிந்து கொண்டிருக்குமாம். இதுதான் உலகிலேயே மின்குமிழ்களால் ஒளிரவிடப்பட்ட மிக நீண்ட பாலம் எனக் கின்னஸில் இடம்பிடித்திருக்கின்றது. நம் நாட்டில் இருக்கக் கூடிய சிறிய பாலங்களைக்கூட பாதுகாக்க முடியாமல் இருக்கிறது. வடக்கு-கிழக்கில் இருக்கும் பாலங்களைக்கூட போர் அடிக்கடி உடைத்துக் கொண்டிருக்கிறது. ம்.நம் காலம்தான்!


மட்டுநகரில்! 3வது முறையாக
பிரவேசம் இலவசம்
DCS வழங்கும் மாபெரும் கணனிக் கண்காட்சியில்
INTERNET, E.MAIL, MULTIMEDIA உட்பட கணனி உலகின் நவீன விடயங்களும் காட்சியில் உள்ளடக்கப்படும்.
DCS DATA CONNECTION SYSTEMS (PRIVATE) LIMITED
DCS (PVT) LTD
399 1/3, GALLE ROAD, COLOMBO-04
T.P- 597169
இடம் : சாள்ஸ் மண்டபம்
காலம் : மார்ச் 31-ஏப்ரல் 2வரை
நேரம் : 9மணி - மாலை 5மணி
DCS
NO. 62, BAR ROAD, BATTICALOA.




படிப்பகம்